
பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=


புதுமை : 01 | 04 பெப்ரவரி 2017 | விதி : 34

# "இன்னும் எவரெவர் கால்களில் விழ வேண்டுமோ?"





பொய்த்துப் போகும் காத்திருப்புகள்


ஒரு தீர்ப்பும் போராட்டமும்


உள்ளும் புறமும் இருந்து....


கோண்டாவில் இந்துக் கல்லூரி

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

சயந்தன்

இளைஞர்களில் ஒருவன் தேவ பாலுவின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து அழுத்தியபோது கண்கள் இருளத் தொடங்கின. தேவபாலுவின் குரல் நடுக்கமுற்றுக் கீச்சிட்டது.

"நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை... நான்..." என்று அவன் முடிக்க முன்பாகவே சத்தம் அதிர பிடரியைப் பிய்த்துக் கொண்டு, குண்டு பறந்தது. அவன் தேர் சரிவதைப் போல பின்புறமாக விழுந்தான். திறந்து கிடந்த விழிகளில் திகைப்பு அடங்கியிருக்கவில்லை. மனைவி மூச்சுப் பேச்சின்றி சரிந்தாள். அவளது கண்கள் நெற்றிக்குள் ஏறிக் கிடந்தன. ஒரு கேவல் ஒலி மட்டும் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது. தேவபாலுவின் குழந்தை அவனது தலைக்கு அருகில் உட்கார்ந்து, இரத்ததில் கைகளை அளைந்து விளையாடியது. பிறகு... "ப்பா... ப்பா..." என்று அவனது கன்னத்தில் தட்டியது. சற்று நேரத்தில் வீறிட்டுக் கத்தத் தொடங்கியது.

தேவபாலுவின் சாவு இவனைக் கலங்கடித்திருந்தது. இந்தியப் படைகள் வெளியேறும் நாள் நெருங்க சாவு வாயைப் பிளந்தபடி இவனை நோக்கி விரைவதைப் போலவே இருந்தது. சுழிபுரத்தில் இந்திய இராணுவ முகாம் ஒன்றுக்குள் இவனும் மற்றவர்களும் முடங்கிக் கிடந்தார்கள்.



# இளைஞன்

தொடர்கதை

34

தமிழ்த்தேசிய இராணுவத்தின் பொறுப்பாளர்களைக் கண்ணில் காணவில்லை. திடீரென்று அவர்கள் காணாமல் போயிருந்தார்கள். இராணு அதிகாரிகளிடம் விசாரித்த அளவில் தாம் சில தலைவர்களை இந்தியாவுக் அழைத்துச் செல்வதாகவும் சில முக்கி மானவர்களை கொழும்புக்கு அழைத் சென்று விடுவதாகவும் சொன்னார்கள்

"இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு என்ன செய்வது" என்பதைப் ப ி இவர்கள் தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி எல்லோரும் வீடுகளுக்கு கலைந்து செல்வதாகவும், பின்னர் ஊர்ப்பெரியவர்களான பாடசாலை ஆசிரியர்கள், கோயில் ஐயர்கள், சேர்ச் பாதிரிகள் போன்றோரின் துணையுடன் புலிகள் இயக்கத்தில் சரணடைவதாகவும், முடிவு எடுக்கப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகத்தில், இந்திய இராணுவம் மூட்டை முடிச்சுக் களோடு கப்பல் ஏறக் காத்திருந்த அன்றைக்கு இரவு, இவர்கள் வீடுகளுக்குப் போனார்கள். இவன் அம்மாவையும் தங்கச்சி மைதிலியையும் கட்டிப்பிடித்து அழுது தீர்த்தான். அம்மாவின் மடியில் சாய்ந்து அப்படியே நித்திரையாகிப் போனான். கண்ணயரும் நேரம் வரை அவள் தலைகோதியபடி இருந்தாள்.

விடியற்காலை வீட்டுக்கு வந்த புலிகள் இவனைக் கைது செய்தார்கள். அம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறத் தொடங்கினாள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அகன்ற, அடிபருத்த மரங்கள், விசாலமாக வளர்ந்து மேலே படர்ந்து கிளை பரப்பியிருந்தன. கிளைகளுக்கு ஊடாக வெளிச்சம் அங்கொன்றும், இங்கொன்றுமாக நிலத்தில் படிந்திருந்தது. இலைகள் அசைகிற போது உருவான மிருதுவான காற்று, ஒரு குழந்தையின் கால் பாதம் போல, உடலில் வருடியது, நல்ல குளிர்ச்சியாக இருந்தது.

தடித்த டெனிம் ஜீன்சும், மேலே தொள, தொள எனச் சட்டையும் அணிந்திருந்த பிரெஞ்சுப் பெண்மணி நிறைய வெள்ளைத்தாள்களைக் கையில் வைத்திருந்தார். அடிக்கொரு தடவை தன் மொழி பெயர்ப்பாளரிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார். செம்பட்டை நிறத்தில், கட்டையான தலைமயிர்களை உடைய வெளிறிய நீல நிறத்தில் அரைக்காற் சட்டையும், கசங்கிய ரீசேர்ட் ஒன்றும் அணிந்திருந்த பிரெஞ்சு இளைஞனிடம் கமெரா இருந்தது. அவன் கமெராவைக் கண்களில் பொருத்தியபடி வெளிச்சத்தை அளவிட்டுக் கொண்டிருந்தான்.

நான் ஒருவிதமான பதற்றத்தோடு நின்றிருந்தேன்.

மொழி பெயர்ப்பாளர் எல்லாவற்றையும் விளங்கப்படுத்தியிருந்தார். "இது ஒரு பேட்டி நிகழ்ச்சி இல்லை" என்றும் "ஆவணப்பட வகையைச் சேர்ந்தது" என்றும் அவர் சொன்னார். அதனால், "யாரும், அருகே இருந்து கேள்வி கேட்கப் போவதில்லை" என்று நான் நினைத்தது சரியாக இருந்தது.

பருத்த மரத்தின் அருகில் சாய்ந்தும் சாயாததுமாகிய ஒரு நிலையில் நின்று கொண்டேன். பிரெஞ்சுப் பெண்மணி கமெரா இளைஞனுக்குப் பக்கத்தின் நின்றுகொண்டாள். விரல்களை மடித்துப் பெருவிரலை மட்டும் உயர்த்தி 'தயாரா' என்பதைப் போல சைகை செய்தார். நான், 'சரி' என்பதைப் போல தலையசைத்தேன்.

'ஸ்ரார்ட்' கமெரா ஓடத்தொடங்கியது.

"எனது பெயர் அமுதன். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக புலிகள் அமைப்பில் இணைந்து போராடி வருகிறேன். நான் பல சண்டைகளில் பங்கேற்றுள்ளேன். அப்படியொரு சண்டை முல்லைத்தீவில் நடந்தபோது..."

பேசத் தொடங்கியபோது, உடல் விறைப்பதைப் போலத் தோன்றிற்று. கைகளை நேராக்கி விரல்களை இறுக்கி மூடிக்கொண்டேன். கண்களை அகல விரித்தபடி, கமெராவை நேராக நோக்கி, நான் பேசியபடி இருந்தேன்.

> பெண்மணி விரல்களால் நெற்றியை அழுத்தித் துடைத்து அப்படியே கண், மூக்கு, கன்னங்கள் என வழித்து இறக்கினாள். உதடுகளைச் சுழித்து தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தினார். இளைஞன் தோள்களில் இருந்து கமெராவை இறக்கி கைகளில் வைத்துக் கொண்டான்.

பெண்மணி விரல்களால் நெற்றியை அழுத்தித்துடைத்து, அப்படியே கண், மூக்கு, கன்னங்கள் என வழித்து இறக்கினாள். உதடுகளைச் சுழித்து, தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தினார். இளைஞன் தோள்களில் இருந்து கமெராவை இறக்கி கைகளில் வைத்துக் கொண்டான்.

மொழிபெயர்ப்பாளர் 'போதும்' என்பதைப்போல சைகை செய்தார். நான் இறுதி வார்த்தைகளை இழுத்தபடி நிறுத்தினேன். இப்படி இடையில் நிறுத்தினால், திரும்பவும் முதலே இருந்துதான் வரவேண்டியிருக்கும். மூடியிருந்த விரல்களை விரித்து, இலேசாக்கினேன். அப்பொழுது உடலும் இலேசானது போலத் தோன்றிற்று.

அவர்கள் "மேடையில் பேசுவதுபோல அல்லாமல், வெகு இயல்பாகப்பேசுங்கள்" என்றார்கள். நடந்து கொண்டு, சிரித்து கொண்டு, கமெராவைப் பார்க்காமல் ஒரு பக்கமாகப் பார்த்துக் கொண்டு பேச வேண்டுமாம்.

என்னவோ தெரியவில்லை. கமெரா ஓடத்தொடங்கினால் உடல் விறைத்து விடுகிறது. "அற்றென்சன் பொசிஷனுக்கு" வந்துவிடுகிறேன். முன்னர் யுத்தகள ஒளிப்பதிவுகளிலும், இவ்வாறாகத்தான் நடந்தது. "ஒப்ரேஷன் புலிப்பாய்ச்சல்" நடந்தபோது, ஒளிவீச்சுக்காக நான் பேசியிருந்தேன். பின்னால் சூட்டுச் சத்தங்கள் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்க, சில இடங்களில் எரிவு அடங்காமிலிருக்க, வியர்த்த முகத்தோடும், தோள்களில் சுமந்திருந்த துப்பாக்கியோடும் நான் பேசியிருந்தேன்.

"எதிரியானவன், எங்களது வாழ்நிலங்களை ஆக்கிரமித்து நின்ற நிலையில் அண்ணனின் வழிகாட்டலில் இன்றைக்கு இந்த சண்டையை நாங்கள் நடத்தியிருந்தோம். நூற்றுக்கணக்கில் எதிரிகளைக் கொன்று மீண்டும் நமது நிலங்களை நாம் மீட்டுள்ளோம். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

"அது மிகவும் நன்றாயிருந்தது" என்று அப்போது சொன்னார்கள். மைதிலியின் பள்ளிக்கூடத்தில் நடந்த பிரசாரமொன்றில் அந்த வீடியோவை ஒளி பரப்பியபோது, அவள் "அண்ணா" என்று கத்தினாளாம்.

மொழிபெயர்ப்பாளர் அருகில் வந்தார். தமிழ் இளைஞர். பிரான்சிலிருந்து அவரை அழைத்து வந்திருந்தார்கள். தாடியில் கோடுகளும், குறுக்கு வெட்டுக்களும் வைக்காமல் மழித்திருந்தார். நிறப்பூச்சுக்கள் அற்ற தலைமயிரை பக்க உச்சி பிரித்து வாரியிருந்தார்.

"நல்ல கலாசாரமான குடும்பமாக்கும்" என்று நினைத்துக் கொண்டேன். என்னை 'அண்ணா' என்று அழைத்தார்.

"அண்ணா, முதலில் சும்மா கதைப்பம் என்று கேட்கினம். இப்ப நீங்க என்னோட, உங்கட நண்பர்களோட கதைக்கிற மாதிரி அவையோடையும் கதைக்க வேணும்"

"அப்ப, நல்ல தமிழில கதைக்க வேண்டாமோ" என்று நான் கேட்டேன். இளைஞர் பதில் சொல்லாமல் பிரெஞ்சுப் பெண்மணியோடு பேசினார். அவர்களது வார்த்தைகள் வாயில் வழுக்கிக் கொண்டு போகுமாப் போல இருந்தன.

"உய்.... உய்..." என்ற சொற்கள் சிரிப்பை உண்டாக்கின.

"சற்றுப் பேசிப் பழகாலமென்று" அவர்கள் கேட்ட கேள்விகள் நீண்டவையாக இருந்தன. எழுதினால் இரண்டு மூன்று பத்திகளில் வரக்கூடும். எனது பதில் வெறும் ஒற்றை வரியில் முடிந்திருந்தது.

"பெண்போராளிகள் சண்டை செய்கிறார்கள், பெரிய மோட்டார் பீரங்கிகளை கட்டியிழுக்கிறார்கள். தற்கொலைப் படையாகவும் இருக்கிறார்கள். ஆனால் இதெல்லாம் இயக்கத்தில் இருக்கும் வரை தான் நடக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. நாங்கள் கேள்விப்பட்ட அளவில், இயக்கத்தில் இருந்து பிறகு வெளியேறி திருமணம் செய்த பெண் போராளிகள் கூட திரும்பவும், உங்களது தமிழ்ச் சமூக வழக்கத்தின் படிதானே வாழ வேண்டியுள்ளது.

இன்னும் சொன்னால், திருமணத்துக்குப் பிறகு தங்களது கணவர்களிடம் அடிவாங்குகிற முன்னாள் பெண் போராளிகளைக் கூட நாங்கள் சந்தித்திருக்கிறோம்.

பரந்துபட்ட சமூக நோக்கத்தில் ஏன் இந்த விடயத்தில் உங்களால் ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்த முடியவில்லை. பெண் விடுதலையை அனுபவிக்க வேண்டுமென்றால் இயக்கத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதா?..."

(வலிகள் இன்னும்...)

# இன்னும் எவரெவர் கால்களில் விழ வேண்டுமோ?




கிரிஷாந்

முன்னெப்போதுமில்லாத. அளவு, சமூக வலைத்தளவாசிகளும், மக்களும், ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு முன்வர ஆரம்பித்திருக்கின்றனர். அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் உண்ணாவிரதத்தில் இரண்டாவது நாள் மதியத்திலிருந்து அது முடியும் இறுதித் தருணம் வரை அந்த போராட்டப் பந்தலையே சுற்றிக் கொண்டிருந்தேன். இரவில் அந்த உண்ணாவிரதிகளுடன் உரையாடுவதும், பகலில் வரும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்களின் எண்ண வோட்டங்களையும் பார்த்துக் கொண்டிருப்பதுமாக மூன்று பகல் மூன்று இரவு அங்கு தான். மக்களின் போராடும் உரிமையை நான் மதிக்கிறேன். ஆனால் எல்லாப் போராட்டங்களும் அரசியலுள்ளதே. சிலரது கட்சிசார் அரசியல் கொண்டது. சிலது வெகுஜன அரசியலைக் கொண்டது.

ஆகவே, இந்தப் போராட்டத்தின் சாதக பாதகங்களையும், விமர்சனங்களையும், அலசுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## முதலில் சாதகமான விடயங்கள் பற்றி...

மக்கள் நீதிகோரி, தெருவிலிறங்கி, ஒரு உச்ச கட்ட அழுத்தத்தை வழங்கக் கூடிய போராட்ட வடிவத்தை தீர்மானித்ததை, முக்கியமான ஒரு விடயமாக பார்க்கிறேன். நமது நிலத்திற்கு, இதுவொரு நீண்ட தொடர்ச்சியுடைய மரபே. திலீபன் அதன் உச்சம். ஆனால், அதன் பிறகு நம் வரலாற்றின் பக்கங்கள் அதிகமும் அடையாள உண்ணா விரதங்களாகவே நிரம்பி வழிந்தனது.

சமீப வரலாற்றில், சில சாகும் வரையான உண்ணாவிரதங்கள் அறிவிக்கப்பட்டு, செய்யப்பட்ட போதும், அனைத்துமே ஏதோ ஒரு வாக்குறுதியுடன் முடிவுக்கு வந்தவையே. அது ஒரு ஜனநாயக வளர்ச்சியின் கட்டம், இந்தியாவில் இடம் பெற்ற போராட்டக் களங்களைக் காந்தி பயன்படுத்தியது அவ்வாறு தான். அவரது போராட்டங்களில் வளர்ச்சியுண்டு. அவர் உடலைக் கொண்டு மேலாதிக்கத்தின் "தார்மீக நோக்கம்" என்ற பொய்ப் பிரசாரத்தை நிர்ப்பந்தித்தார். வேறு வழியின்றி ஏதாவதொரு நிலையினை அல்லது தீர்வினை முன்வைக்க அவர்களை இறங்கிவரச் செய்தார்.

அது தான் அவரது அரசியல். அவர் இறுதிவரை அதனை வளர்த்தெடுத்து, உலகில் புதியதொரு போராட்ட அணுகு முறையை அரசியல் ரீதியில் திறந்தார்.

அந்த அடிப்படையில் "தார்மீக நோக்குடன் இயங்குகிறோம்" என்று மார் தட்டிக் கொள்ளும் அரசுகளை நோக்கி, மக்கள் தமது உடலை ஆயுதமாக பயன்படுத்துவது அரசை ஒரு நிர்ப்பந்தத்தின் முன் இறங்கி வரச் செய்வதே.

இரண்டாவது சாதகமான விடயம், இன்றுள்ள சமூகவலைத்தளத்தில் இயங்கும் இளைஞர்கள் மேல் உள்ள விமர்சனமென்பது மாறிவரத் தொடங்கியிருக்கிறது. அண்மையில், மெரீனாவில் இடம் பெற்ற ஜல்லிக்கட்டுக்கான இளைஞர் எழுச்சியென்பது, பெரியளவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வளவு காலமும் முகநூலில் சோகப் பதிவு போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போனவர்களில் பெரும்பாலானவர்கள், ஜல்லிக்கட்டுக்காக நாடு தழுவிய ரீதியில் பல கவனயீர்ப்புக்களை மேற்கொண்டனர்.



அதன் பிறகு, சமூக வலைத்தளங்களில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. "இவர்கள் இங்கிருக்கும் பிரச்சினைகளுக்கு இப்படி ஒன்று கூடுவார்களா?" என்பது அவர்கள் உள ரீதியாக எதிர் கொண்ட தார்மீக ரீதியான கேள்வி.

அதனைப் பரிசோதிக்கும் களமாக, அடுத்தடுத்த நாட்களிலேயே வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்தது. அவர்களின் நேர்மை மீதும், தார்மீகத்தின் மீதும், அதுவொரு தாக்குதலை நிகழ்த்தியது. அவர்கள் மக்களுடன் நின்றார்கள். மக்களின் குரலாக மாறினார்கள். பெருமளவில் இல்லையெனினும் சில நூறு பேராவது மக்களுக்காக வந்து நிற்பது மிக நல்ல அறிகுறியே.

* * * * * * *



## இனிப்பாதகமான விடயங்கள்

ஆரம்பித்திலிருந்தே "இந்தப் போராட்டம் சில அரசியல்வாதிகளின் தூண்டுதலால் ஆரம்பிக்கப்பட்டது" என்ற சலசலப்பு இருந்தது. அதனால், முதல் நாட்களில் இளைஞர்களை சந்தேகத்துடனேயே இந்தப் போராட்டத்தை அணுக வைத்தது. ஏனெனில், உண்ணாவிரதத்தில் பிரதானமாக இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் வயதானவர்கள், சிலரே மத்திய வயத்தைச் சேர்ந்தவர்கள். மத்தியவயதைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் முடி வெடுப்பவர்களாகவும், மற்றவர்கள் அப்பாவிகளாகவுமே இருந்தார்கள். அதில் மூன்று பேருக்கு சிவசக்தி ஆனந்தனுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாக பலர் கூறுகின்றனர். இதை உறுதி செய்வது போல போராட்டத்துக்கு தலைமையேற்ற சிலர் அடிக்கடி "ஆனந்தன் அண்ணையோட கதைச்சுத்தான் செய்யிறம். அவைதான் எங்களுக்கு ஆதரவு" என்று மந்திரம் போல உச்சாடனம் செய்து கொண்டிருந்தார்கள். போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த ராஜா என்பவர், சிவசக்தி ஆனந்தன் எம்.பியின் அதிதீவிர விசுவாசியாக அறியப்பட்டவர்.

போராட்டத்தை முடிப்பது பற்றிய தீர்மானத்தை இவரே எடுத்திருந்தார். அந்தத் தீர்மானத்தை மற்றவர்கள் ஏற்கச் செய்வதிலும் மும்முரமாகச் செயற்பட்டார். வடமாகாண சபை உறுப்பினர் மயூரனும் உண்ணாவிரதப் பந்தலைக் கண்காணித்தபடி வளைய வந்து கொண்டிருந்தார். இவரும் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவரே. எனவே, இந்தப் போராட்டத்தை பிசுபிசுக்கச் செய்ததில் "சிவசக்தி ஆனந்த எம்.பியின் கரங்கள் இருந்தது" என்று சொல்லப்படுவதை மறுக்க முடியவில்லை.

இருந்தும் இந்தப் போராட்டத்திற்கான ஆதரவை வேறு ஒரு வகையிலேயே முடிவெடுத்தேன். அதன் ஏற்பாட்டாளர்களுக்கொரு குழு இருந்தது. அதில் சமூகமட்ட அமைப்புகளும் இடம் பெறுவதால், அதற்கு வேறொரு பரிமாணம் கிடைத்தது.

மேலும், இத்தகைய போராட்டங்களை மேற்கொள்வதற்கு, அரசியல் ரீதியிலானதோ அல்லது அமைப்பு ரீதியிலானதோ பலங்கள் இல்லையென்றால் ஆபத்து அதிகம். ஆகவே ஒரு பாதுகாப்பிற்காக அவர்கள் அப்படியானவர்களை அணுகி சில உதவிகளை எடுத்திருக்க வாய்ப்பும் இருந்தது. ஆனால் அவர்கள் உண்ணா விரத இறுதியில் எடுத்த முடிவு அந்த நம்பிக்கையை குலைப்பதாகவே உள்ளது.

ஆகவே, இதன் பின்னாலுள்ள, மற்றும் உள்ளோடும் ஒரு சிலரின் அரசியல் பின்புலம் இந்தப் போராட்டத்தின் முடிவின் மீது ஒருவகை நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகிறது.

இரண்டாவது நாளிற்குப் பின் ஏற்பட்ட சமூகக் கவனமும், இளைஞர்களின் வருகையும், ஒருசிலரை அச்சமூட்டுவதாகவும், அவர்களின் நிகழ்ச்சி நிரலை மாற்றுவதாகவும், இருக்கும் வாய்ப்பு அதிகரித்ததால், "இது வேளைக்கு முடிவுக்கு வந்திருக்கலாம்" என்றும் எண்ணத் தோன்றுகிறது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டம்



மெரீனாப் புரட்சி முடிந்த சூட்டோடு சூடாக, இலங்கையிலும் ஒரு அகிம்சை ரீதியான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சிலர் வவுனியாவில் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிக்க, இணைய வாசிகள் முஷ்டிகளை முறுக்கிக் கொண்டு 'கீபோர்ட்டில்' களமாடத் தொடங்கினர். "ஜல்லிக்கட்டுக்காக வீதியில் இறங்கிப் போராட வந்தவர்கள் காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்காகவும் போராடப் போவார்களா?" என்ற தன்மானக் கேள்வி இணைய வெளியெங்கும் வைரலாக, தங்கள் நெஞ்சுரத்தையும், நேர்மைத் திறத்தையும் நிரூபிக்க வேண்டிய அக்கினிப் பிரவேசமாக கருதி, வவுனியாவுக்கு நேரடியாகச் சென்று சிலர் கலந்து கொண்டார்கள். அங்கிருந்தவாறே ஏனைய நண்பர்களுக்கும் சமூக வலைத்தளங்கள் மூலம் போராட்டத்தில் இணைய அழைப்பு விடுத்தார்கள். வழமை போன்று நல்லூரில் ஒரு ஆதரவுப் போராட்டத்தை இணைய நண்பர்களின் ஒருங்கிணைப்பில் நடத்திவிட்டு, அடுத்த நாள் வவுனியாவுக்கு சென்று உண்ணாவிரத்தில் கலந்து கொள்ள அவர்கள் முடிவு செய்த இரவே, போராட்டத்தை முடிப்பதாக உண்ணாவிரதிகள் சொல்லிவிட, பல இணையவாசிகளுக்கு சப்பென்று ஆகிவிட்டது. அதனால் போராட்டக் காரர்களை சமூக வலைத்தளங்களில் ஒரு பிடிபிடித்தார்கள். "இப்படி இடைநடுவில் போராட்டத்தைக் கைவிட்டது, அதற்கு ஆதரவு அளித்தவர்களை அவமதிக்கும் செயல்" என இந்த 'ஒருநாள் போராளிகள்' பொங்கியதால் இன்னமும் அந்தச் சூட்டில் இருந்து சமூக வலைத்தளங்கள் மீளாமல் இருக்கின்றன.

## குடியரசுக் கோலாகலம் 2




ஒரு பக்கம் காணாமலாக்கப்பட்டோருக்கான குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்க அதைக் கண்டும் காணாதது போல இன்னொரு தரப்பு இணையவாசிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் நடத்தப்பட்ட குடியரசு தின நிகழ்வுப் படங்களைப் போட்டு, தங்கள் செல்வாக்கை வெளிப்படுத்தினர். அந்த நிகழ்வுக்கு சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் வந்திருந்தமையால் அவருடன் சேர்ந்து செல்பி எடுத்து போட்டு மற்றவர்களை கடுப்பேற்றவும் இவர்கள் தவறவில்லை.

## 3 மாதவிலக்கும் விலக்குப்பிடித்தலும்

கொஞ்ச நாள்களாக அமுங்கிக் கிடந்த இலக்கிய இணையவாசிகளின் உள்வீட்டு குடுமிப் பிடிச் சண்டைகள் மீண்டும் கடந்தவாரம் பெரும் நேரடி மோதலாக வெடித்தன. "மாதவிலக்கு, பெண் உடலரசியல்" என்று தொடங்கிய இந்த வெட்டுக் கொத்துக்கள், தனிநபர் நடத்தைகளைக் கிண்டுவது வரை சென்றன. இதுதான் சந்தர்ப்பம் என்று குறித்த இலக்கிய இணைய வாசிகளைத் தாக்க தருணம் பார்த்திருந்தவர்களும், கும்பலோடு கும்பலாக வந்து, ஒரு பிடி பிடித்துவிட்டுப் போனார்கள். அடுத்த வாரம் வரை இந்தப் பிரச்சினை சமூக வலைத்தளங்களில் நீடிப்பதற்கான சாத்தியங்கள் அதிகமாகத்தென்படுகின்றன.





# சுவரில் கொய்தவை

**Castro Kp**

ஒரு ஆணுக்கு பல பெண் தோழிகள் இருந்தால் காதல் மன்னனாய் இருக்கவேண்டும் என்று அர்த்தம் இல்லை... கண்ணியம் மிக்கவனாயும் இருக்கலாம்

**Duvarakan**

என்னதான் போராட்டம் நடத்தினாலும் இருக்கொரு முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை சற்றே குறைவுதான்.
#சாதாரணமானவன்_பார்வை

**Sathiyamoorthy Mugunthan**

யாழ் குடா நாட்டில் இளைஞர் யுவதிகள் காணாமல் போவதற்க்கு காரணமாக இருப்பவர்களை திருப்த்திப்படுத்தும் முகமாக செயற்பட்டு வரும் நல்லூர் கந்தனைப்புறக்கணிப்போம்.

**அராலியூர் நிலா**

மரண வேளையில், தன்னுள் கடவுளை உணர்கிறான் மனிதன்...
-அராலியூர் நிலா

**Sakkaravarththi Jaffna**

காணாமல்போன உறவுகளின் போராட்டத்தில் நால்வர் கவலைக்கிடம்

உயிர்போனால்தான் தமிழ் அரசியல் தலைவர்கள் வருவார்களா? நாம் வாக்களித்த அரசியல் தலைவர்கள் எங்கே எமக்காக போராட எவருமில்லையா?

**Rajh Selvapathi**

எந்த ஒரு மக்கள் நலன்சார் போராட்டங்களிலும் விலக்கிவைக்கப்பட வேண்டிய இரண்டு தீய சக்திகள் அரசியல்வாதிகளும், ஆன்மீகவாதிகளும். இவர்கள் தங்கள் சுயலாபத்துக்காக எப்படியும் தங்கள் வேலையை காட்டுவார்கள்.

இவர்களை தாராளமாகவே வவுனியா போராட்டத்திலும காணமுடிந்தது. போராட்டத்தின் முடிவு எப்படி இருக்கும் என அப்போதே தெரிந்தும் விட்டது.

முதலில் இளைஞர்கள் அரசியல், ஆன்மீக வாதிகளின் போலியான மக்கள் கரிசனையை புரிந்துகொண்டு அவர்களை ஒதுக்கி வைக்க முயல வேண்டும்.

# இந்தவார மீம்ஸ் (Meme)

Girl:- டேய் வீடு வந்துடுச்சு நிறுத்துடா எங்கப்பா பார்த்திடபோறாரு...



Boy:- நானா மாட்டேங்கிறன். பிரேக் புடிக்க மாட்டேங்குதுடி

**இணையவாசிகளுக்கு** https://www.facebook.com/puthuvithieditorial/

உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும்.

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# முதலும் முடிவும்

டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற உடனேயே தன் கோமாளிக் கூத்துகளை அரங்கேற்றத் தொடங்கிவிட்டார். மெக்ஸிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மிக நீண்ட தடுப்புச் சுவரை எழுப்பும் ஒப்பந்தத்திலும், சிரியா உள்ளிட்ட 7 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் உள்நுழைவதற்கான அனுமதி மறுப்பு உத்தரவிலும், ட்ரம்ப் கைச்சாத்திட்டமை உலக அரங்கில் பரபரப்பான பேசுபொருள் ஆகியிருக்கின்றது.

அமெரிக்காவுக்கு எப்போதுமே மெக்ஸிக்கோ தலையிடி தான். அமெரிக்காவில் நிலவும் போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத ஆயுதப்பயன்பாடு என்பனவற்றுக்கு காரணம் மெக்ஸிக்கோவில் இருந்து நடைபெறும் கடத்தல்கள் தான். உலகின் அதிபயங்கர போதைப்பொருள் வியாபாரிகளுக்கும், ஆயுதக் கடத்தல்காரர்களுக்கும் மெக்ஸிக்கோ தான் தாய் வீடு. அமெரிக்காவோடு ஒட்டி உரசியபடி மெக்ஸிக்கோ அமைந்திருப்பதனால், எல்லையோர பாதுகாப்பில் மண்ணைத் தூவி விட்டு, கண்ணிமைக்கும் நொடிக்குள் அமெரிக்காவுக்குள் போதைப் பொருளையும், சட்டவிரோத ஆயுதங்களையும் கொண்டு வர கடத்தல் காரர்களால் இயலுமானதாக இருந்தது. இதனால் என்ன தான் கண்காணிப்பை அதிகரித்தபோதும், போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத ஆயுதப்பயன்பாடு என்பவற்றுக்கு தீர்வு காண, ஆனானப்பட்ட அமெரிக்காவால் கூட முடியாதிருந்தது. முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இந்த இரு விடயங்களிலும் தோல்வியோடுதான் விடைபெற்றார்.

ஆனால் ஒபாமாவைப் போல தான் தோற்கப்போவதில்லை என, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது ட்ரம்ப் முழங்கியிருந்தார். எனினும், ட்ரம்ப் வெல்வார் என்பதை எவரும் அப்போது எதிர்பார்க்கவில்லையென்பதால், அவரது முழக்கங்கள், சபதங்கள் என்பவற்றையெல்லாம் ஒரு கேலிப்புன்னகையோடு உலகம் கடந்திருந்தது. ஆனால், இப்போது அதே கேலிப்புன்னகையோடு உலகத்தை உருட்டி விளையாடப் புறப்படிருக்கிறார் ட்ரம்ப். முதல் வேலையாக போதைப்பொருள், சட்டவிரோத ஆயுதம் என்பவற்றுக்கான மூல ஊற்றான மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவைத் துண்டாட, எல்லையோரமாக தடுப்புச் சுவரை எழுப்ப ஆணையிட்டுள்ளார். ஆனால் இந்தத் திட்டத்தின் நிதி மூலத்துக்கான பரிந்துரைதான் ட்ரம்பை ஒரு கோமாளியாகப் பார்க்க வைத்திருக்கிறது. இந்தத் தடுப்புச்சுவருக்கான செலவை மெக்ஸிக்கோவே தரவேண்டும் என்பதுதான் அந்தப் பரிந்துரை. சுமார் 3200 கிலோ மீற்றர் நீளமான இந்தச் சுவரை அமைக்க பல ஆயிரம் கோடி டொலர் தேவைப்படும். இப்படியொரு தடுப்புச் சுவரை அமைக்க வேண்டிய எந்தக் கட்டாயமும் மெக்ஸிக்கோவுக்கு இல்லை. தலையிடி அமெரிக்காவுக்குத்தான். எனவே அதுதான் தலையிடியை நீக்க மருந்து உட்கொள்ளவேண்டுமேயொழிய, மெக்ஸிக்கோ கிடையாது. எனவே, "ஒரு டொலர் கூடத் தரமுடியாது" என மெக்ஸிக்கோ சொல்லிவிட்டது. இப்போது சுவரைக் கட்டுங்கள். மெக்ஸிக்கோவிடம் வாங்குகிற மாதிரி பணத்தை நான் கறக்கிறேன் என்று ட்ரம்ப் சொல்லிவிட்டார். பணிகள் ஆரம்பமாகிவிட்டன.

ட்ரம்பின் அடுத்த ஆணை, சிரியா உள்ளிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்பதே. இந்த நாடுகளில் இருந்து வருபவர்களே, பின்னர் தீவிரவாதிகளாக மாறி, அமெரிக்காவின் அமைதியைக் குழப்பி, இரத்தக்களரியை ஏற்படுத்துகிறார்கள் என்பது ட்ரம்பின் வாதம். எனவே "எதையும் ஆணிவேரோடு பிடுங்கினால், பிரச்சினை தீர்ந்துவிடும் என நம்பும் ட்ரம்ப், தீவிரவாதிகளை உற்பத்தி செய்யும் நாடுகள் என அமெரிக்க உளவுத்துறை பட்டியற்படுத்திய 7 நாடுகளைச் சேர்ந்த எவரும் அமெரிக்காவுக்குள் வரக்கூடாது என தடை விதித்துள்ளார். போரால் அலைவுற்று, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வரும் ஏதிலிகளுக்கு அமெரிக்காவின் இந்தத் திடீர் கதவடைப்பு இடியாக விழுந்துள்ளது. அத்தோடு குறித்த நாடுகளின் கௌரவத்துக்கு ஏற்பட்ட களங்கமாகவும் மாறிவிட்டது.

ட்ரம்பின் இந்த இரு உத்தரவுகளும் கடுமையாக விமர்சிக்கப் படுகின்றன. பிரிட்டனைச் சேர்ந்த அமைப்புகள் ட்ரம்ப் பிரிட்டனுக்குள் நுழைய தடை விதிக்க வேண்டும் என்று கோரி கையெழுத்து வேட்டையில் இறங்குமளவுக்கு எதிர்ப்பலையின் உக்கிரம் அதிகரித்துள்ளது.

"முதலில் அமெரிக்கா.." என்பதே ட்ரம்பின் கொள்கை. அதாவது அமெரிக்காவின் நலனை முன்னிறுத்தியே எல்லா முடிவுகளும் எடுக்கப்படும். இதனால் வேறு மனிதர்களுக்கோ, நாடுகளுக்கோ, அவ்வளவு ஏன் உலகத்துக்கோ என்ன அழிவு வந்தாலும் அது குறித்து அலட்டிக் கொள்வதில்லை. இதுதான் ட்ரம்பின் கோட்பாடு. "முதலில் அமெரிக்கா" என்பது, "முடிவில் அமெரிக்கா" என்பதாக மாறிவிடும் சூழலே அதிகம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




## பொய்த்துப்போகும் காத்திருப்புகள்

■ வர்சி

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நடத்திய சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம், அரசாங்கத்தின் உறுதிமொழியை அடுத்து -நான்கு நாள்களில் -தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது. அதாவது எதிர்வரும் 9ஆம் திகதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உயர்மட்டக் குழுவை, காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் சந்திக்க ஏற்பாடு செய்து தரப்படுமென அரசதரப்பால் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கமையவே இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அப்படியென்றால் "பிரதமருடனான சந்திப்பில் காணாமற் போனோருக்கான தீர்வு கிட்டும்" என அரசாங்கம் சொல்ல வருகின்றதா? "இந்த சந்திப்பில் வழங்கப்படும் வாக்குறுதிகளை இனியும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நம்புவார்களா?" என்பன போன்ற கேள்விகள் மேலெழுகின்றன.

ஏனெனில், நடைபெற இருக்கும் குறித்த சந்திப்பில், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக அரசாங்கத்தால் உறுதிமொழிகள் அளிக்கப்படவே போகின்றன. ஏனெனில், வாக்குறுதிகள் தான் இலங்கையில் மிக மலிவானவை. அவற்றை வழங்குவதால் அரசுக்கு எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதுமில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றினால் தானே ஏதும் சிக்கல் வரும். கொடுத்த வாக்குறுதிகளை மறுகணமே மறந்துவிடுகின்ற பரந்த மனசு நல்லாட்சி அரசுக்கு உண்டு. எனவே, அந்த வழக்கத்தின் படி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு தம் வேலையைப் பார்க்க பிரதமரும், அவரின் பரிவாரங்களும் சென்று விடுவார்கள். "தம் உறவுகள் மீளக் கிடைப்பதற்கு அரசு ஏதும் செய்யும்" என்ற நம்பிக்கையைக் காலம் பொய்க்கச் செய்வது உறைக்கத் தொடங்கியதும், ஒருசில மாதங்களில் தமது போராட்டத்தை சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்துவார்கள். இது தான் யதார்த்தம். காணாமற்போனவர்களுக்கு அரசிடம் எந்தத் தீர்வும் இல்லை. ஏனெனில் தமிழரைக் காணாமற்போகச் செய்தவர்கள் பேரின ஆட்சியாளர்களே. தமிழ் மக்கள் எவ்வாறு காணாமற்போகச் செய்யப்பட்டார்கள், யாரெல்லாம் அதற்குக் காரணம், காணாமலாக்கப்பாட்டோருக்கு என்ன நடந்தது? அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? என்று இப்போதைய அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும், தமது இனத்தவர்களைக் காட்டிக்கொடுக்க நல்லாட்சியாளர்கள் தயாராக இல்லை.

ஆட்சியாளர்களும் அவர்கள்தான், படையினரும் அவர்கள்தான், துணை இராணுவ குழுக்களும் அவர்களால் உருவாக்கப்பட்டவைதான். எனவே, தம் இனத்தவரையே சட்டத்தின் முன் நிறுத்த எப்படி அவர்கள் முன்வருவார்கள்?

இந்தநிலையிலேயே, காணாமற்போனவர்கள் எவரும் நாட்டில் இல்லையெனவும், அவர்கள் வெளி நாடுகளுக்கு சென்றுவிட்டதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமிழருக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கையே அன்றி, வேறொன்றுமில்லை.

முன்னர் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய பிரதமர் "காணாமற்போனவர்கள் என்று எவரும் இல்லை" எனத் தெரிவித்திருந்தார். இப்போதோ "காணாமலாக்கப்பட்டதாகச் சொல்லப்படுபவர்கள் வெளிநாடு சென்றிருக்கலாம்" என்று முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை தெரிவித்துள்ளார். அப்படியென்றால் மகிந்த கால ஆட்சிக்கும் நல்லாட்சிக்கும் என்ன வேறுபாடு? பிரதமர் ரணில் இன்று கூறியதைத் தானே மகிந்த காலத்திலும் கூறினார்கள்.அதாவது காணாமற் போனவர்கள் வெளி நாட்டில் உள்ளதாக. ஆட்சியாளர்களின் முகங்கள் தான் மாறியுள்ளனவே தவிர கருத்தியல் ஒன்றுதான்.

உண்மையில், காணாமலாக்கப்பட்டோர் வெளிநாட்டில் உள்ளனரென்றால், அவர்களின் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அவர்களின் படங்களை வைத்து வீதி, வீதியாக ஏன் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்? வெளிநாட்டில் தம் உறவுகள் இருந்தால், இவர்களும் சந்தோசமாக வெளிநாட்டுக்கு செல்லும் வேலையை அல்லவா பார்க்க வேண்டும். அதைவிட்டுவிட்டு இப்படி வெயிலென்றும், மழையென்றும் பாராமல், ஓயாமல் போராடிக் கொண்டிருக்கமாட்டார்களே. மிகச் சாதாரணமான இந்தத் தர்க்க நியாயத்தைக் கூட அரசு உணராதா? ஏற்கனவே அரசாங்கம் அமைத்த ஆணைக்குழுக்களிலும், செயலணிகளிலும் காணாமலாக்கப்பட்டவர்கள் எவ்வாறு பிடித்துச் செல்லப்பட்டனர், யாரால் பிடிக்கப்பட்டனர் என்றெல்லாம் அவர்களின் உறவினர்கள் துணிந்து சாட்சியப்பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சாட்சியங்களின் அடிப்படையில் யாரால், எங்கே காணாமற்போகச் செய்யப்பட்டனர் என்பதையாவது அரசாங்கம் விசாரிக்கத் தயங்குவதேன்? முன்னைய ஆட்சியாளர்களில் பொறுப்பாக இருந்த சிலரை விசாரித்தால் காணாமற்போனவர்களுக்கான தீர்வு சுலபமாக கிடைத்துவிடும்.இறுதிப்போரில், படையினரிடம் சரணடைந்து கொண்டு செல்லப்பட்ட பெருமளவான விடுதலைப்புலிப் போராளிக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை தெரியவில்லை.அவர்களும் காணாமலாக்கப்பட்டோர் பட்டியலிலேயே உள்ளனர். யாழ். குடாநாடு படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த போது, பலர் காணாமற்போகச் செய்யப்பட்டனர். யுத்தம் முடிவடைந்த நிலையிலும் பலர் பல்வேறு இடங்களில் காணாமற்போகச் செய்யப்பட்டனர்.

இவ்வாறு பல்வேறு வகையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளநிலையில் அவர்களின் நிலை தொடர்பாகக் கண்டறியும் வகையில், காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கவென, கடந்த ஓகஸ்ட் மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றுவரை அந்த அலுவலகத்தை அமைப்பதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கவில்லை.

காணாமலாக்கப்பட்டோரின் நிலை குறித்துக்கூடத் தெளிவான பதிலை அல்லது தீர்வை வழங்காத நல்லாட்சி அரசாங்கம், தமிழரின் தேசியப்பிரச்சினையை தீர்த்து வைக்குமென நம்புவது அடிமுட்டாள்தனமல்லவா. இரு வருடங்களுக்கு முன்னர் துளிர்த்த நம்பிக்கைகள் பொய்த்துப் போகும் காலமிது.

K



# பாட்டி சுட்ட வடை

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

பாட்டி சுட்ட வடை, கடலை வடையா? அல்லது உழுந்து வடையா தட்டை வடையா?, உருண்டை வடையா? என்று கூடத் தெரியாது. யாரும் அதைப்பற்றி ஆராய்ச்சி பண்ணப்போவதுமில்லை. ஆனால் எந்த வடையோ, முறிகண்டி வடைக்கென்று ஒரு தனிக்கிராக்கியிருக்கிறது. அப்படிச் சொல்லுமளவுக்கு முறிகண்டி வடை தனி ருசியானது.

பஸ்ஸில் போய் வருவோர், ஏன்? முறிகண்டி வழியால் போய் வருவோர் எல்லாம் அந்த வடையைக்கட்டிக் கொண்டு போகாமல் விடமாட்டார்கள்.

அதிலும் தெய்வேந்திரம் கடை வடைக்கு நிகரேயில்லை. அவர் வடை போடுவதற்கென்றே தனியாக ஆளை வைத்திருந்தார். அந்தக்கடையில் உழுந்து வடை என்றால் பிறகு அதைப்பற்றி குறைசொல்ல முடியாது. அந்த வடைக்காக, மாங்குளத்திலிருந்தும், பரந்தனில் இருந்தும் கூட ஆட்கள் வருவார்கள். இவ்வளவுக்கும் மாங்குளத்திலும் பரந்தனிலும் தேநீர்கடைகள் இல்லாமலில்லை. அல்லது அந்தக்கடைகளில் வடை போடாமலும் இல்லை.

இதைப்போலத்தான், வவுனியாவில் சந்திரபவான் வடையும். இரண்டு வடை சாப்பிட்டு ஒரு பிளேன்ரீயும் எடுத்தால், காலைச்சாப்பாடு போதும். சும்மா ஆளைத் தூக்கிப் போடும்.

இப்பவும், பஸ் ஓடுகிற ட்றைவர் சதாசிவம், சந்திரபவான் கடையின் வடையோடுதான் தன்ரை காலைச்சாப்பாட்டை தினமும் முடித்துக் கொள்கிறார். ஓட்டோ ட்றைவர்கள் பலருக்கும் சந்திரபவான் வடையே காலை ஆகாரம். மாலை உபகாரம்.

சந்திரபவானில்தான், ஆனந்தக்குமாரும் நாலு வருசமாக காலையும், மாலையும் வாடிக்கையாக வடை வாங்குகிறான். அங்கே, எப்போதும் வடை கிடைக்கும். அது வடை ஸ்பெஷல் கடையல்லவா. "ஒரு நாளைக்கு எத்தனை வடை விற்கும்" என்று சரியாகத் தெரியாது. ஆனால் "ஏறக்குறைய தினமும் நாலாயிரம் வடைக்குக் குறையாமல் அங்கே விற்பனையாகும்" என வாடிக்கை வைத்துள்ள ஒரு ஓட்டோ ட்றைவர் சொல்கிறார்.

சந்திர பவான் கடையில் எப்போதும் சுடச்சுட வடை கிடைப்பது இன்னொரு காரணம். 'வடை' என்றால் அது சூடு ஆறாமலிருக்க வேணும். தோதாகச் சம்பலும் இருக்கவேணும். அதுவும் வாழையிலையிலை சம்பலை வைச்சு, அதில வடையைத் தொட்டுச் சாப்பிட வேணும். அந்தச் சுவையும் இதமும் அலாதியானது.

## சைவக்கடைகளும் வடையும்

சைவக்கடைகளில் எப்பொழுதும் வடைக்கென்றொரு தனிக்கிராக்கி உண்டு. பளையில், முன்னர் 'முருகா' என்ற நாகலிங்கத்தின் ஆனந்தபவன் கடையிருந்தது. அந்த நாட்களில், யாழ்ப்பாணத்திலிருந்து வருகிற பஸ்களும், யாழ்ப்பாணத்துக்குப் போகிற பஸ்களும் அங்கே நின்றுதான் போகும். அப்படி நிற்கும்போது, சனங்கள் சாப்பிடுவார்கள். தேநீர் குடிப்பார்கள். சிலர் தண்ணியும் அடிப்பார்கள். அப்படித் தண்ணி அடிப்பவர்களுக்கென்றே அங்கே 'கூல்பார்கள்' என்ற பெயரில் சாராயம் விற்கும் கடைகளிருந்தன.

பஸ் பத்துப் பதினைந்து நிமிசம்தான் அங்கே நிற்கும். அதற்குள் சாப்பிட்டு, மலசலகூடத்துக்குப்போய், வந்து பஸ்ஸில் ஏறிட வேணும். பஸ் நின்று போகும் இடமென்பதால் அங்கே எப்பொழுதும் ஒரு குறிப்பிட்டளவு சனத்திரள் இருக்கும். அதுவும் அந்தக்கடைத் தொகுதியை அண்டி.

"அங்கே பெரும்பாலும் வடைக்காகத் தான் அப்படி பஸ்ஸை நிறுத்தினார்கள்" என்று நினைக்கிறேன். நாகலிங்கம் கடை வடை - ஆனந்த பவான் கடை வடைக்கு அப்படியொரு மதிப்பு அந்த நாட்களில் இருந்தது.

முருகா, எதில் கவனமில்லாவிட்டாலும் வடையில் பெருங்கவனமெடுத்தார். அதற்காக, வடைபோடுகிறதற்கென்று தோதாக ஆட்களையும் வைத்திருந்தார். அதனால், நிறைய வாடிக்கையாளர்களையும் வைத்திருந்தார். அவருடைய கடையில் வாழை இலைக்குப்பதிலாகத் தாமரை இலையிலேயே வடையையும், சம்பலையையும் வைத்தார்கள். தாமரை இலையைக் குளத்திலிருந்து எடுத்து வருவதற்காகச் சீவி சின்னத்தம்பி இருந்தார்.

## மலையாளத்தான் கபே

பளை ஆனந்த பவானைப்போல, யாழ்ப்பாணத்திலும் நிறைய வடைக்குப் பேர்போன கடைகளிருந்தன. கைதடியில், "மலையாளத்தான் கடை" என்று சொல்லப்படும் ஆனந்தபவான். புன்னாலைக் கட்டுவனிலும், கோண்டாவிலிலும்கூட அதே மலையாளத்தான் கடைகள். அதே ஆனந்தபவன்கள்.

மாத்தயாவை சந்தேகத்தின்பேரில் புலிகள் கைதுசெய்ததை அடுத்து எழுந்த "இந்திய ஊடுருவல்" என்ற கதையோடு, பல மலையாளத்தான் கடைகள் மூடப்பட்டன.

யாழ்ப்பாண நகரத்தில் மலாயன் கபேயின் வடைக்கும், மசாலாத்தோசைக்குமாகவே தினமும் ஆயிரக்கணக்கான சனங்கள் அங்கே திரள்வார்கள்.

அப்படித்தான் சுபாஸ் கபே வடையும், மிகப்பிரபலமாக இருந்தது. ஆனால், மிட்டாஸ் கடைச் சந்தியில் இருந்த பொன்னம்மா கடை வடைக்குப் பின்னேதான், சுபாஸ் ஹோட்டலின் வடை.

அப்போது வடைக் கடைகளுக்கிடையில் ஒரு வகைப் போட்டியுமிருந்தது. அந்தப் போட்டியில், அதிகம் நன்மையடைந்தது கடை முதலாளிகளையும் விட வடையின் வாடிக்கையாளர்கள்தான். இந்தப் போட்டியில் அவர்கள், "எப்பொழுதும் எங்கும் நல்ல வடையை வாங்கலாம்" என்ற நிலை உருவாகி இருந்தது.

## சுருட்டுக் கடையிலும் வடை

யாழ்ப்பாணத்தில் இன்னொரு கடையும் வடையைத்தரமாகப் போட்டுத் தந்தது. அதையும் இங்கே சொல்ல வேணும். கஸ்தூரியார் றோட்டில இரந்த வை.சி.கு என்ற சுருட்டுக்குப்பேர் போன அந்தக் கடையின் வடைக்கும் பெரும் கிராக்கி. அங்கே சுருட்டு நல்லதா அல்லது வடை நல்லதா என்று தெரியாமலிருக்கும். இரண்டும் அவ்வளவு தரம். வாடகைக் கார்க்காரர்கள், ஆஸ்பத்தி வேலைகாரர், கராஜ் காரர்கள், பின்னேரத்தில் தெருக்களைச் சுற்றி வரும் பெடியள்... எல்லாருக்கும் இந்த வடை அமிர்தமே.

வை.சி.கு. சுருட்டு ஒரு காலத்தில் இலங்கையில் மிகப்பிரபலமாக இருந்தது. மன்னாரில் கலாவதி கபேயில் இந்தச் சுருட்டுக்காகவே ஒரு தனிக் கூட்டமிருக்கும். அங்கேயும் வடை திறமாகவே இருந்தது. பிறகு கலாவதி கபேயை ஆமிக்காரர் கொளுத்திவிட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் மலாயன் கபேக்குப் பிறகு, விஸ்ணுவிஹார் என்ற அமுதசுரபி கடையிருந்தது. இப்போதும் இந்த இரண்டு கடைகளும் இருக்கின்றன. இதில் ஒரு ஒற்றுமை இருக்கும். இந்தக்கடைகளில் ஒருபோதும் ஆறிய வடை இருக்காது. எண்ணை வாசனை வீசும். ஆனால் ருசி குறையாது. எப்போது போனாலும் சூடாகவே வடையைத்தருவார்கள். வடைக்குத் தோதான சம்பல். அதுவும் வாழையிலையில். இதெல்லாததுக்கும் தோதாக சாயம் கூட்டிய பிளேன்ரீயோ, ரீயோ போடுவார்கள்.

வடையோடு குடிக்கக் கூடியமாதிரி பிளேன்ரீயையோ, ரீயையோ போடுவதும் ஒரு கலையே.

அந்தக்கலை தெரிந்தவர்களைக் கடையில் வைத்திருந்தால்தான் வடையும் ஓடும். கடையும் வாழும்.

பளை ஆனந்த பவனில் பஸ்காரர்கள் தான் கூடுதலாக நிற்பார்கள் என்றால், கைதடியில் லொறிக்காரர்களும், ட்றக்ரர் காரர்களும், வண்டில்காரர்களுமே அதிகமாக நிற்பார்கள். அதைப்போலவே, புன்னாலைக்கட்டுவன் கடையிலும் கைதடிக் கடையிலும் லொறிக்காரர்களும், வண்டிற்காரர்களுமே கூடுவார்கள். புறோக்கர் மாரையும் இங்கே தாரளமாகக் காணலாம்.

## பல்கலைக்கழக வடைகள்

இதைப்போல பல்கலைக்கழகப் பெடியளுக்கென்றும் சில வடைக்கடைகளிருந்தன. பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இருந்த அபிராமி கடை வடையைச் சாப்பிடாத பெடியளே இல்லை. அநேகமாகப் பின்னேரங்களில், அந்தக்கடையில் "இடமில்லை" என்ற அளவுக்கு கூட்டம் திரண்டிருக்கும். நயினாதீவு அண்ணை மிகத் திறமாகக் கடையை நடத்தினார்.

நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்த சொக்கன் கடையும் வடைக்கென்றே பெயர் பெற்றது. சொக்கன் கடை வடைக்காகப் பலர் நீண்ட தொலைவிலிருந்தெல்லாம் சைக்கிளோடி வருவார்கள்.

கிளிநொச்சியிலும் வடைக்கடைகளிருக்கின்றன. இந்தக்கடைகள் காலத்தாற் பிந்தியவை. இவையும் சைவக்கடைகள் தான். ஒன்று சித்தி. மற்றது அருள். இன்னொன்று முனியாண்டி. "இந்தக் கடைகளின் வடையை நோர்வேக்காரர்கள் முதல் பல சரவதேச நாடுகளின் பிரதிநிதிகளும் சாப்பிட்டிருக்கிறார்கள்" என்று சொல்லலாம்.

இதைவிடவும் இன்னும் நிறைய வடைக் கதைகளிருக்கின்றன. வைரவரின் வடைமாலை. சங்களை வயிரவருக்கு ஆளுயர வடைமாலை போடுவார்கள். "இறால் வடை, மாசி வடை, பருத்தித்துறை வடை, உருண்டை வடை, மரவள்ளிக் கிழங்கு வடை, கள்ளுவடை" என்று பல வடைகளும், வடைக்கதைகளுமுண்டு. அதெல்லாத்தையும் பிறகொருபோது பார்ப்போம்.



## கைபடாத எண்டஸ்கோபி இயந்திரங்கள்:

# கன்னிகழிவது எப்போது?



இவைதான் அந்த இயந்திரங்கள்

**அகரன்**

**யாழ்.** போதனா வைத்திய சாலையில் கடந்த நான்கு வருடங்களாக 2 கோடி பெறுமதியான இரண்டு உடற் குழாய் உள்நோக்கல் (Endoscopy Machine) இயந்திரங்கள் இன்று வரை பயன்படுத்தப்படாமல் - கன்னி கழியாமல்- துணியினால் மூடிக்கட்டப் பட்ட நிலையிலே பேணப்பட்டு வருகின்றன.

"எண்டஸ்கோபி" என்றழைக்கப்டும் இந்த இயந்திரத்தினூடாகச் செய்யப்படும் பரிசோதனைகளுக்காக, நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சுமார் 12 ஆயிரம் ரூபா முதல் 16 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தே செய்துவரும் நிலையில், இப்படி 2 கோடி ரூபா பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எண்டஸ்கோபி இயந்திரங்களை ஏதோ அருங்காட்சியகப் பொருள் போல கண் காட்சிக்காக வைத்திருப்பது ஏன் என்று எவருக்குமே புரியவில்லை.

வைத்தியசாலையில் உள்ள புதிய மாடிக்கட்டடத்தில், நவீன வசதிகளுடன் இந்த எண்டஸ்கோபி பரிசோதனை அறை அமைந்துள்ளது. இக் கட்டடம் நான்கு வருடங்களுக்கு முன்னர் அமைக் கப்பட்டபோது, இந்த இயந்திரங்கள் இரண்டும் வைத்தியசாலை நிர்வாகத்தி னால் தலா ஒரு கோடி ரூபா பெறுமதியில் கொள்முதல் செய்யப்பட்டிருந்தன. ஆனா லும் அன்றிலிருந்து இன்றுவரை இவை கைபடாத ரோஜாக்களாகவே உள்ளன.

வைத்தியசாலையின் நிர்வாகம் மற்றும் இத்துறைசார்ந்த வைத்தியர்களின் அலட்சியப் போக்கே இந்த இயந்திரங்கள் இப்படியே இருப்பதற்கு காரணமென்று சொல்லப்படுகின்றது. அத்தோடு இந்த இயந்திரங்கள் இப்படியே கன்னி கழியா மலே காலாவதியாகப் போகின்றனவா? அல்லது பின்கதவினால் வேறு எங்காவது ஓடப் போகின்றனவா? என்ற சந்தேகமும் பலரிடம் தொற்றிக்கொள்ள ஆரம்பித்துள்ளது.

### உடற்குழாய் உள்நோக்கல் கருவியின் (Endoscopy Machine) பயன்பாடு என்ன?

எண்டஸ்கோபி ஒருவகை கமராச் சோதனையாகும். இதன் மூலம் உடலில் உணவுக் கால்வாய் மற்றும் சுவாசப் பாதையில் ஏற்படும் மாற்றங்கள், கட்டிகள், வளர்ச்சிகள், குருதிக்கசிவுகள் போன்றவற்றை நேரடியாக கமராத்திரையில் பார்வையிடலாம்.

ஒலிம்பஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 180 ரக உடற்குழாய் உள்நோக்கல் (Endoscopy Machine) இரண்டு இயந்திரங்களே யாழ்.போதானா வைத்தியசாலையில் உள்ளன.

"எண்டஸ்கோபி" இயந்திரத்தின் உதவியி னால், உடலில் இருந்து மாதிரிப்பகுதி வெட்டி எடுக்கப்பட்டு இழைய பரிசோத னைக்காகக் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறது. அத்துடன் குருதிப் பெருக்குக்கு உரிய சிகிச்சை அளித்தல் போன்றவற்றை மேற்கொள்ளவும் முடிகிறது.

எண்டஸ்கோபி இயந்திரத்தின் அதியுச்ச சோதனை மூலம் "புற்றுநோயை இனங் காணல்" முக்கியத்துவம் பெறுகின்றது. பொதுவாக, உடலில் கட்டிகள் இருத்தல் தொடர்பாக, கணினி ஊடு காட்டும் சோதனை (சி.ரி.ஸ்கான் / C.T SCAN), மின்காந்த விம்பங்கள் (MRI) என்பவற்றின் மூலம் உருவ ரீதியாக அறியப்பட்டாலும், அவற்றின் மாதிரியை வெளியிலிருந்து ஊசியை உட்செலுத்தி வெட்டி எடுக்க முடியாது உள்ள நிலையில் உணவுக் கால்வாயை அண்மித்த அல்லது சுவர்சப் பைகளை அண்மித்த கட்டிகளிலிருந்து மாதிரியைப் பெறுவதற்கு எண்டஸ் கோபிமுறை உதவுகிறது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், இப்படிப் பட்ட முக்கியமான இயந்திரத்தை தன் மடியில் வைத்துக் கொண்டு, நோயாளர் களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை வஞ்சனை செய்து வருகின்றது. தற்போது மூலையில் பத்திரமாக புத்தம் புதிசாக இரண்டு இயந்திரங்கள் மௌனித்திருக்க, ஒரேயொரு எண்டஸ்கோபி இயந்திரமே பயன்பாட்டில் உள்ளது. இதனால் பெருந் தொகையான நோயாளர்கள் "போதிய இயந்திரவசதி இல்லை" என்ற காரணத்தால் எண்டஸ்கோபி பரிசோதனை செய்ய வந்து திரும்பிச் செல்கின்றனர். சில நோயாளிகள் தமது முறை வரும் வரை நீண்டகாலம் காத்திருக்கவும் செய்கின்றனர். எனினும் அவசரமாக இந்தப் பரிசோதனையைச் செய்ய வேண்டிய நோ்யாளர்கள் சுமார் 16 ஆயிரம் ரூபாவை சுளையாகக் கொடுத்து தனியார் வைத்தியசாலைகளில் எண்டஸ்கோபி சோதனைகளை செய்ய வேண்டியிருக்கிறது.

### குமுறும் நோயாளர்கள்

**நோயாளர் - 1**

"எங்கட ஊரிலிருந்து வைத்தியசா லைக்கு நேற்றைக்கே வந்து அட்மிற் ஆகினம். விடியற்காலமை வெறும் வயிற் றோடு காத்திருந்த எங்கட வோட் காரர் இரண்டுபேரை பாத்தினம். என்னையும் இன்னொரு ஆளையும் திருப்பி அனுப் பிட்டினம். ரைம் முடிஞ்சிட்டாம். மற்ற வோர்ட் ஆக்களைதான் எடுப்பினமாம் நீங்கள் அடுத்த கிழமைக்கு வாங்கோ எண்டு அவர் சொன்னார். இப்பிடி 2,3 கிழமையா நாங்கள் அலைக்கழிக்கப்படு கிறம். இதுதான் இஞ்ச வழமை. சரி, பிரைவேட்டா சோதிப்பம் எண்டு போனால், அங்க சோதிக்கிறதுக்கு எங்கட ஒருமாத சம்பளத்தைக் கேக்கிறாங்கள்"

**நோயாளர் - 2**

தோட்ட வேலை செய்துதான் குடும் பத்தைப் பாக்கிறம். பிள்ளைகளை படிப்பிக்கிறம். எனக்குத் திடீரெண்டு வாயால ரத்தம் வந்திட்டுது. ஏனிப்பிடி எண்டு சோதிக்கத்தான் நான் இஞ்ச வந்தனான். கனநேரம் நிண்ட பிறகு

"இண்டைக்கு ஐயா வரேலை. நீங்கள் அடுத்த கிழமைக்கு வாங்கோ" எண்டு சொல்லினம். இவ இப்பிடி டக்கெண்டு சொல்லிப்போட்டினம். நாங்க இங்க வாறத்துக்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்குது.

இப்பிடி வந்து உலையிறதை விட பேசமா இப்படியே வருத்தத்தோட இருக்கலாம். ஆனாலும் போகமுடியாது. கன்சர் வருத்தமோ எண்டு எல்லாரும் பயப்பிடுத்திட்டாங்கள். இந்த ரெஸ்ட் எடுக்கிறதுக்குள்ள கான்சர் முத்திடுமோ எண்டும் பயமா இருக்கு.

நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தில் பல பேருக்கு

சுவாசப்புற்றுநோய்கள் அதிகரித்துள்ள தாக புள்ளிவிபரங்கள் பல்லிளிக்கின்றன. இதற்கு "போரின் போது பயன்படுத்தப் பட்ட நச்சு விஷ வாயுக்கள் காரணமாக இருக்கலாம்" என வைத்தியர்களினால் சந்தேகிக்கப்படுகின்றது.

அத்துடன், அதிகரித்துள்ள கிருமி நாசி னிப் பிரயோகத்தினால், சுவாச மற்றும் உணவுக்கால்வாய்களில் புற்றுநோய் ஏற்படுபடுகின்றமையும் தற்போது அதிகரித்துள்ளது. இதனால் ஏற்படுகின்ற புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கு எண்டஸ்கோபி பரிசோதனை உதவுகின்றது. ஆனால்,



**வைத்தியசாலைப் பணிப்பாளர்**
**த. சத்தியமூர்த்தி**

எண்டஸ்கோபி இயந்திரங்கள் தொடர்பான நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை தகவல்களின் அடிப்ப டையில் அது குறித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் கருத்தினை நேரடியாக அறிய இரு தடவைகள் முயன்றும், அவரிடமிருந்து உரிய பதில்களைப் பெற முடியவில்லை. இறுதியில் மின்னஞ்சல் ஊடாக அவருக்கு நாம் அனுப்பி வைத்த கேள்விகளும், அதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அவர்கள் வழங்கிய 'நறுக்' பதில்களும்.

**01.** போதனா வைத்தியசாலை யில் தற்போது எண்டஸ்கோபி இயந்திரங்கள் எத்தனை உள்ளன?

03

**02.** அவற்றில் எத்தனை பயன் பாட்டில் உள்ளன?

02

**03.** தலா 2 கோடி ரூபா பெறுமதி யான 2 எண்டஸ்கோபி இயந்திரங் கள் சுமார் 4 வருடங்களாக கொள் வனவு செய்யப்பட்டும் பயன்படா மல் இருப்பதாகக் கூறப்படுவது உண்மையா?

**இல்லை**

**04.** குறித்த இயந்திரத்தை கையாள்வதற்கான நிபுணத்துவம் உள்ளவர்கள் இல்லாமையே அவை பயன்படாமைக்கான காரணமெனில் இதுவரை அவ்வாறான நிபுணர்களை உள்வாங்க வைத்தியசாலை நிர்வாகம் எத்தகைய நடவடிக்கை எடுத்தது? எடுத்துள்ளது?

**வைத்தியசாலையில் நிபுணர்கள் இருக்கின்றார்கள்.**

**05.** எப்போது அந்த இயந்திரங் கள் பயன்பாட்டுக்கு வருமென உத்தேசமாக சொல்ல முடியுமா?

**2 இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன.**



"சாமி வரம் கொடுத்தும் பூசாரிகள் மனம் வைக்காததால்" எண்டஸ்கோபி இயந்திரங் கள் மீளாத்துயிலில் ஆழ்ந்திருக்கின்றன. இனியாவது அவை கும்பகர்ண உறக்கத்தி லிருந்து மீண்டெழ வைத்தியசாலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுப்பார்களா? நோயாளர் குறை துடைப்பார்களா? ●

# ஒரு தீர்ப்பும், போராட்டமும்



கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கையில் இதுவரை காலமும் நிலவி வந்த இலவச மருத்துவக் கல்விக்கு சாவு மணி அடிப்பதாக அமைந்து விட்டது. அத்துடன் இவ்வளவு காலமும் உயர்தரமானதாக அளிக்கப்பட்ட சிகிச்சைகளும் இனிமேல் மோசமானவையாக மாறப்போகின்றன.

தனியார் மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்களும் இலங்கை வைத்தியசாலைகளில் பணிபுரிய இலங்கை மருத்துவ சபை அனுமதி கொடுத்தேயாக வேண்டும் என்பதே அந்த இடி விழ வைத்த தீர்ப்பு. இந்தத் தீர்ப்புக்கு எதிராக அரச பல்கலைக்கழக மாணவர்களிடமும், மருத்துவர்களிடமும் வலுவான எதிர்ப்பு கிளம்பத் தொடங்கியிருக்கின்றது. பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் வகுப்பை பகிஷ்கரித்து எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பொதுமக்கள் மத்தியில் எந்தவிதமான ஆர்வமும் இது தொடர்பாக இல்லை. இது தொடர்பாக சில சந்தேகங்களை முதலில் நீக்கிக்கொள்ள வேண்டும்.

அனோஜன் பாலகிருஷ்ணன்

### தனியார் மருத்துவக் கல்லூரி எங்கே இருகின்றது?

2008-ஆம் ஆண்டு SAITM என்ற தனியார் கல்லூரி, மாலேபேயில் ஆரம்பிக்கப்பட்டது. South Asian Institute of Technology and Management என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டாலும், 2011- இல் South Asian Institute of Technology and Medicine என்ற பெயருடன் இயங்குகின்றது. பொறியியல், தகவல் தொழில் நுட்பவியல் உட்பட மருத்துவத்துவப் பட்டப்படிப்பையும் வழங்குகின்றது.

### என்ன சிக்கல்?

SAITM இனால் வழங்கப்படும் மருத்துவ பட்டப்படிப்பு Sri Lanka Medical Council (SLMC) இனுடைய அனுமதியை பெற்றுக்கொள்ளாததே எல்லாப் பிரச்சினைகளுக்கும் பிள்ளையார் சுழியாக இருக்கிறது. SLMC இனுடைய அனுமதியைப் பெறாத மருத்துவக் கல்லூரியின் மருத்துவப் படிப்பு இலங்கை நாட்டுக்குள் மருத்துவராக பணியாற்ற அனுமதிக்காது. மருத்துவ பட்டத்தை வழங்கும் அனுமதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) வழங்கப்பட்டது. அது உயர் கல்வி அமைச்சு சார்ந்த விடயம். பின்னர் தொழில் நிமித்தம் சுகாதார அமைச்சு வைத்திய துறையை, சுகாதார அமைச்சின் கீழ் இருக்கும் SLMC கையாள்கிறது. மருத்துவக் கல்லூரியின் தரம், பாடத்திட்டங்கள் போன்றவற்றை ஆய்வு செய்து, அக்கல்லூரியில் படித்து சித்தியடைந்து வெளிவரும் மாணவர்கள், இலங்கையில் மருத்துவ சேவை செய்ய உகந்தவர்கள் எனின், SLMC அக்கல்லூரியை அனுமதிக்கும். SAITM இன் தரம் போதாது என்பதால் SLMC அனுமதி கொடுக்கவில்லை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) அனுமதியும் பெறப்படவில்லை.

### வெளிநாட்டில் படித்து மருத்துவம் பார்க்க இங்கு வருகிறார்களே?

வெளிநாடு ஒன்றில் மருத்துவம் கற்க ஒருவர் விரும்பினார் எனின் SLMC அனுமதித்த வெளிநாட்டிலுள்ள மருத்துவக்கல்லூரி ஒன்றில் கல்விபயில முடியும்.

அக்கல்லூரியில் படித்து வெளிவரும் மாணவர்கள், இலங்கையில் மருத்துவராக கடமையையாற்ற SLMC நடத்தும் ERPM என்ற பரீட்சையில் தோற்ற வேண்டும். அதில் சித்தியடைபவர்களே இலங்கைக்குள் வைத்தியராக கடமையாற்ற முடியும். ஓர் ஆண்டில் 6 - 10% மாணவர்களே ERPM பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். கடும்போட்டியைக் கொண்ட இப் பரீட்சையில் வென்று, மருத்துவராக வேண்டும். இலங்கையில் வெளி நாட்டில் மருத்துவம் பயின்ற 7,000 க்கு மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் ERPM பரீட்சையில் சித்தியடைய முடியாமல் மருத்துவக்கனவோடு இன்னும் காத்திருக்கின்றனர்.

### SAITM - இல் மருத்துவம் பயின்றவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்?

SAITM கல்லூரியின் தரத்தை ஆராய்ந்த SLMC, கல்லூரியின் தரம் போதாது என்று SLMC, தங்களது அனுமதியைச் கொடுக்கவில்லை. இதனால் அக் கல்லூரியில் பயின்ற மாண வர்கள் இலங்கையில் மருத்துவராக பணி யாற்ற முடியாத சிக்கல் தோன்றியுள்ளது. 720- க்கு மேற்பட்ட மாணவர்கள் மருத்துவராக கடமையாற்றாமல் வீட்டில் இருக்கிறார்கள்.

அதுதான் வீட்டில் இருக்கிறார்களே, பிற்பாடு எதற்கு ஊர்வலம்? எதிர்ப்பு? இங்குதான் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. SAITM இல் பயின்ற மருத்துவ மாணவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்திருந்தார். "இலங்கையில் மருத்துவம் பயின்றவர்கள்" என்ற முறையில் எமக்கும் வைத்தியராக கடமையாற்ற உரிமையுண்டு "SLMC அனுமதியைத் தாருங்கள், இல்லாவிடில் தனியார் மருத்துவ கல்லூரியை கண்காணிக்கவும், அங்கு பயிலும் மருத்துவர்களை கண்காணிக்கவும் SLMC க்கு சமாந்தரமான மற்றொரு அமைப்பை உருவாக்குவோம் என்ற வாதத்தை முன்வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கின் தீர்ப்பு ஜனவரி 31 வெளியாகியுள்ளது. நீதிமன்றம் SAITM திற்கு SLMC யினுடைய அனுமதியை கொடுக்கச் சொல்லியிருக்கின்றது. ஆனால் SLMC யின் தலைவர் "என்ன எதிர்ப்புகள் வந்தாலும் சரி தரமற்ற மருத்துவ பீடத்தைக் கொண்ட SAITM திற்கு அனுமதியைக் கொடுக்க மாட்டோம்" என்று நீதி மன்றத்திலே சொல்லியிருக்கிறார்.

### இதனால்என்ன ஆபத்து?

சிறந்த மருத்துவ கல்வித்தகுதி, செய்முறை பயிற்சியற்ற தகுதியற்ற மருத்துவர்கள் நாட்டில் அதிமாக உருவாவார்கள். உயிர் ஆபத்துகள் ஏற்படும்.

சரி, தகுதியான சிறந்த கல்வித் தகுதியைக் கொண்ட மருத்துவக்கல்லூரியை உருவாக்கினால் பிரச்சினை இல்லைத் தானே? பிற்பாடு எதற்கு இலவச மருத்துவக் கல்வியைக் காப்போம் (NO&PMC) என்ற கோஷம்?

"மருத்துவம் படிக்க வேண்டும்" என்ற கனவில் நிச்சயம் பலர் இருப்பார்கள். ஆனால், எல்லோரும் மருத்துவராக முடியாது. ஏதாவது ஒரு தடை தேர்வில் நிச்சயம் இருக்கும். மருத்துவம் படிக்க அரச பல்கலைக்கழக அனுமதியை பெறாத ஒருவர், தனியார் துறையில் படிக்கச் செல்லும்போது அங்கிருக்கும் தேர்வு பணத்தில் அல்லவா இருக்கப் போகின்றது. SAITM கல்லூரியில் படிக்கச் செல்லும் ஒருவர் மருத்துவராக ஒருகோடியே இருபது லட்சம் ரூபா கட்டணமாக கொடுக்க வேண்டும். சாதாரண குடும்பத்திற்கு இது சாத்தியமா? இல்லை தானே. மருத்துவராக முடியாதவருக்கு இரண்டாவது வாய்ப்பு என்பது பணத்தில் மட்டும் செல்வாக்கு செலுத்தும் வகையில் இருப்பது உகந்தது இல்லை தானே?

சரி, தரம் வாய்ந்த, சாதாரண குடும்பங்களால் கட்டணம் செலுத்திப் படிக்கக் கூடிய தனியார் மருத்துவக் கல்லூரி உருவாக்கினால் என்ன சிக்கல்? மருத்துவர்கள் மட்டும் தனியார் வைத்தியசாலையில் வேலை பார்க்கின்றார்கள் தானே? அப்படியொரு கல்லூரியை உருவாக்குவது சாத்தியமா? அப்படி உருவாக்கினால் பிரச்சினை இல்லை.

தனியார் வைத்தியசாலை என்பது மேலதிக சேவை மட்டுமே. உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொள்வோம் இங்கு 700 க்கு மேற்பட்ட வைத்தியர்கள் அரச வைத்திய சாலைகளில் கடமையாற்றுகிறார்கள். அதில் 40- தொடக்கம் 60 வரையானோர் மாத்திரமே வைத்திய நிபுணர்கள். உங்களுக்கு தெரிந்த நீங்கள் செல்லும் தனியார் வைத்தியசாலைகளில் நீங்கள் அதிகமாக சந்திப்பது இவர்களைத் தான். அவ்வாறு தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியம் பார்க்கும் மருத்துவர்கள் மீது மற்றைய மருத்துவர்களும் கடும் விசனத்தில் இருக்கிறார்கள். இது அவர்கள் மனம் நேர்மை என்பன சம்பந்தப்பட்ட விடயம். எல்லாத் துறையிலும் இவ்வாறான பிரச்சினைகள் உண்டுதான். அதற்காக மொத்த துறையையும் எப்படி தவறாகச் சித்தரிக்க இயலும்?

### இப்போது என்ன செய்ய வேண்டும்?

தரமற்ற மருத்துவக் கல்லூரியின் பட்டப்படிப்பு எதிர்காலத்தில் பாரதூரமான பிரச்னைகளை தோற்றுவிக்கும். சுகாதாரம் சீர்கெடும். ஆகவே தரமற்ற தனியார் மருத்துவக் கல்லூரியினை தடைசெய்ய வேண்டும். அதற்கு அரசாங்கத்திற்கு எதிராக அழுத்தங்களை நாடளாவிய ரீதியில் கொடுக்க வேண்டும்.

ஆனால் மருத்துவப் பீடத்தின் கோஷம் "இலவசக் கல்வியைக் காப்போம் (NO PMC)" என்று இருக்கின்றதே?

எளிமையான கோஷம்தான் எப்போதும் மக்களிடம் எடுபடும். அதற்கான தலைப்புத்தான் "இலவசக் கல்வியைக் காப்போம்"

ஆனால், இந்த எளிமையான கோஷத்திற்கு மக்களிடம் இருந்து வரும் முதல் எதிர்ப்பு "வைத்தியர்கள் மட்டும் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றலாம் ஏன் தனியார் மருத்துவம் மட்டும் வரக் கூடாது?" என்பது. வெளிப்படையாக இது ஓர் சவாலான கேள்வியாக இருந்தாலும், உண்மையில் இது வலிமையற்ற வெற்று விவாதம். மக்கள் தெளிவாக எதிர்கால நாட்டின் சுகாதாரத்தை பேணிப்பாதுகாக்க கைகோர்க்க வேண்டும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு கடும்சினத்தை SLMC நிர்வாகத்தினரிடமும் வைத்தியர்களிடமும், மருத்துவபீட மாணவர்களிடமும் ஏற்படுத்தியிருக்கின்றது. விரைவில் நாடளவிய ரீதியில் வரலாற்றில் இல்லாத அளவுக்கு மருத்துவர்களும், மருத்துவ பீட மாணவர்களும் போராடுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன. அந்த எதிர்ப்பின் செயல் வடிவத்திற்கு மக்களும் ஒத்துழைப்புக் கொடுத்து நாட்டின் கல்வியின் தரத்தையும் சுகாதாரத்தையும் பேண ஒத்துழைக்க வேண்டும். நாம் போராடுவது எதிர்கால சந்ததிக்காகவும் என்பதை மறந்துவிடக் கூடாது. அதேவேளை மருத்துவர்களின் போராட்டத்தால் அப்பாவி நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# வாரப்பலன்

**மேடம்**
தொழில் விருத்தி, கடன் கிட்டும், புத்திரால் நன்மை, சமநிலை.

**ரிஷபம்**
சமூக விருத்தி, காரியத் தடை, கல்வி மேன்மை, பொது நல எண்ணம்.

**மிதுனம்**
தெய்வ சிந்தனை. தியான நிலை. தேக மெலிவு. பயிர் விருத்தி. பயமிகுதி.

**கடகம்**
காரிய ஜெயம். கல்வி மேன்மை. கனவு பலிதம். எதிர்பாராதது கிட்டும்.

**சிம்மம்**
பண முடை. காரிய ஜெயம். உழைப்பிற் கேற்ற ஊதியமின்மை. ஆலயதரிசனம்.

**கன்னி**
கல்வியில் நாட்டம். கலை விருத்தி. கொடுக்கல் வாங்கல் பிணக்கு. செலவு.

**துலாம்**
வீரிய விருத்தி. மனைச் சிறப்பு. சிந் தனை. தெய்வ அனு கூலம். பணவரவு.

**விருச்சிகம்**
தொழில் மேன்மை. வாகனச் சிறப்பு. புதிய சிந்தனை. புத்திர பாக்கியம்.

**தனுசு**
உயர் நிலை. கல்வி. தெய்வ தரிசனம். உறவுகளால் நன்மை. காரிய ஜெயம்.

**மகரம்**
நிலை தடுமாற்றம். அச்சம். கடன் தொல்லை. தெய்வ தரிசனம். உதவி கிட்டும்.

**கும்பம்**
நட்பால் நன்மை. அதிக செலவு. மனை யில் சம பலன். எதிரிகளால் கேடு.

**மீனம்**
கோப மிகுதி. கட் டுப்பாடற்ற நிலை. ஊதிய உயர்வு. தொழிலில் சமநிலை.



கொக்கட்டிச்சோலை படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் கடந்த 28.01.2017 சனிக்கிழமை கொக்கட்டிச் சோலையில் பி.ப 2.00 க்கு இடம்பெற்றது. இதன் போது ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலித்தனர். 1987 ஆம் ஆண்டு ஜனவரி 28, 29, 30 ஆம் திகதிகளில் - இலங்கை இராணுவத்தின் வெறியாட்டத்தில் 200 க்கும் அதிகமான பொதுமக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டிருந்தனர்.

மக்கள் வங்கியின் கண்டி செங்கடகல கிளையில் புத்தாண்டு கொண்டாட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட வங்கியின் ஓய்வு பெற்ற ஊழியரும், மத்திய தென்னகும்புர வை.எம்.எம்.ஏ இயக்கத்தின் ஆயுட்கால பொதுச் செயலாளருமான ஏ.ஏ. மொஹமட் நாகூர் பிச்சை, வை.எம்.எம்.ஏ தலைவர் எஸ்.எம். நஸார், வங்கிக் கிளையின் முகாமையாளர் திருமதி. ஷாமினி விக்கிரமரத்தின ஆகியோரை படங்களில் காணலாம்.







கடந்த 28.01.2017 அன்று ஒக்ரோபர் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல் தொடர்பான ஆய்வரங்கில் எழுத்தாளர் ஐ. சாந்தன் தலைமையுரை ஆற்றுவதையும், க. தணிகாசலம் ஆய்வுரையாற்றுவதையும், பார்வையாள ரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

யாழ்ப்பாணம் அல்வாயிலிருந்து - மாதந்தோறும் வெளிவரும் ஜீவநதி சிற்றிதழின் நூறாவது இதழ், ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் சிறப்பிதழாக - 572 பக்கங்களில் - வெளி வந்துள்ளது.





ஜனவரி 28 அன்று பகுபதம் ஒருங்கிணைத்த மஜித்தின் நான்கு நூல்களின் வெளியீடும் கலந்துரையாடலும் கனடாவில் இடம்பெற்றது.





25.01.2017 புதன்கிழமை நடந்து முடிந்த கலைவாணி மோகன்ராஜ் அவர்களின் நெடுந்தீவு இலக்கியப் பாரம்பரியங்கள் - ஓர் ஆய்வு- நூல் வெளியீடு

## பெரியாரின் வாழ்வில்...!

ஆங்கிலக் கவிஞர் ஜோன்மில்டனின் 'மீண்ட சொர்க்கம்' எனும் கவிதை குறித்து விளக்கி, பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். வகுப்பில் இருந்த மாணவர்களில் பெர்னாட்ஷாவும் ஒருவர்.

திடீரென... "உங்களில் எத்தனை பேருக்கு சொர்க்கம் செல்ல ஆசை?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார் ஆசிரியர். பெர்னாட்ஷாவை தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்றனர். ஆசிரியருக்கு ஆச்சரியம்!

பெர்னாட்ஷாவின் அருகே வந்த அவர், "உனக்கு சொர்க்கத்துக்கு செல்ல ஆசை இல்லையா?" என்றார். இதற்கு பெர்னாட்ஷா, "எனக்கும் சொர்க்கம் செல்ல ஆசைதான். ஆனால் எல்லோரும் சொர்க்கத்துக்குச் சென்றால்... சொர்க்கம் சொர்க்கமாகவா இருக்கும்?" என்றார்.

குறும்புத்தனமும் சாதுரியமும் நிறைந்த பெர்னாட்ஷாவின் இந்த பதிலைக் கேட்டு, ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தனராம்.



## பக்கிங்ஹாம் அரண்மனை ஆச்சரியத் தகவல்கள்



★ இங்கிலாந்து அரச குடும்பத்தின் உத்தியோகபூர்வ இல்லமே பக்கிங்ஹாம் அரண்மனை.

★ இந்த அரண்மனை பக்கிங்ஹாம் பிரபு ஜோன் ஷெவ்வீல்ட்டுக்காக 1703 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

★ 1837 ஆம் ஆண்டு பக்கிங்ஹாம் அரண்மனையை விக்ரோறியா மகாராணி தனது வசிப்பிடமாக்கினார். அன்றிலிருந்து இந்த மாளிகை அரச குடும்பத்தின் வாசஸ்தலமானது.

★ இங்கு, 775 அறைகள் உள்ளன. இதில் 19 அரச குடும்பத்தாருக்கும் 52 இராஜங்க மற்றும் விருந்தினருக்குமான அறைகளாகும். பணியாற்றும் ஊழியர்களுக்கு 188 அறைகள் உள்ளன. தவிர 78 குளியல், கழிவறைகள் உள்ளன.

★ 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த அரண்மனையின் ஒரு பகுதி மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது.

★ அரண்மனையின் முன்புறத்தில் விக்ரோறியா மகாராணியின் சிலை உள்ளது.

★ பக்கிங்ஹாம் அரண்மனையை வில்லியம் விண்ட் என்பவர் முதன் முதலில் வடிவமைத்தார்.

★ ஒவ்வொரு வருடமும் "கார்டன் பார்ட்டி" என்ற பெயரில் மூன்று முறை விருந்துகள் நடக்கின்றன.


★ ஒவ்வொரு வருடமும் 50 ஆயிரம் விருந்தினர்கள் இங்கு நடக்கும் விருந்துகளில் பங்கேற்கின்றனர்.

★ சமையலாளர்கள், பராமரிப்பாளர்கள், ஊழியர்கள் என 400 பேர் அரண்மனையில் பணியாற்றுகின்றனர். அங்குள்ள 300 கடிகாரங்களை பராமரிக்கவென இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ 42 ஏக்கரில் தோட்டம் அமைந்துள்ளது. இதில் 350 வகையான பூச்செடிகள், 200 வகையான மரங்கள், ஏரி என்பனவும் உள்ளன.

★ ஒவ்வொரு வருடமும் தி சேஞ்சிங் ஒவ் கார்ட்ஸ் (வீரர்கள் மாற்றம்) நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதைப் பார்க்க பல்லாயிரக்கணக்கானோர் வருகின்றனர்.

## உதவி



கழுதை ஒன்று நிறையப் பொதிகளை சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் எஜமானருடன், அவர் வளர்க்கும் நாயும் வந்துகொண்டிருந்தது. வழியில் நன்கு வளர்ந்த புல்நிலத்தைக் கண்ட எஜமானர், கழுதையை அங்கு மேய விட்டு மர நிழலில் படுத்துத் தூங்கினார்.

புற்களை மகிழ்ச்சியுடன் கழுதை மேயத் தொடங்கியது. பாதுகாப்பாக வந்த நாய்க்கு சாப்பிட எதுவும் இல்லை. பசியால் அது துடித்தது.

கழுதையின் முதுகில் இருந்த பொதியில் உணவு இருந்ததால் நாய் அதைப் பார்த்து "நண்பனே! என்னால் பசி தாங்க முடியவில்லை. எஜமானர் தூங்குகிறார். சிறிது நேரம் கீழே படு. பொதியில் இருந்து சிறிது உணவை நான் எடுக்கிறேன்" எனக்கேட்டது.

கழுதையோ நாயின் கெஞ்சலைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மேய்ந்தது. நாயும் விடாமல் தொடர்ந்து கேட்டது.

அதன் தொந்தரவு தாங்காத கழுதை, "உனக்கு இப்ப என்ன அவசரம்? எஜமானர் எழுந்து உனக்கு சாப்பாடு தருவார். அங்கால போ" என்று நாயை விரட்டியது.

நாய் வேறுவழியின்றி சற்றுத் தூரத்தில் சென்று படுத்துவிட்டது. சிறிது நேரத்தில் தனியாக நின்ற கழுதையை ஓநாய் ஒன்று தாக்கியது. அப்போது கழுதை "நண்பா சீக்கிரம் வந்து என்னைக் காப்பாற்று" எனக் கத்தியது.

படுத்திருந்த இடத்தில் இருந்து அசையாத நாய் "இப்ப என்ன அவசரம்? எஜமானர் எழும்பியதும் உன்னைக் காப்பாற்றுவார்" என்று கூறிவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டது.

அப்போதுதான் தான் நாய்க்கு உதவாததை நினைத்து கழுதை வருந்தியது.

நீதி : நாம் மற்றவர்களுக்கு உதவி செய்தால் தான் அவர்கள் நமக்கு உதவுவார்கள்.

## காகக் கடிகாரம்

சேவல் கூவினால் காலை விடிந்து விட்டதாத் சொல்வார்கள். ஆனால், காலை நேரம் வந்து விட்டதை அறிவிப்பதில் சேவலை விட காகமே சிறந்தது என்கிறார்கள் போலந்து நாட்டு ஆராய்ச்சியாளர்கள்.

இதற்காக, ஒளிபுகாத இருட்டறை ஒன்றில், காகத்தை அடைத்தனர். காலை, மாலை தெரிய வாய்ப்பே இல்லை. ஆனாலும், காகம் கச்சிதமாக கரைந்தது.

பிறகு, சூரியனை போல செயற்கை ஒளியை காகம் இருக்கும் அறை முழுவதும் பரப்பினர். ஆனாலும் காகம் ஏமாறாமல் சரியான நேரத்தில் மட்டுமே கரைந்தது.

## குட்டீஸ் பரிசுப் பொதி - 30

★ 2018 ஆம் ஆண்டில் 'பிபா' உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும் நாடு எது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்பொதி - 30

முடிவுத்திகதி : 17.02.2017

குட்டீஸ் பரிசுப் பொதி - 28 முடிவுகள்

விடை: 45 ஆவது ஜனாதிபதி

★ இ.தனஞ்சயன்
தரம்-08
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

★ யோ.ஆர்த்திகை
தரம்-04
யா/மேலைப்புலோலி
சைவப்பிரகாச வித்தியாலயம்.

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
(தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)



ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

# பூதத்தீவுப் புதிர்கள்

**34**

சிறுவர் தொடர்



**செங்கை ஆழியான்**

எத்தனையோ தடைகளைத்தாண்டி அவர்கள் வந்திருக்கிறார்கள். யுக்திப் பூதத்தின் கோட்டைக்குள் நுழைந்ததும் வாசலுக்கு வாசல் தடைகள். நந்தவன வாசலில் கமலம் ஆசிரியை, பேத்தியைப் பார்க்கச் செல்லும் இலட்சுமி பாட்டியின் புதிரைக் கேட்டாள். 'வியாழக்கிழமை' என்பது சரியாக இருக்க, "புதன்கிழமை" என்று பதில் சொல்லி சசி மாட்டிக் கொண்டாள். மாளிகை வாசலில் வந்த யானையின் நிறமென்ன? என்று கேட்ட கோபுரந் தாங்கியின் கேள்விக்கு "கறுப்பு" என்று பிழையாகப் பதில் சொல்லி சீலன் மாட்டிக்கொண்டான்.

"தோட்டம் ஒன்று அமைத்தேன். அதன் இரண்டு பக்கங்கள் வடக்கு நோக்கியிருந்தன. யானை ஒன்று வந்தது. அதன் நிறமென்ன?"

"எந்த ஒரு தோட்டத்திலும் இரு பக்கங்கள் ஒரு திசை நோக்கி இருக்க முடியாது. அதனால் யானை வந்திருக்க முடியாது" என்று வசந்தன் பதில் சொன்னான்.

இப்படி எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்து யுக்திப் பூதத்தின் மாளிகைக்குள் வந்தாகிவிட்டது. இலக்கு நெருங்கி விட்டது. புதிர்ப்பூதம் ஒரு பிரச்சினையுடன் வழி மறிக்கிறது.

"சரி உம் பிரச்சினையைச் சொல்லும்.." என்றான் வசந்தன்.

"யார் மறுமொழி சொல்லப் போகிறீர்கள்?" என்று புதிர்ப்பூதம் கேட்டது.

"நான்" என்றாள் மாலா.

"மாலா.." என்று வசந்தன் கவலையுடன் அழைத்தான்.

"சரி.. கேள் பெண்ணே என் முன் இரண்டு குவியல்களில் தேங்காய் இருக்கிறது. ஒரு குவியலில் 30 காய்கள் உள்ளன. பெரிய காய்கள் ஒரு குவியல். சிறிய காய்கள் இன்னொரு குவியல். பெரிய காய்களை 10 ரூபாவிற்கு 2 வீதமும், சிறிய காய்களை 10 ரூபாவிற்கு 3 வீதமும் விற்குமாறு பணிக்கப்பட்டுள்ளேன். யுக்திப்பூதமோ 'விலையில் மாற்றம் செய்யாதே. 10 ரூபா நட்டம் வரத்தக்கதாக வில்' என்கிறது. அது எப்படிச் சாத்தியம்?" என்றது புதிர்ப்பூதம்.

"பெரிய தேங்காய் 2 இன் விலை 10 ரூபா. ஆகவே 30 தேங்காய்களையும் விற்றால் 150 ரூபா வரும். சிறிய தேங்காய் 3 இன் விலை 10 ரூபா. அப்படி 30 தேங்காய்களை விற்றால் 100 ரூபா வரும். ஆக 60 தேங்காய்களையும் விற்றால் 250 ரூபா வரும்" என்றாள் மாலா.

"ஆமாம். அது சரி.. விலையில் மாற்றம் செய்யாமல் 10 ரூபா நட்டத்திற்கு எப்படி விற்பது?" என்று தலையைச் சொறிந்தது புதிர்ப்பூதம்.

மாலா யோசித்துப் பார்த்தாள்.. வெகு நேரம் சிந்தனை செய்தாள். முகத்தில் கவலை படர்ந்தது.

"அப்படி விற்க முடியாது" என்றாள் மாலா.

"உமது விளக்கம் பிழை" என்றது புதிர்ப்பூதம்.

"மாலா உண்மையில் உனக்கு விடை தெரியாதா?" என்று வசந்தன் கேட்டான்.

"தெரியும்.. யாராவது ஒருவர்தான் யுக்திப்பூதத்தைக் காணலாம் என்பது சட்டமாயின், அதுக்கு நீயே தகுதியானவன்.." என்றாள் மாலா.

"இந்தப் பெண்களே இப்படித்தான்.. விட்டுக்கொடுத்து நாசமாக்கிட்டுதுகள்.." என்றது புதிர்ப்பூதம்.

வசந்தன் அன்போடு மாலாவைப் பார்த்தான்.

சரியான விடையை, மார்க்கத்தைச் சொன்னான். மாளிகைக் கதவு திறந்தது. ஆகாயத்தை முட்டும் வடிவில் யுக்திப் பூதம் அமர்ந்திருந்தது. அவனை வரவேற்று அழைத்துச் செல்ல மூன்று இளம் பெண்கள் தயாராக நின்றிருந்தார்கள்.

"என்பெயர் சொத்து"

"என் பெயர் சுகம்.."

"என்பெயர் சுதந்திரம்" என்றனர் அவர்கள் மூவரும்.

"நல்லது வணக்கம்" என்றான் வசந்தன்..

"எங்களில் யார் உம்மை ஐயனிடம் அழைத்துச் செல்வது?"

"சுதந்திரம்.." என்று வசந்தன் சிரித்தான்.

"சுதந்திரம் இருந்தால் சொத்தும் சுகமும் பின்னால் வரும்"

அவன் யுக்திப் பூதத்தின் முன் வந்து, தலை குனிந்து வணங்கினான்.

"வாரும் பிள்ளாய். உன் விடா முயற்சியையும் நுண்ணறிவையும் பாராட்டுகின்றோம். அனைத்தும் எனக்குத் தெரியும். உன்னுடன் வந்தவர்கள் மீள்வற்கு வழி இருக்கிறது. வழியைக் காட்டுவேன். அங்கு நான் வர முடியாது. இங்கிருந்து கிழக்குத் திசையில் ஒருகிலோ மீற்றர் தூரம் சென்றால், மூன்று வாசல்களோடு கூடிய கோட்டை ஒன்று எதிர்ப்படும். அதனுள் நுழைந்து உட்சென்றால் மத்தியில் ஒரு தாமரைப் பொய்கை இருக்கும். அதில் மலர்ந்திருக்கும் தாமரை மலர்களில் ஒன்றனைப் பறித்துக் கொண்டு வந்தால் அனைத்தும் சுகமாய் முடியும். ஆனால் ஒன்று நினைவு வைத்துக்கொள். கோட்டை வாசலைவிட்டு வெளியேறும் போது உன் கையில் ஒரு தாமரைப் பூவிற்கு மேல் இருக்கக்கூடாது. இம் முயற்சியில் நீ வெற்றி பெற்றால் உன்னுடன் சொத்து, சுகம், சுதந்திரம் மூவரும் வருவார்கள். நலமாக நீங்கள் ஊர் போய்ச் சேருவீர்கள்.."

"நன்றி ஐயனே.." என்றான் வசந்தன்.

"சென்று வா, வென்று வா.."

அவன் நிமிர்ந்து பார்த்தான். யுக்திப் பூதம் மறைந்துவிட்டது.

அவன் அவ்விடத்தில் சற்று நேரமும் தரித்து நிற்கவில்லை. தன்னந்தனியனாகக் கிழக்குத் திசையில் நடந்தான். விரைவிலேயே அவன் முன் கோட்டை ஒன்று எதிர்ப்பட்டது. அது தகதகவெனச் செந்நிறமாக ஒளிர்ந்தது.

அவன் கோட்டை வாசலைச் சென்றடைந்தான். வாசலில் ஆஜானுபாகுவான ஒருவன் காவலிற்கு நின்றிருந்தான். அவன் வசந்தனைத் தடுத்தான்.

"இன்னமும் புதிர்க் கேள்விகள் உள்ளனவா?" என்று சினத்துடன் வசந்தன் கேட்டான்.

"இனி உங்களைக் கேள்வி கேட்க யாருமில்லை. ஆனால் ஒரு விண்ணப்பம். அந்த விண்ணப்பத்திற்கு ஒப்புக் கொண்டால் உங்களை உள்ளே விடுவேன்" என்றான் காவற்காரன்.

"சரி என்ன விண்ணப்பம்?"

"நீங்கள் பிடுங்கி வரும் தாமரைப் பூவில் அரைவாசியையும் தந்து மேலதிகமாக ஒரு பூவையும் எனக்குத் தரவேண்டும்"

வசந்தன் சற்று யோசித்துப் பார்த்தான். பின்னர் 'சரி' என்றான்.

கோட்டை, முதல் வாசல் திறந்து கொண்டது. இரண்டாம் வாசலில் இன்னொரு காவற்காரன் நின்றிருந்தான்.

"அப்பனே ஒரு விண்ணப்பம். நீ பிடுங்கிக் கொண்டு வரும் தாமரைப் பூக்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒரு பூவையும் எனக்கு தந்துவிட வேண்டும்"

'சரி' என்றான் வசந்தன். இரண்டாவது வாசலும் அகலத் திறந்தது.

மூன்றாவது வாசல் தெரிந்தது. அதன் வாசலில் நின்றிருந்த காவற்காரன் தன் விண்ணப்பத்தைச் சொல்ல தொடங்குவதற்கு முன், "நான் பிடுங்கிவரும் தாமரைப் பூக்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒரு பூவையும் உனக்குத் தரவேண்டும். அவ்வளவுதானே?" என்று வசந்தன் கேட்டான்.

"அவ்வளவுதான் வசந்தன். ஒன்றை நினைவு வைத்துக்கொள்ளும். முதல் வாயிலை விட்டு வெளியேறும் போது உமது கையில் ஒரேயொரு தாமரைப் பூதான் இருக்க வேண்டும். கூடுதலாக இருந்தால் உமது அனைத்து முயற்சிகளும் வீணாகிவிடும்"

"நன்றி.." என்றான் வசந்தன். மூன்றாவது வாசல் திறந்தது.

தாமரைத் தடாகம் தெரிந்தது. ஆயிரக் கணக்கான பூக்கள் அதில் மலர்ந்திருந்தன. தெளிவான நீர், தாமரையிலைகளில் முத்துக்களாக உருளும் நீர்த்துளிகள், அவன் சற்று நேரம் மெய்மறந்து நின்றிருந்தான். தடாகத்தின் கரையில் சற்று ஓய்வாக அமர்ந்தான்.

'இந்த இறுதிச் சிக்கலை எப்படித் தீர்ப்பது? மூன்று வாசல் காப்பாளர்களுக்கும், பறிக்கின்ற பூக்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒரு பூவையும் கொடுத்து விட்டு வெளியேறும் போது என் கரத்தில் ஒரேயொரு பூ மட்டும் இருக்க வேண்டும். அவ்வாறாயின் நான் எத்தனை தாமரைப் பூக்கள் பறிக்க வேண்டும்? இதற்கு இறுதியில் இருந்து கணக்கிட வேண்டும்' மனதுள் அவன் கணக்கிட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு குரல், "எனக்கொரு சந்தேகம்.." என்றது.

(17 ஆம் பக்கம் பார்க்க...)



ஜனவரி 26 ஆம் திகதி வெளியீட்டிலிருந்து பின்வாங்கிய ‘எஸ்.3’, பெப்ரவரி 9 ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஹரி இயக்கத்தில் சூர்யா, அனுஷ்கா, ஸ்ருதிஹாசன், சூரி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியிருக்கும் படம் ‘சிங்கம் 3’. ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருக்கும் இப்படத்தை ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளது.

இப்படத்தின் தணிக்கை பணிகள் முடிந்து, டிசம்பர் 23 ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஆனால், தணிக்கையில் ‘யு/ஏ’ கிடைத்ததால் படக்குழு அதிர்ச்சியடைந்தது. மறுதணிக்கையில் விண்ணப்பித்து ‘யு’ சான்றிதழ் பெற்றது படக்குழு. இதனால் டிசம்பர் 23 ஆம் திகதி படத்தை வெளியிட முடியாமல் போனது.

பொங்கலுக்கு ‘பைரவா’ வெளியானதைத் தொடர்ந்து ஜனவரி 26 ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்தது. ஆனால், ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர்கள் நடத்திய போராட்டத்தால் வசூல் குறையும் என்று நினைத்து வெளியீட்டை தள்ளிவைத்தார்கள். தற்போது, பெப்ரவரி 9 ஆம் திகதி இப்படம் வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

‘கருப்பன்’ படத்தில் விஜய் சேதுபதி
மேனனுக்கு பதில் தான்யா ஒப்பந்தம்

பன்னீர் செல்வம் இயக்கத்தில் விஜ
படத்தின் படப்பிடிப்பு திண்டுக்கல் ம
பகுதிகளில் தீவிரமாக நடைபெற்று வ
வரும் இப்படத்துக்கு இமான் இசைய
வருகிறார்.

இப்படத்தின் நாயகி கதாபாத்திரத்
கீர்த்தி சுரேஷ் மற்றும் ரித்திகா சிங் உ
பேச்சுவார்த்தை நடத்தி, இறுதியாக ல
செய்தது படக்குழு.

ஆனால், நடன ஒத்திகையின் போத
மேனனால் படப்பிடிப்பில் கலந்து செ
லட்சுமி மேனனுக்கு பதிலாக தான்யா

பாபி சிம்ஹா மற்றும் கிஷோர் இரு
நடித்து வருகிறார்கள். ஒரே கட்டமாக
முடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளது.





‘நடிப்பை மட்டுமல்லாமல் அனுபவத்தையும் கற்றுக் கொண்டேன்’ - ‘நூர்’ படத்தின் படப்பிடிப்பு முடிந்த கையோடு, நெகிழ்ச்சியாக அனுபவத்தை பகிர்ந்துகொண்டார் சோனாக்ஷி சின்ஹா. பத்திரிகையாளராக நடித்திருக்கிறாராம். சபா இம்தியாஸ் எழுதிய ஹகராச்சி யூ ஆர் கில்லிங் மீ’ என்ற நாவலை அடிப்படையாகக்கொண்டு இப்படம் உருவாகியிருக்கிறது.

பிரம்மா இயக்கத்தில் ஜோதிகா நடித்துவரும் ‘மகளிர் மட்டும்’ படபிடிப்பு ஆக்ராவில் நடந்துவருகிறது. பிரபா என்னும் கதாபாத்திரத்தில் குறும்பட இயக்குநராக ஜோதிகா நடிக்கிறார். படத்துக்கான பாதி வேலைகள் முடிந்துவிட்டதாம். எப்படியும் ஜூன் மாதத்துக்குள் படம் வெளியிடப்படலாம் எனக் கூறப்படுகின்றது.







அமீர் இயக்கும் அடுத்த படம் ‘சந்தனத்தேவன்’.
வைத்து அமீர் சொன்ன கதை ஆர்யாவுக்குப் பிடித்
சகோதரர் சத்யாவும் இணைந்து நடிக்கிறார்கள். அ
முக்கிய பாத்திரத்திலும் நடிக்கிறார். ‘தர்மதுரை’க்கு
கூட்டணியில் இப்படம் உருவாகிறது. தவிர, ‘செங்
போஸ்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது சர்ச்சையைக்

ஜல்லிக்கட்டு பற்றி பெரிய நடிகர்கள் கூட கவனமாகக் கருத்து தெரிவித்துவரும் வேளையில், த்ரிஷாவின் காரசார பேச்சினால் மக்களின் சினம் த்ரிஷா பக்கம். இதனால் த்ரிஷா நடித்து வரும் படங்களின் படப்பிடிப்பை சில நாட்களுக்கு தமிழகத்தில் நடத்த முடியாது என்பதால் வேறு மாநிலங்களில் நடத்தலாம் என்றும், அப்படி நடத்தினால் ஆகும் கூடுதல் செலவுகள் பற்றியும் தயாரிப்பாளர்கள் யோசித்துவருகிறார்கள். அதுமட்டுமன்றி படத்தின் வெளியீட்டு நேரத்திலும் பிரச்சினை வரலாம் என்பதால், இயக்குநர்களும் விழிபிதுங்கி வருகிறார்களாம்.

‘ஈட்டி’ ரவி அரசு இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் படத்துக்கு ‘ஐங்கரன்’ என்று பெயரிட்டுள்ளனர். படத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு பெப்ரவரியில் தொடங்குகிறது. நாயகியாக மடோனா செபாஸ்டின் நடிக்கிறார். தற்போது ‘அடங்காதே’, ‘4பு’ படங்களில் நடித்துவருகிறார் ஜி.வி.பி.


ய் சேதுபதிக்கு நாயகியாக லட்சுமி
ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

த்தில் விஜய் சேதுபதி நடித்து வரும்
ண்டுக்கல் மற்றும் தேனியை சுற்றியுள்ள
பெற்று வருகிறது. ஏ.எம்.ரத்னம் தயாரித்து
ன் இசையமைக்க, ராம்ஜி ஒளிப்பதிவு செய்து

ாபாத்திரத்துக்கு மடோனா செபஸ்டின்,
கா சிங் உள்ளிட்ட நாயகிகளிடம்
றுதியாக லட்சுமி மேனனை ஒப்பந்தம்

யின் போது காலில் அடிபட்டதால் லட்சுமி
கலந்து கொள்ள முடியவில்லை. இதனால்,
க தான்யா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஷோர் இருவரும் முக்கிய கதாபாத்திரத்தில்
கட்டமாக மொத்த படப்பிடிப்பையும்
ட்டுள்ளது.



'துருவநட்சத்திரம்' படத்தில் விக்ரம் ஜோடியாக நடிக்கவிருப்பவர் அனு இம்மானுவேல். இவர் நிவின்பாலி ஜோடியாக மலையாளத்தில் 'ஆக்ஷன் ஹீரோ பிஜூ' படத்தில் நடித்தவர். தவிர, குழந்தை நட்சத்திரமாக சில படங்களில் நடித்திருக்கிறார். மஞ்சிமா போலவே கௌதம் மீண்டும் மலையாளக் கரையிலிருந்து இப்படத்துக்கும் நாயகியை இறக்குமதி செய்திருக்கிறார். ஒகஸ்ட்டில் படத்தை வெளியீடு செய்வதற்கு திட்டமிட்டு படப்பிடிப்பு நடந்துவருகிறது. இசை ஹாரிஸ் ஜெயராஜ்.





'நமது விவசாயிகளுக்கு ஆதரவாக இனிமேல் நான் தயாரிக்கும், இயக்கும் படங்களில் அந்நிய நாட்டு குளிர்பானங்களைப் பயன்படுத்த மாட்டேன். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் வெளிநாட்டு குளிர்பானங்கள் இருக்காது' என்று தெரிவித்துள்ளார் 'பீட்சா', 'சூது கவ்வும்' பட தயாரிப்பாளர் சி.வி.குமார். தற்பொழுது 'மாயவன்' என்ற படத்தை அவர் இயக்கிவருகிறார்.



நடிப்பைவிட, குத்துப்பாடலுக்கு குரல் கொடுப்பதில் ஆர்வம் காட்டிவருகிறார் டி.ராஜேந்தர். சமீபத்தில் விஷால் சந்திரசேகர் இசையில் மதன் கார்க்கி வரிகளில் 'பிடிச்சிருந்தா பெண்ணே சொல்லிவிடு, லவ் இருந்தால் லைட்டா அள்ளிவிடு' என்ற குத்துப்பாடலைப் பாடியிருக்கிறார் டி.ஆர்.






ரகுமான் நடிப்பில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற 'துருவங்கள் பதினாறு' படம் தெலுங்கிலும் மொழிமாற்றம் செய்யப்பட இருக்கிறது. தவிர, பாலிவுட்டின் பிரபல தயாரிப்பு நிறுவனங்கள் ஹிந்தி மொழியாக்கத்துக்கான பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. மலையாளத்திலும்விரைவில் உருவாக இருக்கிறது இப்படம். எனினும் மற்ற மொழிகளில் உருவாக இருக்கும் என் படத்தை நானே இயக்கமாட்டேன் என்கிறார் இப்படத்தின் இயக்குநர் கார்த்திக் நரேன்.



த்தேவன்'. ஜல்லிக்கட்டை மையமாக
குப் பிடித்துப்போக, ஆர்யாவும், அவரின்
றார்கள். அமீர் இயக்கி, தயாரிப்பதுடன்,
மதுரை'க்குப் பிறகு யுவன்-வைரமுத்து
விர, 'செங்கொடி மறவனின் கதை' என்று
ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

ில்
துக்கு
ளர்.
பிடிப்பு
ு.
ஸ்டின்
காதே'
றார்



# பதின்ம வயதினருக்கு 257 நிமிடங்கள்

புதினப்பூங்கா

ராஜேஸ் மணாளன்

“பிள்ளைகள் கணனிகளோடும், ஸ்மார்ட்போன்களுடனும் கழிக்கும்காலத்தைப்பற்றி பெற்றோர் அதிகம் கவலைப்படத்தேவையில்லை” என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம், ஓர் ஆய்வின் மூலம் முடிவெடுத்துள்ளது. ஒன்லைனில் அதிகமான நேரத்தைச் செலவிடுவதால் இவர்களது சமூகவியல் திறன், “மனோரீதியிலான உடல் நிலை என்பன பாதிக்கப்படுகின்றன” என்ற பயம் பல பெற்றோருக்கு இருக்கின்றது. ஆனால் இந்த ஆய்வை நடத்தியவர்கள் 120,000, 15 வயதுக்காரர்களை கண்டுரையாடிய பின்னரே “எந்தப் பிள்ளையும் இப்படிப் பாதிக்கப்படவில்லை” என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். நாளொன்றுக்கு அதிக பட்சமாக 4 மணி17 நிமிடங்கள் கழித்த பின்புஇவர்கள் கன்னிப் பாவனையை நிறுத்தினால் “எந்தப் பாதிப்பும் இல்லை” என்கிறார்கள், இவர்கள். “வீடியோ விளையாடினால் ஒரு மணி 40 நிமிடங்கள் தான் எல்லை” என்கிறார்கள். இந்த எல்லைக்கு உட்பட்டால் பிள்ளைகளுக்கு அநுகூலமே அதிகம் என்கிறது இவர்கள் ஆய்வு. இங்கேயும் எல்லை மீறினால் தொல்லைதான்.



# தீட்டாத கத்தி

“தீட்டாத கத்தியும், புத்தியும் ஒரேயடியாக மழுங்கி விடும்” என்று நமக்கு அடித்து, அடித்துப் பெரியவர்கள் சொல்வதுண்டு. நியாயந்தான். ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். “கத்தியைத் தீட்டாதே, உன் புத்தியைத் தீட்டு” என்று கண்ணதாசன் எழுதி வைத்தாலும், அவ்வப்போது கத்தியையும் தீட்டி வைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

மொட்டைக் கத்தியை வைத்துக்கொண்டு எதைச் சாதிப்பது? புத்திசாலிகள் நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

சரி, அது போகட்டும். “இனி உங்களுக்கு தீட்டும் வேலை வைக்காமல் எப்பொழுதும் கூராகவே இருக்கும் கத்தியைத் தருகிறோம் என்கிறார்கள் நாசா விஞ்ஞானிகள். “‘KNasa Chef Knife’ என்று அழைக்கப்படும் இந்தக் கத்திகள், ஏனைய கத்திகளை விட இரு மடங்கு கூராகவும் பத்து மடங்கு காலம் அதிகமாகவும் பாவனைக்கு இருக்கும்” என்கிறார்கள் இவர்கள். “200 வருட இடைவெளியில், ஒரு மேம்பட்ட நிலை கொண்ட உண்மையான தரம் மிக்க ஒரு கத்தி வருகின்றது” என்கிறார்கள் அவ்தானிகள். கலிபோர்னிய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட ஒரு மிக இறுக்கமான உலோகத்தாலான இந்தக் கத்தியை, நாசா நிறுவன விஞ்ஞானிகள் பரிசோதித்துப் பார்த்து உறுதி செய்துள்ளார்கள். “உருக்கை விட உறுதியானது. துருப்பிடிக்காது” என்கிறார்கள். விற்பனைக்கு வந்தால், விலை 100 டொலருக்குள்தான் இருக்குமாம்.

“ஆளை விடு சாமி. 15,000 ரூபா கொடுத்து கத்தி வாங்க எனக்கென்ன பைத்தியமா? 300, 400 ரூபாய் கொடுத்து வாங்கும் கத்தியை வாசல் படியில நாலு இழுப்பு இழுத்து தீட்டினால் கழுத்தும் அறுக்கலாம்”



“இவருக்கு கொஞ்சம் வாய் நீளம்” என்று இனித்திட்டாதீர்கள். “நம் ஆரோக்கியம், நம் வாயில் தான் தங்கி இருக்கின்றது” என்கிறார் இங்கிலாந்தின் மருத்துவர் ரோனா எஸ்கண்டர். வாய்க்குள் இருக்கும் பற்கள் பற்றியே இவர் சொல்ல வருகிறார். “2016 ஆம் ஆண்டின் சிறந்த இளம் பல் மருத்துவர்” என்ற விருது பெற்றவர் இவர் என்பதால் இவர் சொல்வதை நாம் அசட்டை செய்யமுடியாது. நீங்கள் பல் துலக்கும் பிரஷ் விடயத்தில் மிகக் கவனமாக இருங்கள் என்று எச்சரிக்கிறார் இவர். “பல நூறு நுண்ணிய கிருமிகளைக் காவி வைத்திருப்பது உங்கள் பிரஷ். இதைத் தண்ணீரால் கழுவுவதால் இவை அகன்றுவிடப் போவதில்லை. எவராவது உபயோகித்த பிரஷ் மறந்தும் நீங்கள் எடுத்து உபயோகித்து விடாதீர்கள்” என்று எச்சரிக்கிறார் இவர்.

இவர் சொல்லும் அறிவுரைகள் சில . உங்கள் பிரஷ் நிமிர்த்தி வைக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். மூடப்பட்டு இருந்தால் மிகவும் நன்று. முடிந்த அளவு தனியாக இருக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றி உபயோகிக்க வேண்டும். மறந்தும் பங்கு போடாதீர்கள். உங்களுக்கு தடிமன் தொல்லை என்றால் மாற்ற தயங்காதீர்கள்.

ஒழுங்கான பராமரிப்பு இல்லாமல் முரசு கரைய, பல்விழுந்து பொக்கை வாய்ச் சிரிப்பு வர- ஏனிந்த தொல்லை? காப்போம் நம் பற்களை காண்போம் இன்பம் தன்னை!





# காட்டுக்குள் ஒரு மக்டொனால்ட்ஸ்

அட பாவிப் பயல்கள். “இந்த அமெரிக்கன் அமேசன் காட்டிலும் மக்டொனால்ட்ஸ் கட்டிப்போட்டானா” என்று முறுக வேண்டாம். இலத்தீன் அமெரிக்க நாடான ஈகுவடோரில் கிழக்குப்புறமாக உள்ள மழைக்காடுகளில் உள்ள காட்டுவாசிகளுக்கு இந்தக் காடுகள்தான் மக்டொனால்ட்ஸ். கையில் ஊதுகுழாய்களுடன் திரியும் இவர்கள் இலேசான விஷம் பூசப்பட்ட அம்பை இந்த ஊதுகுழாய் வழியாக மரத்தில் இருக்கும் மிருகத்திற்கு குறி பார்த்து ஊதுவார்கள். அம்பு உடம்பில் பட மிருகம் கீழே விழும். கையில் ஹம்பெர்கர் ரெடி!

இப்படிக் கொல்லப்படும் மிருகம் எது தெரியுமா? குரங்குதான். இவர்களை Huaorani இனத்தவர்கள் என்று அழைக்கிறார்கள். 4000 க்கு குறைவானவர்களே காணப்படுகின்றார்கள். அடிக்கடி வேட்டைக்கு மரம் ஏறி இறங்குவாதாலோ தெரியவில்லை. தட்டையான பாதமும் கையிலோ காலிலோ ஆறு விரல்கள் கொண்டிருப்பது இவர்கள் தனித்துவம், ஈகுவடோரின் பரவலான பேச்சு மொழி Quechua. ஆனால் இவர்கள் பேசும் மொழியோ தனித்துவமானது. எந்த வழியிலும் இணைத்துப் பார்க்க முடியாது.

இறைவன் படைப்பின் ஆற்றலை நினைத்துப் பார்த்தால் மிஞ்சுவது மிதமிஞ்சிய வியப்புத்தான்.



# மயக்கமும்... மர்மமும்...

பகுதி - 08



நன்றி:
ஆனந்தவிகடன்



# யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி



அதிபர்
செ.மோகநாதன்

## சாதனைகள்



**2016** இல் நடைபெற்ற கோட்ட மட்டப் போட்டியில், இப்பாடசாலை மாணவன் க.டிலக்ஷன் 100 மீற்றர் ஓட்ட முதலாம் இடத்தினையும், முப்பாய்ச்சலில் முதலாம் இடத்தினையும், நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வலயமட்டப் போட்டியில், நீளம் பாய்தலில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மாகாணமட்டப் போட்டியிலும், நீளம் பாய்தலில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதோடு, தேசியமட்டப் போட்டியிலும் அவர் பங்குபற்றியுள்ளார்.

2015 இல் இப்பாடசாலையில் கல்வி கற்றுவரும் விசேடதேவையுடைய மாண வர்கள் பல சாதனைகள் படைத்துள்ளனர். அவர்களுள் ஸ்ரீதிவ்யா எனும் விசேட தேவையுடைய மாணவி க.பொ.த உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றுக் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, கற்றலில் ஈடுபடுகின்றார்.

உ.பபிந்தா எனும் விஷேட தேவையுடைய மாணவி 8A, C என்ற சிறந்த பெறுபேற்றினைப்பெற்று தனது உயர்தரக் கல்வியை மேற்கொள்கிறார்.

2015 இல் நடைபெற்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கோட்டம், வலயம், மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் இப் பாடசாலையைச் சேர்ந்த தரம் 2 மாணவன் த.ஜதுர்ஷன், நீர் நிரப்புதலில் 3 ஆம் இடத்தினையும், 100 மீற்றர் ஓட்டப்போட்டியில், முதலாம் இடத்தினையும், நீளம் பாய்தலில் முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

தரம் 3 மாணவி சு.அலிஸ்ஆஷிகா நீர் நிரப்புதலில் முதலாம் இடத்தினையும் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 2 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

தரம் 3 மாணவி யோ. அருண்யா, நீளம் பாய்தலில் முதலாம் இடத்தனையும் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தினையும், மணிகோத்து ஓடுதலில் (வலயமட்டம்) முதலாம் இடத்தனையும், மணிகோத்து ஓடுதலில் (மாகாணமட்டம்) 4 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

2016 இல் நடைபெற்ற வலயமட்ட அழகியல் போட்டியில் தரம் 2 மாணவன் [illegible].விதுரன், தனி இசைப் போட்டியில் முதலாம் இடத்தினையும், தரம் 3 மாணவன் த.ஜதுர்ஷன் 3 ஆம் இடத்தினையும், தரம் 4 மாணவி சு.அலிஸ் ஆஷிகா முதலாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

தனிநடனப் போட்டிப்பிரிவில் முதலாம் தரத்தினைச் சேர்ந்த மாணவன் ஸ்ரீ.யதுர்சன சர்மா முதலாம் இடத்தினையும், தரம் 3 மாணவன் த.ஜதுர்ஷன் முதலாம் இடத்தினையும், தரம் 4 மாணவி சு.அலிஸ் ஆஷிகா முதலாம் இடத்தினையும், தரம் 4 மாணவி யோ.அருண்யா 2 ஆம் இடத்தி னையும், தரம் 4 மாணவி ஜெ.ஜெனனி முதலாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். அத்தோடு குழு நடனத்தில் 2 ஆம் இடத்தினை இம் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

அதே ஆண்டில் நடைபெற்ற அகில இலங்கை மாற்றுத்திறனாளிகளுக்கான அழகியல் போட்டியில் குறித்த பாடசாலையின் விஷேட அலகு மாணவன் ஸ்ரீ.யதுர்சன சர்மா மகரகமவில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றினார்.

அகில இலங்கை மாற்றுத்திறனாளிகளுக்கான அழகியல் போட்டியில் இப் பாடசாலை மாணவி உ.பபிந்தா கட்டுரைப் பிரிவில் வட மாகாணத்தில் 2 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

2016 இல் நடைபெற்ற முதலமைச்சர் கிண்ண சதுரங்கப் போட்டியில், இப் பாடசாலையின் நான்கு மாணவர்கள் கோட்டமட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு வலயமட்டத்துக்கு தகுதிபெற்றனர்.

2016 இல் அகில இலங்கை தமிழ் விழா கண்டியில் நடைபெற்றது. இதன் போது கோண்டாவில் இந்துக் கல்லூரியின் இன்னிய வாத்தியக்குழுவினர் ஜனாதிபதி வரவேற்பினை வழங்கியிருந்தனர்.

கடந்த 13 ஆண்டுகளாக மீட்கப்படாமல் இருந்த பாடசாலைக்காணி 2016 ஆம் ஆண்டிலே மீட்கப்பட்டுள்ளது.

## வரலாறு

**யாழ்.** கோண்டாவிலில் பிரம்ம ஸ்ரீ முருகேசு ஐயர் வெங்கடாசல ஐயரினால் 1878 ஆம் ஆண்டு திண்ணைப் பாடசாலையாக, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

ஐந்தாம் வகுப்புவரை இயங்கிய இப்பாடசாலை 1915 இல் கனிஷ்ட பாடசாலை நிலையைப் பெற்றிருந்தது. 1892 இல் இப் பாடசாலைக்கு அரசு அங்கீகாரமளித்தது. அதனைத் தொடர்ந்து 1915 இல் கனிஷ்டப் பாடசாலையாசக உயர்வு பெற்றது. 1928 ஆம் ஆண்டு கல்வி இலாகா கனிஷ்ட பொதுத்தராரப் பத்திரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவதற்கான அங்கீகாரத்தை அளித்தது.

1932இல் சிரேஷ்ட பாடசாலையாக உருமாற்றம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து, இப்பாடசாலையை 1960 இல் அரசு பொறுப் பேற்றது. அதன் பின்னர் 1962 ஆம் ஆண்டு தொடக்கம் பெற்றோர், ஆசிரியர் சங்கம் இணைந்து பாடசாலையின் தரத்தினை உயர்த்துவதற்காக கோரிக்கைகளை முன்வைத்தனர்.

1982 இல் இப்பாடசாலை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமாக வளர்ச்சியடைந்தது. அதனைத்தொடர்ந்து, 2000 இல் 1C பாடசாலையாக க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவுடன் செயற்படத்தொடங்கியது. 2009 இல் வர்த்தகப் பிரிவும் இங்கு ஆரம்பிக்கபட்டது. 2011 இல் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டது. அத்துடன் 2013 இல் கணித விஞ்ஞானப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு 1AB பாடசாலையாக உயர்வடைந்தது. தற்பொழுது யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரியாக வளர்ச்சியடைந்துள்ளது.

பொ.குமாரசுவாமி, செல்வி பா.மார்க்கண்டு, சு.சண்முககுமார், க.தவகீஸ்வரன், ந.சிவநேசன் உட்பட பல அதிபர்கள் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்டிருந்தனர்.

தற்பொழுது செ.மோகநாதன் இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றிவருகின்றார் அவரின் கீழ் 420 மாணவர்களுக்கு 49 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

சந்திப்பு: அ.றொக்சன்

## சவால்கள்



அயலிலுள்ள போட்டிப் பாடசாலைகளினால் இப் பாடசாலையில் மாணவர்கள் இணைந்து கொள்வது மிகவும் குறைவாகவுள்ளது.

இப்பாடசாலையில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பிள்ளைகள் அதிகமாக கல்வி கற்று வருகின்றனர் இதனால் அம்மாணவர்களினால் கற்றல் உபகரணங்கள் வாங்க முடியாமல் உள்ளது.

இப்பாடசாலை 1AB பாடசாலையாக மாற்றம் பெற்றதினால், இங்கு ஆரம்பப்பிரிவு நிறுத்தப்பட்டது. இதனால் ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் தரம் 6 இல் இணைந்து கொள்ளும் தொகை இல்லாமல் போனது.

தூர இடங்களிலிருந்து இப் பாடசாலைக்கு கல்விகற்பிப்பதற்கு வருகின்ற ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதியின்மை.

இப்பாடசாலை மைதானத்தை தேசிய தரத்திற்கு மாறுவதற்கு வசதி இல்லாமை. போன்ற பிரச்சினைகள் இக்கல்லூரிக்கு பெரும் சவால்களாக உள்ளன.



# காட்டின் பாதைகளை மறிக்கும் மக்களின் பாடல்கள் 4



■ யதார்த்தன்

கடலரிப்பு, மண் அரிப்புக்களை தடுக்க கடற்கரை நிலங்களில் மரங்கள் நடப்பட வேண்டும். இதற்கு மணற்காடு நல்ல உதாரணம். அங்கிருக்கும் சவுக்குக்காடுகள் மிக அவசியமானவை. ஆனால் அது ஏற்கனவே நிறைய எரிக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது அடிக்கடி எரிக்கப்படுவதும் கவலை தருகின்றது.

எனினும் ஒப்பீட்டளவில் தற்போதுள்ள வடமாகாண விவசாய அமைச்சின் செயற்பாடுகள் கொஞ்சம் தெம்பளிக்கின்றன. சமீபத்தில் நல்லூர் திருவிழாவில் விவசாய அமைச்சின் கண்காட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றி விளங்கப்படுத்தினார்கள். அத்தோடு கார்த்திகை மாதம் மரம் நடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படுகின்றது, நாவற்குழி போன்ற நீர்த்தரவைகள் இருக்கும் கரைகளில் உவர் நீர் மரங்களை நாட்டித் தொடர்ச்சியாக அவற்றை பராமரிப்பது வரவேற்க வேண்டியது. ஆனால் இது போதுமானதாக இல்லை, மரம் நடுகை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றப்பட வேண்டும். எங்கே? எப்படி? எந்த மரத்தை நடுவது? அது எப்படியான முறைமையாக்கத்தை கொண்டிருக்க வேண்டும்? என்பதெல்லாம் குறித்த முறைமையாக்கங்கள் மூலம் மக்கள் மயப்படுத்திச் செய்யப்பட வேண்டும். அரசியல் ரீதியாக, விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசனின் மேல் பல விமர்சனங்கள் இருந்தாலும், சூழல் சார்ந்து அவருடைய அறிதல், செயற்பாடுகள் மிக முக்கியமானவை. அவர் அரசியலுக்கு வர முதலே அவருடைய சூழலியல் கட்டுரைகள் நிரம்பிய ஏழாவது ஊழி என்ற புத்தகத்தைப் படித்து அவரைப்பற்றித் தேடி, அவருடைய முயற்சியால் வந்த நங்கூரம் முதலான இதழ்களை வாசித்து இருக்கிறேன். வடக்கு மாகாண சபையின் விவசாய மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு இன்னும் வினைத்திறனாக இயங்க வேண்டும். யாழ் நிலத்தின் நீர்ப்பாசனம் சீர் செய்யப்படுவதுடன், கண்டல் காடுகள் பாதுக்காக்கப்படவும், மரப்பல்வகைமை பாதுக்காக்கப்படவும் வேண்டும். அத்துடன் மரம் நடுகையை, மக்கள் இயக்கமாக மாறவேண்டும்.

அடுத்து இரண்டு விடயங்களை சொல்ல வேண்டும் என்று நினைக்கின்றேன். முதலாவது பாதீனியம். பாதீனியம் ஒழிப்பு என்பது ஐங்கரநேசன் முதலானோர் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பு முனைப்புடன் செயற்பட்டனர், ஆனால் இன்றைக்கு அவர்கள் வைத்த, "பாதீனியத்தை வேரறுப்போம்" என்ற பாதாகைகளுக்கு கீழேயே அது வளர்ந்து செழித்துபோய் இருக்கிறது.

பாதீனியத்தைப்போலவே யாழ்ப்பாணத்தில் இன்னொரு ஆபத்தான தாவரம் பல இடங்களில் நிலத்தடி நீரை உறிஞ்சிக்கொண்டு பரவி வளர்ந்து கொண்டிருக்கிறது. கருவேல மரம். பாதீனியத்தை போலவே இதுவும் அந்நிய மரம், நிலத்தடி நீரை வீணாக்கும் மோசமான மரம். எனக்கு தெரிந்து கைதடி கோப்பாய் வீதியின் இரு மருங்கிலும் ஏராளமாய் செழித்து நிற்கின்றது. அத்தோடு கைதடியில் ஏ - 9 வீதியின் மருங்குகளிலும் நிறையவே நிற்கின்றது. வல்லை வெளியிலும் கருவேல மரங்கள் அதிகமாக காணக் கிடைக்கின்றன. அதாவது முன்பு குறிப்பிட்ட சதுப்புத் தரவை வெளிகளின் அருகில் நின்று கருவேல மரம் நிலத்தடி நீரை நாசம் செய்து கொண்டிருக்கின்றது.

இந்த இரண்டும் கண்டிப்பாக வேரோடு அழிக்கப்பட்டு முற்று முழுதாக இல்லா தொழிக்கப்பட வேண்டும். அவற்றை பிடுங்கி விட்டு அங்கே காணப்படும் நிலத்துக்குப் பொருத்தமான மரங்களை நடவேண்டும். மரங்களையும் நீர்ச் சமநிலையையும் பேணுதல் தனியாக அரசின் பொறுப்பு மட்டுமல்ல அது மக்களின் பொறுப்புமேயாகும். எனவே சமூக செயற்பாட்டு இயக்கங்கள் அதனைச்செய்ய வேண்டும்.

அடுத்த வாரமும்...

# எங்கே போய் முட்ட?

■ ச.திருச்செந்தூரன்

"திருமணத்தின் போது மணப் பெண்ணின் வீட்டார் பெண்ணுக்குக் கொடுக்கும் பணம், பொருள் மற்றும் வேறுவகையான சொத்துக்கள் யாழ்ப்பாணத்தில் 'சீதனம்' எனப்படுகின்றது. தற்காலத்தில், யாழ்ப்பாணத்துச் சீதன முறை மிகக் கடுமையானது. சமுதாய நோக்குக் கொண்டவர்களாலும், பெண்ணுரிமைக் குழுக்களாலும் பெரிதும் கண்டிக்கப்படுகின்ற ஒரு வழமையாக இது நீடித்து வருகிறது. யாழ்ப்பாணச் சீதன முறை, பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி இன்றுள்ள நிலைக்கு வந்துள்ளது" இது யாழ்ப்பாணத்துச் சீதன முறை குறித்து விக்கிபீடியா தரும் விளக்கம்.

எங்கள் சமூகத்தில் ஒரு முதுமொழி ஒன்று உண்டு. "பிடித்தாலும் புளியங் கொப்பை பார்த்து பிடி" இது ஆழ்ந்த பொருளமைதியின் பால் சொல்லப்பட்ட பழமொழிஇது பொதுவாகத் திருமண விடயத்தில் பெரியவர்களினால் பிள்ளைகளுக்குச் சொல்லப்படும் பழமொழி. நமது சமூகத்தில் சீதனம் ஒரு பெருவழக்கான விடயமாக பார்க்கப்படுவதுடன், திருமணத்தின் போது சாதி பார்ப்பதும் ஒரு உயர்ந்தவிடயமாக பார்க்கப்படுகிறது. ஒரு முறை, நண்பர்களுடனான கலந்துரையாடலில், ஒரு நண்பரிடம் "சீதனம் வாங்குவியா மச்சான்..?" எனக் கேட்க நேர்ந்தது. அவன் அளித்த பதில் "நல்ல கேள்வி கேட்டாய்..? ஊரிலேயே மற்றவங்களை விட அதிகமான சீதனம் வாங்குவேன்" எனப் பெருமையாகக் குறிப்பிட்டான். அவன் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டான் "சீதனம் வாங்கா விட்டால் ஊருக்குள் மதிக்க மாட்டார்கள்பெடியன் வலது குறைந்தவன் எனக்கதைப்பார்கள்"

ஆனால், குறித்த நண்பனிற்கு அவனது ஊரின் காற்பங்கு அளவு காணி சொந்தமாக இருந்தது. இருந்தும் நண்பனின் மனோ நிலை இது. இப்படித்தான் சமூகத்தின் கூட்டு மனோ நிலை இருக்கிறது. பெண் பிள்ளை பிறந்தால் ஒவ்வொரு தகப்பனும் தனது தலையில் பாறாங்கல்லை வைத்தது போல் தொழில் செய்யும் இடத்திலேயே தஞ்சமாகி, பகல், இரவு பாராது உழைக்கும் நிலைமை நம் சமூகத்தில் இருக்கிறது. நம் சமூகத்தில் பெரும்பான்மையாக காதல் திருமணத்திற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அதிலும் காதலிக்கும் பெண் கஷ்டப்பட்டவளாக இருப்பாளானால் குறித்த ஆணின் குடும்பத்தினர் "நஞ்சு குடித்து செத்து விடுவோம்" என மிரட்டல் நடவடிக்கைகளை செய்து விடத்தயாராகி விடுவர். இவ்வாறு தான் நமது திருமணச் சீத்துவம் இருக்கிறது.

பெற்றோர் விரும்பும் பிள்ளை "நல்ல குணம் கொண்டவளா? உன் மீது பாசம் கொண்டவளா? அறிவுள்ளவளா?" என்றவாறான கேள்விகள் கேட்கப்படுவதில்லை. அது போல் தான் பெண்வீட்டிலும் நடக்கும். இது தவிர திருமணம் பணத்தினை, அந்தஸ்தினை வைத்து தான் தீர்மானிக்கப்படுகிறது. மாறாக குணத்தை வைத்து இப்போது தீர்மானிக்கப்படுவதில்லை. இங்கு திருமணப் பேச்சின் போது பெண்ணோ, ஆணோ அரச உத்தியோகம் என்றால் தான் திருமணப் பேச்சே இடம் பெறுகிறது. மனித மனங்களை விடப் பணத்தைப் பேசும் ஒன்றாக திருமணம் மாறி இருப்பது தான் மிகப் பெரும் அபத்தம். இத்தகைய பணத்தால் தீர்மானிக்கப்படும் வாழ்தலால் தான், பின்பு "விவாகரத்து, கள்ளக்காதல், தவறான உறவு" என தலையில் அடித்துக் கொண்டு, தலைகளை அரிய அரிவாள்களையும் தூக்கிக் கொள்கிறோம்.



**நாங்களும் எங்கள் திருமணங்களும்! எங்கு போய் தலையை முட்டுவது?**

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

# இன்னும் எவரெவர் கால்களில்....

இல்லையென்றால் இது வேறொரு பரிமாணத்தை எடுத்து, எரியும் பிரச்சினையாக மாறி, குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்யக் கூடிய கொதிநிலையும், காலமும் இருந்தது.

ஆகவே தான், அரசியல் பின்புலமுள்ள சிலர் இதில் ஈடுபட்டமை, ஒரு பாதகமான விடயம். எந்த அடிப்படையிலென்றால், இப்படியான மக்கள் போராட்டங்கள் மீது, ஒரு எதிருணர்வு தோன்றும் வாய்ப்பும், இளைஞர்களுக்கு உருவாகியிருக்கும் அரசியல் உணர்வு, வெறுப்பாக மாறும் வாய்ப்பும் உள்ளது.

இனி விமர்சனங்களைப் பார்ப்போம். மூன்று பிரதான கோரிக்கைகளை வைத்து இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் "காணாமல் ஆக்கப்பட்டோர்" தொடர்பாகவே, அதிக கவனம் செலுத்தப் பட்டது. பிறகோரிக்கைகள் பெயரளவிலேயே உரையாடப்பட்டன. அதிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பற்றி அங்கிருந்த மக்களில் பெரும்பாலானவர்களுக்கு எந்த அக்கறையோ புரிதலோ இருக்கவில்லை. ஆகவே மூன்றாவது, மற்றும் நான்காவது நாளில் வருகை தந்த அரசியல் கைதிகளின் உறவினர்கள் அதிருப்தியடைந்திருந்தார்கள்.

மேலும், நான்காவது நாள் இடம்பெற்ற பெருமளவிலான சமூக வருகையையும், மாணவர் மற்றும் இளைஞர் பங்களிப்பையும், அது உருவாக்கியிருக்கக் கூடிய பெரிய அழுத்தத்தையும், உண்ணாவிரதிகள் பயன்படுத்தத் தவறியிருந்தனர்.

உண்ணாவிரதம் முடிக்கப்பட்ட நேரத்தில், அங்கிருந்த சூழல் முற்றிலும் வித்தியாசமானது. அது ஒரு வெகுஜனப் போராட்டமாக விரியும் அனைத்து அம்சங்களும், துலக்கமாக இருந்தன. ஆனால் பிரதானமாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள், ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில், அந்த முடிவை எடுத்தனர், அழுத்தமா? அல்லது நிகழ்ச்சி நிரலா? தற்செயலா? என்பதை மாசி ஒன்பதும், அதற்குப் பிறகு வரப்போகும் நாட்களுமே வெளிப்படுத்தும். இதனை நாம் அவதானிக்க வேண்டும்.

நாம் ஏற்கனவே பல போராட்டங்களை இழந்திருக்கிறோம். அதன் கோரிக்கைகளை பலவீனப்படுத்தியிருக்கிறோம். இவற்றிலிருந்து நமது சமூகம் மீண்டு, தமிழர்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியில் பலம் வாய்ந்த குரலாக மாற்றுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இப்பொழுது உருவாகியிருக்கும் புதிய சூழலிலும், அச்சங்கள் உண்டு. ஆனால் ஒன்றுதிரண்டு ஒரு சமூகமாக நாம் முடிவுகளை எடுக்கும் போதும் தீவிரமாக சிந்தித்தும் உரையாடியும் போராட்டங்களை முன்னெடுக்கும் போது மாத்திரமே, நாம் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். இதில் பல்கலைக் கழகத்திற்கும் அதன் மாணவர்களுக்கும் பெரிய பொறுப்பிருக்கிறது. தமது வளாகத்திற்குள் ஒரு பிரச்சினை வந்தால் அதனை சமூகம் கவனிக்க வேண்டும் என்று கோஷமெழுப்பும் அவர்கள், மக்களின் பிரச்சினைகளை மக்களுக்கு முன்னராகவே பிரதானப்படுத்தி அதனை முன்கொண்டு செல்ல வேண்டியவர்கள். அப்படியொரு வரலாறு யாழ். பல்கலைக்கழகத்திற்கு உண்டு. பிற பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உண்டு. அதே வேளையில் சமூக வலைத்தளங்களில் உரையாடும் பலரும் பொது விடயங்கள் தொடர்பில் மெய்யான அக்கறையுடன் செயற்படும் போது சிறியளவிலான மாற்றத்தையேனும் சமூக அசைவில் ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியிருக்கிறது.

ஆகவே, வவுனியாவில் நான்கு நாட்கள் இடம்பெற்ற போராட்டத்தின் உள் அரசியலைக் கண்டு வெறுப்புக் கொள்வதை விட "இது போன்ற நிலைக்கு மக்கள் ஏன் தொடர்ந்தும் வருகிறார்கள்" என்ற கேள்வியை ஒவ்வொருவரும் தமக்குத்தாமே கேட்டுக் கொள்ள வேண்டும். தமது பிள்ளைகளை மீட்டெடுப்பதற்காக யாருக்குப் பின்னால் செல்லவும், யாரின் காலில் விழச் சொன்னாலும் விழவும் தயாராயிருக்கும் மக்களை யார் காப்பாற்றுவது? அவர்களுக்கு வேறு என்ன தெரிவுண்டு? வழியுண்டு? இவற்றையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே வேளை இந்த மக்களை வைத்து பிழைப்பு நடத்தும் ஆட்களை இனங்கண்டு வெளிப்படுத்தி மக்களை ஏமாற்றுபவர்களை துடைத்தெறியவும் வேண்டும்.

அது இளைஞர்களால் தான் முடியும்.



## "நாங்கள் குழப்பவில்லை"

**சிவசக்தி ஆனந்தன்**

**(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்)**

"என்னைப் பொறுத்தவரை வவுனியாவில் நடந்த உண்ணாவிரதம் என்பது யாரும் தொடக்கியதல்ல. அது தானாகத் தொடங்கியது. ஒரு மக்கள் போராட்டமாகத் தொடங்கியபோது பலர் இணைந்து கொண்டனர். இந்தப் போராட்டத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நான் உந்துதலாக இருக்கவில்லை. மற்றைய சமூக அமைப்புகள் எந்தவிதத்தில் பங்களிப்புச் செய்தனவோ அதேபோலத்தான் நாமும் பங்களிப்புச் செய்தோம்.

அன்று மதியம் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சாந்தி ஆகியோர் உண்ணாவிரதம் நடக்கும் இடத்திற்கு வந்திருந்தனர். இதற்கு ஒரு குழு நியமிப்பது தொடர்பாக அவர்கள் அங்கிருந்த உண்ணாவிரதப் போராட்ட ஏற்பாட்டார்களுடன் கலந்துரையாடிய போது, சிறிது சலசலப்பு ஏற்பட்டது. அவர்கள் கோபப்பட்டனர்.

இந்த இடத்தில் ஒரு கசப்பான விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அது தமிழரசுக் கட்சி தொடர்பானது. இது போல தன்னெழுச்சியாக நடைபெற்ற போராட்டங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் நீர்த்துப்போகச் செய்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் தான். அதேபோலவே அன்றும் வந்து வாக்குறுதிகள் பல கொடுத்ததாகக் கேள்விப்பட்டோம்.

என்னைப் போறுத்தவரை இந்தப் போராட்டத்தை மக்கள் கைவிட்டுவிட்டதாகச் சொல்லமாட்டேன். இது தற்காலிகமாகக் கைவிடப்பட்டதேயொழிய முற்றுமுழுதாக இதிலிருந்து யாரும் விலகவில்லை. வாக்குறுதி கொடுத்தவர்களால் அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் அவர்கள் தொடருவார்களென நான் எண்ணுகிறேன்"



# அலம்பல் ஆச்சி



**செல்வி**

"திருப்பவும் ஒருக்கா ஏமாந்து போனம்" எண்டு பெடி பெட்டையள் புலம்பிக் கொண்டு திரியினம். உதெல்லாம் எதிர்பார்த்திருக்கோணும் தம்பியவை. "உதெல்லாம் இல்லாமை எல்லாம் முடியுமெண்டா" ஏண்டாப்பு எங்கடை பெடியள் துவக்கை தூக்க வேண்டிவந்தது? எங்கடை பிரச்சினையளுக்கு வலு சுகமா தீர்வு கிடைச்சிருக்குமெல்லோ. என்னத்தைப் பற்றி ஆச்சிபுலம்புறா எண்டு யோசிக்கிறியளோ? வவுனியாவிலை காணாமல் ஆக்கப்பட்டவர்களின்ரை உறவுகளாலை நடந்த சாகும் வரை உணவு தவிர்க்கிற போராடின ஆக்களுக்கு ஆதரவுசெய்ய வெளிக்கிட்டு, மூக்குடைபட்ட எங்கடை பெடியளின்ரை புலம்பல்களைத்தான் சொல்லுறன். தமிழ் நாட்டிலை நடைபெற்ற இளம் பெடியளின்ரை எழுச்சியைப் பாத்திட்டு, "இஞ்சையும் செய்யோணும்" எண்டு நினைச்சு, அவை செய்த அலம்பல்களை "அன்ன நடை நடக்கப்போய் காகம் தன்னடையும் கெட்டுதாம்" எண்டு பழிக்கிற அளவுக்கு விமர்சிக்கினம். ஏறுதழுவுதலுக்கு ஆதரவு சொல்லிப்போட்டு, இதுக்கு ஆதரவு தெரிவிக்காமைவிட்டா மற்றவையள் விமர்சிப்பினம் எண்டதாலைதான் இதுக்கும் காலெடுத்தவை எண்டு ஒரு கதையும் உலாவிச்சுது. "இணையத்திலை சவாடால் அடிக்கிறதுக்காக செய்திச்சினம்" எண்டும் கதைச்சினம். எது எப்பிடியெண்டாலும் பொது விடயங்களுக்கு பெடியள் ஒன்று கூடிகருத்துக்களை சொல்ல வெளிக்கிடுறது நல்ல விசயம்தானே. ஆனா, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்திலை அரசாங்கத்தோடை பெரியளவிலை பகைச்சுக் கொள்ளவும் பெடியள் தயாரில்லை. "பெடியன் டொக்டருக்கும் படிக்கோணும். போராட்டமும் வேணும்" எண்ட மனநிலை இருந்தா கொஞ்சம் கயிட்டம் தான்.

காணாமல் ஆக்கப்பட்டவையின்ரை பிரச்சினை இண்டைக்கு நேற்று ஆரம்பிச்சதில்லை. எப்ப சிங்களவங்களுக்கு எதிரா தமிழினம் நிண்டுதோ.. அண்டைக்கு பிடிச்ச சனியன் இது. உள்ளூர் பூசாரியிலை இருந்து வெளிநாட்டு மந்திரவாதியள் வரை சனியனை துலைக்கிறதுக்கு முயற்சிச்சினம். அந்த மந்திரங்களுக்கே பே ாகாத சனியன் இந்த குஞ்சு குருமான்களின்ரை எழுச்சிக்கு போகப் போகுதே? ஆனா.. பாவம் பெடி பெட்டையள். கனக்க திட்டமெல்லாம் போட்டுதுகள். ஆனா அதுக்கிடையிலை 'ஆரோ' திட்டமிட்டபடி முடிச்சு வைச்சிட்டினம். ஆதரவளிக்க தயாராகின எங்கடை பிள்ளையளுக்கு ஏமாத்தமாய் போயிட்டுது. கனபேருக்கு உது முதல் போராட்டம். கன காலத்துக்குப் பிறகு இப்பதான் பெடியள் கொஞ்சம் வெளியாலை வரத் தொடங்கியிருக்கினம். அதுகளையும் ஏமாத்துற வேலையள் தான் இஞ்சை நடக்கும். "இனி கண்டும் காணாமலிருக்கோணும்" எண்ட மனநிலைக்கு வரச்செய்து போட்டினம்.

எங்கடை மக்கள் எத்தினை காலத்துக்குதான் உப்பிடி கிடந்து உத்தரிக்கிறது. பிள்ளையள் உயிரோடை இருக்கினமோ இல்லையோ எண்டு தானே கேக்கினம். வழமை போலை அந்த ஏதிலியளை பேய்க்காட்டி போராட்டத்தை முடிச்சிட்டினம். என்ன போராட்டமெண்டாலும், எண்ணுக் கணக்குக்கு அந்த சனத்தைத் தானே கூப்பிடுறவை. அதுகளும் தங்கடை பிள்ளையளின்ரை படத்தை தூக்கிக் கொண்டு வந்திடுவினம். கண்ணீரை வைச்சு அரசியல் செய்யிற கேவலம் கெட்ட ஆக்கள் நாங்கள். என்னத்தை சொல்லுறது? பெடிபெட்டையளை பறி கொடுத்த பெற்றாருக்கும், கணவனை காணேல்லை எண்டு தேடுற மனைவிக்கும் தான் தெரியும், அந்தக் கொடுமை. ஆனா அதை வைச்சு விளையாட்டுக் காட்டுற ஆக்களுக்கு, சனாதிபதியின்ரை விருந்துதான் முக்கியம்.

கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் "கிழவியைத் தூக்கி மணையிலை வையெண்ட கதையாய் உந்த நல்லூர் நிருவாகத்தின்ரை விளையாட்டைக் கண்டியளோ?" கோவில் வீதியிலை போராட்டம் கீராட்டம் ஒண்டும் செய்யக் கூடாதெண்டு அறிவிப்பு போட்டிருக்கினம். உவங்கள் ஆரடாப்பா எங்கடை கோவில்லை வந்து சட்டம் வைக்கிறதுக்கு? உவங்களுக்கு என்ன திமிரெண்டு பார்த்திங்களோ? அப்ப இனி அரசகாரியத்துக்கு ஆரும் மந்திரியள் வலதுகையள், இடது கையள் வந்தால் கும்பிட விடுவினமோ? இல்லாட்டி கம்பிக்கு அங்காலை தானோ? புனிதங்களை மதிக்க வேண்டாமெண்டு ஒருத்தரும் சொல்லமாட்டினம். அவையவையின்ரை கடவுளுகள் அவைக்கு பெரிசுதான். ஆனா ஒரு இனத்தின்ரை போராட்டத்திலை முக்கியமான இடமா இருக்கிற ஒரு இடத்திலை எங்களுக்கு உரிமை இல்லையெண்டு சொல்லுற துணிச்சலுக்கு பின்னாலை என்ன இருக்கெண்டு பாக்கத்தான் வேணும்.

# பூதத்தீவுப் புதிர்கள்

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வசந்தன் எரிச்சல் அடைந்தான்.

"யாராவது இனிச் சந்தேகம் கேட்டால் அறைவேன்" என்றான்.

"கேட்கவில்லை.." என்று பதில் வந்தது.

வசந்தன் சிரித்துக் கொண்டான்.

பறிக்க வேண்டிய தாமரைப் பூக்களின் எண்ணிக்கை மனதில் பட்டுவிட்டது. பல தடவைகள் பங்கிட்டுச் சரி பார்த்துக்கொண்டான். குளத்தில் இறங்கித் தேவையான எண்ணிக்கையளவு தாமரைப் பூக்களைப் பறித்துக் கொண்டான். மூன்றாம் வாசல் காப்போனிடம் தான் பிடுங்கிய பூக்களில் அரைப்பங்கையும் மேலதிகமாக ஒன்றையும் கொடுத்தான். இரண்டாம் வாசல் காப்போனிடமும் அவ்வாறு கொடுத்துவிட்டு, முதலாம் வாசலுக்கு வந்தான். தன்னிடமுள்ள தாமரைப் பூக்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒரு பூவையும் அவனிடம் கொடுத்தான்.

அவன் கரத்தில் ஒரேயொரு பூ எஞ்சியது. அதனை அவன் தூக்கி ஆழமாகவும் அமைதியாகவும், பெருமிதத்துடனும் பார்த்தான். அவன் முயற்சிக்குக் கிடைத்த சான்றிதழ் அதுவாகப்பட்டது.

ஒரு கணந்தான். மின்னல் மின்னியது போன்ற ஒரு வெளிச்சம் பரவி அணைந்தது. அவன் கடற்கரையில் நின்றிருந்தான். அவன் அருகில் அவன் தோழர்கள், மூர்த்தி ஆசிரியர், கமலம் ஆசிரியை, படகோட்டி மாணிக்கம், பெரியவர் சின்னப்பு எல்லோரும் நின்றிருந்தனர். கோபுரந்தாங்கி, புதிர்ப் பூதம், சத்திரக் காரன், கமக்காரன், வேடன் அத்தனை பேரும் நின்றிருந்தனர். அந்த இராட்சத விலங்கும் நின்றிருந்தது.

எல்லோரும் மகிழ்ச்சியில் ஆரவாரித்தனர்.

படகோட்டி மாணிக்கம் படகினை இயக்கினான். அவர்கள் ஏறிக் கொண் டனர். கரையில் கோபுரந்தாங்கி, புதிர்ப் பூதம் ஏனையோர் கவலையுடன் பிரியா விடை தந்தனர்.

"போவதற்கு முன் ஒரு கேள்வி" என்றான் வசந்தன், அவர்களைப் பார்த்து.

"என்ன?" என்றது கோபுரந்தாங்கி.

"கவுண்டமணி என்ற ஒருவர் இருந் தார். அவர் சென்னை மாநகரத்திலே ஆறு வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்தார். ஒரு வீட்டிற்கு வாடகை 10 ரூபா. முதல் மாத வாடகையாக 60 ரூபா கிடைத்தது. வீட்டிற்கு வந்ததும் தான் வாங்கிய வாடகை அதிகம் எனப்பட்டது. அதனால் உசிலைமணி என்ற தனது வேலைக்காரனைக் கூப்பிட்டு, 'இந்தா 10 ரூபா. இதனைக் கொண்டுபோய் வாடகை தந்த ஆறு வீட்டுக்காரரிடமும் சமனாகப் பங்கிட்டு வழங்கிவிடு' என்று கொடுத்தார். உசிலை மணி 10 ரூபாவை பங்கிடுவது சிரமம் என்று எண்ணி அதில் 4 ரூபாவைத் தான் அமுக்கிக் கொண்டு, மிகுதி 6 ரூபாவை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபாவாக வழங்கினார். இப்பொழுது ஆறு வீட்டுக்காரர்களும் கொடுத்த வாடகை 9 ரூபாய்ப்படி 54 ரூபாவாகும். உசிலைமணி அமுக்கியது. 4 ரூபாவாகும். ஆக மொத்தம் 58 ரூபா வாகிறது. அந்த 2 ரூபா எங்கே போனது?"

படகு புறப்பட்டது. பூதங்கள் தலையைப் பிய்த்துக்கொண்டன.

"2 ரூபா எங்கே? வசந்தன், விடை யைச் சொல்லி விட்டுச் செல்.." என்ற கோபுரந்தாங்கி கத்தியது.

"எனக்கும் விடை தெரியாது" என்றான் வசந்தன்.

படகு விரைந்தது. பூதத்தீவு மெல்ல மறையத் தொடங்கியது.

அவர்கள் அனைவரும் அதனைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

★★ ★★ ★★

படகு சீராக விரைந்து கொண்டிருந்தது. அலைகளில் தாவி ஏறி அன்னப் பட்சியாக அது நீந்தியது. வசந்தன் இனந் தெரியாத ஏக்கத்துடன் இருந்தான்.

"யுக்திப் பூதத்தின் மாளிகை வாசலில் கோபுரந்தாங்கி போட்ட தேங்காய்ப் புதிரை எப்படி அவிழ்த்தாய், வசந்தன்?" எனச் சசி கேட்டாள்.

"அவர் பெரிய தேங்காய்களைப் பத்து ரூபாவிற்கு இரண்டும், சிறிய தேங்காய் களைப் பத்து ரூபாவிற்கு மூன்றுமாக விற்றார். அதில் வந்தது 250 ரூபா. நான் சொன்னேன். 30 பெரிய தேங்காய்களை யும், 30 சிறிய தேங்காய்களையும் ஒன்றாகக் கலந்துவிட்டு, 5 தேங்காய் 20 ரூபாவிற்கு விற்கும்படி. விலை மாற வில்லை. சரி தானே? 5 தேங்காய் 20 ரூபாப்படி விற்றால் மொத்தமாக எவ்வ ளவு வரும் 240 ரூபா. ஆக அவருக்கு நட்டம் 10 ரூபா. அதுதானே அவருக்கும் வேண்டும்?" என்றான் வசந்தன்.

"ஆமாம்.. அந்த 10 ரூபா எங்கே போனது?" என்று மாலா கேட்டாள்.

"கணக்கில் அப்படித்தான் வரும்" என்றான் வசந்தன்.

"வசந்தன் தாமரைத் தடாகத்தில் நீ எத்தனை பூக்கள் பறித்தாய்?" என சீலன் கேட்டான்.

"மொத்தமாக 22 தாமரைப் பூக்கள். அதில் முதற் காவற்காரனிடம் 11 பூக்க ளையும், மேலதிகமாக ஒன்றையும் சேர்த்து 12 பூக்கள் வழங்கினேன்.

அப்பொழுது என்னிடம் 10 பூக்கள் இருந்தன. அதில் அரைவாசியான 5 பூக்களையும் மேலதிகமாக ஒன்றையும் சேர்த்து மொத்தமாக 6 பூக்களை இரண் டாவது காவற்காரனிடம் கொடுத்தேன். கடைசியாக என்னிடம் 4 பூக்கள் இருந்தன. அதில் அரைவாசியாக 2 பூக்களையும் மேலதிகமாக ஒரு பூவையும் மூன்றாவது காவற்காரனிடம் வழங்கினேன். இப்பொழுது என்னிடம் ஒரு தாமரைப்பூ இருந்தது. கணக்குச் சரி" என்று வசந்தன் சிரித்தான்.

"கடைசியாகச் சொன்ன புதிருக்கு உண்மையாக எனக்கு விடை தெரியாது"

"பொய்.." என்றாள் மாலா.

"நீங்களாகவே கண்டுபிடியுங்கள்.." என்று வசந்தன் சிரித்தான்.

படகு விரைந்து கொண்டிருந்தது.

★★ ★★ ★★

காற்றின் வீச்சு சற்றுக்குறைந்தது. ஏழாற்றுப்பிரிவின் நீரோட்டத்தில் படகு தரித்து நின்றது.

"திருத்திவிட்டேன்" என்றான் மாணிக்கம்.

"அப்பாடா" என்றார் மூர்த்தி.

"அதோ நெடுந்தீவு தெரிகிறது.." என்றார் சின்னப்பு

"பூதத்தீவா.. எங்கே எங்கே?" என்று அலறியடித்தபடி மாலா விழித்தாள்.

அவளை எல்லோரும் அதிசயத்துடன் பார்த்தனர். வசந்தன் மட்டும் ஆச்சரியப் படவில்லை.

(புதிர்கள் முற்றும்)

பார்வை நயம் - 09



# நாகலட்சுமி அக்காவின் டயரிக் குறிப்பு

கணபதி சர்வானந்தா

சூரியகுமார், ஒரு சீவல்தொழிலாளியின் மகன். அரிவரி தொட்டு என்னோடு படித்தவன். அந்தக் காலத்து வழக்கப்படி, வகுப்பின் கடைசி வாங்கில் அவன் இருப்பான். ஊரின் எல்லைப் புறத்தில் இருந்தது அவனது வீடு. சற்சதுரமான சிறிய பனை ஓலைக்குடிசையின் உள்ளேயே, அவனது ஒட்டுமொத்த வாழ்க்கையும் அமைந்திருந்தது. அந்த வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழேயே சமைய லுக்காக ஒரு சிறிய குடில்.

சூரியகுமார் பள்ளிக்கூடம் வரும்போது அவ்னது அம்மா கூலிவேலைக்குப் போய்விடுவா. ஐயாவும் வீட்டுக்கு வந்திருக்கமாட்டார். வயதான ஆச்சி மட்டும் வீட்டில் இருப்பார். பெரும்பாலும் இருக்கிற பழையதை வைத்துச் சமாளித்துவிட்டு வந்துவிடுவான்.

அவன் நன்றாகப் பாடுவான். பாடசாலையில் அவனை எல்லோருக்கும் பிடிக்கும். நாகலட்சுமி அக்காவிற்கும் அவனை நன்றாகப் பிடிக்கும். நாகலட்சுமி அக்காதான் எங்கள் வகுப்பாசிரியை. அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் களில், ஆண்களைப் பெயர் சொல்லி 'வாத்தியார்' என்றும், பெண்களைப் பெயர் சொல்லி 'அக்கா' என்றும் அழைப்பது வழக்கம். அதன்படியே எமது வகுப்பு ஆசிரியை நாகலட்சுமியும் எங்களுக்கு 'நாகலட்சுமி அக்கா' ஆனார். மற்றவர்களில் அதிக அக்கறை கொண்டவர். சூரியகுமாருக்கு அவரிடமிருந்து அதிக சலுகைகள் கிடைத்தன. ஐந்தாம் வகுப்பில் என்.பீ.ரீ.ஏ சோதனையில் அவன் அதிக மார்க்ஸ் வாங்கியதற்குக் காரணம், நாகலட்சுமி அக்காதான் என்று பாடசாலை வட்டாரத்தில் பேசிக் கொண்டனர்.

ஆறாம் வகுப்பிற்குப் பிறகு, எனது கிராமத்துப் பாடசாலையில் இருந்து விலகி, நான் நகரத்திற்குச் சென்றாலும், விடுமுறைகளில் வரும்போது சூரியகுமாரைச் சந்திப்பதுண்டு. நாகலட்சுமி அக்காவின் அனுசரணையிலேயே அவன் ஏ.எல் வரை சென்று பல்கலைக் கழகத்தில் பௌதீக விஞ்ஞானத் துறையில் படிப்பதற்குத் தேர் வாகினான். அவன் நாகலட்சுமி அக்காவிற்கு புடவையொன்றைக் கொடுத்து அந்த சந்தோஷத்தை கொண்டாடியதாகப் பின்னர் நாகலட்சுமி அக்கா மூலம் அறிந்து கொண்டேன். போர் உக்கிரமான சமயம், ஊருக்கு வருவதை நிறுத்திக் கொண்டேன். ஊராரும் இடம்பெயர ஆரம்பிக்க, தொடர்புகளும் அருகத் தொடங்கின.

பல்கலைக்கழகத்திற்குப் போனாலும் அவ்வப்போது வந்து நாகலட்சுமி அக்கா வைப் பார்த்துச் செல்லும் சூரியகுமாரின் வரவு திடீரென இல்லாது போய்விட்டது. ஒருநாள் அவனது வீடு வரை போய், அவனைப்பற்றி விசாரிப்பதற்காகப் புறப்பட்ட நாகலட்சுமி அக்காவை, அவரது படலைக்கருகில் முன்பின் அறியாத இரண்டு இளைஞர்கள் வழிமறித்தனர். "நீங்கள் தானே நாகலட்சுமி அக்கா?.." 'ஓம்' எனத் தலையசைக்க முன்னர் அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் சென்றுவிட்டனர்.

"நாகலட்சுமி அக்காவுக்கு எழுதுவது! முதலில் என்னை மன்னிக்கவும், என்னைச் சுற்றி நடக்கிறதைப் பார்த்துக் கொண்டு என்னாலை இருக்கேலாமைப் போச்சு. நான் இயக்கத்துக்குப் போயிட்டன். வெகுவிரைவில் உங்களை ஒரு முழு மனிதனாக வந்து சந்திப்பன். அப்ப என்னைத் திட்டமாட்டியள். நீங்கள் சுகமாக இருக்க வேணும். அதைத்தான் ஆண்டவனிடம் நான் தினமும் வேண்டுவது. இப்படிக்கு - கீழ்படிவுள்ள மாணவன் - சூரியகுமார்"

- என எழுதப்பட்டிருந்தது. சில நிமிடங்களில் நாகலட்சுமி அக்காவின் மனதில் எத்தனையோ ஆயிரம் அடிகள் நீளமான திரைப்படமொன்று ஓடி மறைந்தது. உடல் முழுவதும் வியர்வைத் துளிகள் பூத்திருந்தன. சில நிமிடங்கள் இருண்ட உலகொன்றில் தான் இருப்பதாக ஒரு பிரமை ஏற்பட்டது.

சில மாதங்களின் பின்னர் காமாலை நோயினால் பீடிக்கப்பட்டிருந்த நாகலட்சுமி அக்கா மரணித்துப் போனார். இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நாகலட்சுமி அக்காவின் நண்பி அங்கு நின்றவர்களின் காதுக்குள் ஏதெதோ குசுகுசுத்தபடி நின்றார். சிலர் அதை ஏற்கமறுத்தனர். இருந்தும் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார் நாகலட்சுமி அக்காவின் நண்பி.

இரவு நடுநிசியைத் தாண்டியிருக்கும். ஆமிக்காரர்களின் வாகனங்களைத் தொடர்ந்து சில சப்பாத்துச் சத்தங்கள் கேட்டன. ஒரு ஆமிக்காரன் மட்டும் உள்ளே வந்து விசாரித்துவிட்டுச் சென்றான். தொடர்ந்து நாய்கள் குரைக்கும் சத்தங்கள் ஓயாது கேட்டுக் கொண்டே இருந்தன. நாகலட்சுமி அக்காவின் கட்டிலைச் சுற்றி இருந்த அனைவரும் உறக்கத்தில் இருந்தனர். ஓரிரு ஆண்கள் மட்டும் படலைக்கருகில் இருந்து சுருட்டு, வெற்றிலை சகிதம் பேசிக்கொண்டிருந்தனர். திடீரென இரு இளைஞர்கள் அங்கு வந்து, அங்கிருந்தவர்களுள் ஒருவரை மட்டும் தனியாக அழைத்து விடயத்தைச் சொன்னார்கள். சில நிமிடங்களில் விபூதி, குங்குமம் தரித்த ஒரு இளைஞன் சாரம், சேட்டுடன் வந்தான். நாகலட்சுமி அக்காவின் கால்களைத் தொட்டு வணங்கினான். அவனது கண்ணீர்த்துளிகள் அந்தக் கால்களை ஈரமாக்கின. சில நிமிடத்தில் அவன் புறப்படத் தயாரானான். நாகலட்சுமி அக்காவின் நண்பி அந்த இளைஞனை ஒரு ஒதுக்குப் புறமாகக் கொண்டுபோய் நாகலட்சுமியின் டயறியைக் காண்பித்தார்.

"என்ரை மரணம் சூரியகுமாருக்கு அறிவிக்கப்பட வேணும். அவன் எங்கையி ருந்தாலும் வருவான். அடுத்த பிறவி ஒன்று உண்டென்றால் அப்பவும் அவன் எனக்கு மாணவனாக வரவேணும் என்றதுதான் எனது விருப்பம்" என எழுதப்பட்ட பக்கத்தைக் காட்டி விபரத்தை சொன்னபோது, அடக்க முடியாமல் விசும்பினான் அந்த இளைஞன். சூரியகுமார் பற்றி நாகலட்சுமி அக்கா தனக்குச்சொன்ன அத்தனை விபரங்களையும் அந்த இளைஞனுக்குச் சொன்னார் நாகலட்சுமி அக்காவின் நண்பி.

டயறியின் அந்தப் பக்கத்தை மட்டும் கேட்டுப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான் அந்த இளைஞன். வந்தது சூரியகுமார் என்று நாகலட்சுமி அக்காவின் நண்பிக்கும், அங்கிருந்த இன்னொருவருக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

பின்னர் ஒரு பொழுது, போரிலே மரணித்த சூரியகுமாரனோடு கடைசிவரை யிருந்த அவனது மணிப்பேர்சில் "நாகலட்சுமி அக்காவின் டயறிக் குறிப்பைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை" என்று அவனுடனிருந்தவர்கள் சொன்னார்கள்.

**ஒன்றை திரும்பத் திரும்ப எண்ணுவதே தியானம். அத்தகைய தியானம் நிறை வேற்றப்படும் என்கிறது ஆன்மிகம்.**



# உள்ளும் புறமும் இருந்து....

## எழுத்தாளர் தேவகாந்தனுடனான உரையாடல்

நேர்காணல்:
**கணபதி சர்வானந்தா**

● **ஆரம்பத்தில் பத்திரிகையில் பணிபுரிபவராக அல்லது ஒரு பத்திரிகையாளராக இருந்திருக்கிறீர்கள் என தங்கள் பற்றிய முற்குறிப்புகள் சொல்லுகின்றன. அந்தத் தளத்திலிருந்து கதை சொல்லி தேவகாந்தனாக மாறியது எப்படி? என்று அறிய ஆர்வமாக இருக்கிறோம். சொல்லமுடியுமா?**

வாசிப்புத்தான் எனது ஆரம்பம். வாசிப்புத்தான் என்னை எழுதத்தூண்டியது. அதையே எனது எழுத்தின் மூலம் என்றும் குறிப்பிட விரும்புகிறேன். ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றுகின்ற சமயத்தில்தான் நான் எழுதத்தொடங்கியிருந்தேன். அப்போதுதான் எனது எழுத்துக்களும் வெளிவர ஆரம்பித்திருந்தன. ஈழநாட்டில் பணியாற்றினாலும் எனது முதலாவது சிறுகதையான "குருடர்கள்" என்ற படைப்பு மலையகத்தைத் தளமாகக் கொண்டு வெளிவந்த 'செய்தி' என்ற பத்திரிகையிலேயே பிரசுரமாகியது. அதைத் தொடர்ந்து, மல்லிகை சிந்தாமணி ஆகிய தமிழ் இதழ்களிலும் எனது எழுத்துக்கள் வெளிவரத் தொடங்கின. மொத்தம் இருபத்தைந்து சிறுகதைகள்வரை எழுதினாலும் அவற்றினுள் தற்போது நான்கு சிறுகதைகள் மட்டுமே எனது கைவசம் உண்டு. அதுவும் கடந்தமுறை நான் இங்கு வந்தபோது தேடிப்பெற்றுக் கொண்டவை.

இதற்கு மேற்பட்ட எனது எழுத்துக்கள், 1984 ஆம் ஆண்டளவில், தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்து சென்ற பின் வெளிவந்தவை.
அங்கு சென்ற பின்னாலும் ஒரு வருடம் என்னால் எழுத முடியவில்லை. இருந்தும் லேசான வாசிப்பில் கவனம் இருந்தது. அதன் பின்னர் "அங்கு தொடர்ந்து எப்படி இருக்கப் போகிறோம்?" என்பது பற்றிய ஒரு மேலோட்டமான சிந்தனையும் எனக்குக் கிட்டியது. அதன் பின்னர்தான், நாவல் ஒன்றை எழுதத் தொடங்கினேன். தானாகப் பிறந்த அந்த நாவலுக்கு "உயிர்ப்பயணம்" என்று பெயரிட்டேன். அது எனது சொந்த முயற்சியினால் வெளிவந்ததாகத்தான் சொல்ல வேண்டும். அதற்கடுத்தாற்போல எழுதி வெளிவந்தது. "எழுதாத சரித்திரங்கள்" என்ற குறுநாவல் தொகுப்பு. அதை "காந்தளகம்" என்ற பதிப்பகம் வெளியிட்டிருந்தது. என்னைப் பொறுத்தவரை "எழுதாத சரித்திரங்கள்" என்ற குறுநாவல் தொகுப்பிலிருந்த முதல் இரண்டு குறுநாவல்களும் உயிர்ப் பயணத்திற்கு முன்பு எழுதியவை, அவை அப்போது செழுமைப்படாமலும், முழுமைப் படாமலும் இருந்ததனால், வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. அதற்குப் பின்னர் "விதி" என்ற நாவல் வெளிவந்தது.

● **தாங்கள் எழுதிய நாவல்களில் "விதி" என்ற நாவலை விசேடமாகக் குறிப்பிடுகின்றனர். ஏன்? அப்படி என்ன தனித்துவம் அந்த நாவலுக்கு இருக்கிறது?**

"விதி" என்ற நாவலை விசேஷமாகச் சொல்வது ஏனெனில், 1983ஆம் ஆண்டுக் கலவரத்திலலே வவுனியா



காந்தீயத்திற்கு நேர்ந்த கதியையும், அங்கிருந்த மலையகத் தமிழர்கள் எப்படி தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்து சென்றார்கள்? என்றும், அப்படிச் சென்றவர்கள், சிலரால் எப்படி வழிநடத்தப்பட்டார்கள்? என்றும் அதிலிருந்து தப்பி எவ்வாறு அவர்கள் தமக்குரிய வாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள் என்றதையும் பற்றிய கதை விதி. விதி என்பதை அவர் "தலைவிதி" என்ற அர்த்தத்தில் பாராது, சமூகம் ஒருவர்மீது செலுத்திக் கொண்டிருக்கும் ஆதிக்கத்தைத்தான் விதி என்று பார்க்க முற்படுகிறேன். நடந்தது ஒரு "சமூகவிதி" என்று தான் அர்த்தப்படுத்த விரும்புகிறேன். இந்த சமூகத்தின் இயக்கம் இப்படி இருந்து கொண்டிருந்தால். இப்படித்தான் இது நடக்கும் என்ற கருத்தைத்தான் அதில் நான் சொல்ல முற்பட்டிருக்கிறேன் இதற்குப் பின்னணியாக இனப்பிரச்சனை வந்தது.

● **தொடர்ந்து, எழுத்தாளனாவதற்கு முன்னர் பாடசாலைக் காலங்களிலும்சரி, அதற்கு முற்பட்ட காலங்களிலும்சரி உங்களை எழுதத் தூண்டிய காரணிகள், அதற்கு முன்னுதாரணமாயிருந்தவர்கள் உங்கள் வாசிப்புக்கள் மற்றும் அதற்கு வழிசமைத்த எழுத்துக்கள் என்ற அடிப்படையில் எந்த விதமான சம்பவங்களை மீள எண்ணிப்பார்க்க விரும்புகிறீர்கள்.**

முன்னர் சொன்னதுபோல, ஆரம்பம் வாசிப்புத்தான். அது எப்போது ஆரம்பித்தது? எப்படி எனக்குள் புகுந்தது என்று சொல்வது கஷ்டமானவிடயம். ஆனால், கதை கேட்பதென்ற பாரம்பரியம் எங்களது குடும்பத்தில் இருந்தது. ஆர்ம்பத்தில் அவ்வப்போது அம்மா சொன்ன, அவர் வாழ்க்கை பற்றிய கதைகளும், சமூகக்கதைகளும் அதைத் தொடர்ந்து கேட்ட நீதிக்கதைகளும், மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற கதைகளும் கேட்கக் கேட்கவே, இந்தக் கதைகளைப் படிக்கக் கூடிய ஆர்வம் எனக்கு வந்தது என்று பொதுவாகச் சொல்லலாம். எனது ஞாபகத்திற்கு எட்டிய வகையில் விரும்பியோ அல்லது விரும்பாமலோ எனக்குக் கிடைத்த முதல் நாவல், ஒரு துப்பறியும் கதை என்றுதான் சொல்லுவேன். அந்த வயதில் எனக்குப் பிடித்த எழுத்தாளராக நா. பார்த்தசாரதியைத்தான் சொல்லுவேன். பொன்விலங்கு, குறிஞ்சிமலர், சரித்திர நாவலான பாண்டிமாதேவி, கபாடபுரம், போன்ற கதைகளில் எதை எடுத்துக் கொண்டாலும் அதர்மத்திற்கொதிரான கதாநாயகனின் போராட்டத்தை வெகு அழகாகவும் ஆணித்தரமாகவும் சொல்லியிருப்பார். அந்தவகையில் அன்று அவற்றை மிகவும் விரும்பி வாசித்தேன்.

ஆனால் இன்று எனதுபட்டியலில் அவரது நாவல் இருக்கா? என்றால் இல்லை என்பது தான் பதிலாக வரும். அடுத்து குறிப்பாகச் சொல்லக் கூடியவர் ஜானகிராமன். அவருடைய நாவல்களில் அக உணர்வை மிகவும் அழகாகச் சித்தரிக்கக் கூடியதான வரிகள் நிறைந்திருக்கும். அந்த ஆர்வம் தொடர்ந்து கொண்டிருக்கின்ற சமயத்தில் எதிர்பாரதவிதமாக மார்க்சிய ஈடுபாடும் அத்தகைய சிந்ததாந்தத்திற்கு அனுசரணையான வாசிப்புக்களும் அதிகம் இருந்தாலும் தொடர்ந்து எழுதிய சிறுகதைகள் எல்லாம் இந்த மார்க்சியத்திற்கு அழுத்தம் கொடுக்காதவைகளாகத் தான் இருந்தன. அப்போது எனக்குள் ஒரு தெளிவிருந்தது. கட்சி அரசியல்வேறு நாங்கள் ஒரு சிந்தாந்தத்தைக் கொண்டு ஒழுகுவதென்பது வேறு இலக்கியம் என்பது வேறு. இந்த எண்ணங்கள் தான் நான் தமிழ்நாடு போகும் போது எனக்குள்ளிருந்தன.

● **தமிழ் நாட்டில் நீங்கள் நடத்திய 'இலக்கு' சஞ்சிகை பற்றியும் அதில் நீங்கள் கண்ட அனுபவங்கள் பற்றியும் சர்வதேச இலக்கியங்களில் காணப்பட்ட பின்நவீனத்துவத்தை பின்னமைப்பியலை உங்கள் எழுத்துக்களில் கையாண்டது பற்றியும் உங்கள் கருத்து?**

1984 நல்ல தருணமாயிருந்தது. நான் தமிழ்நாட்டுக்குப் போனகாலம் 1980க்கு முன்பின்னாகத்தான் பின் நவீனத்துவம், பின்னமைப்பியல் சம்பந்தமான உரையாடல்கள் அங்கே அதிகரித்திருந்தன. அந்த நேரத்தில் எனக்கு அவை புது விடயங்களாகப் பட்டன. இந்த நேரத்தில் மார்க்சிய அரசியல் மற்றும் இலக்கிய எண்ணங்களுடன் அங்கு போயிருந்த நான் ஆரம்பத்தில் நாவல்களையும், சிறுகதைகளையும் எனது பழைய பாணியிலே எழுதினாலும், இந்த நவீனத்துவச் சிந்தனைகளுக்குள் சென்ற பின்னால் ஓரளவுக்கு எனது நடையும் சிந்தனையும் மாறியதாகத்தான் சொல்வேன்.

ஆனால், காலப்போக்கிலேதான் எனக்குத் தெரிந்தது," பின்னமைப்புவாதமென்பது மார்க்சியத்தின் மேற்கொண்ட வளர்ச்சியே" என்று மார்க்சிசத்துக்கு எதிராகப் பின் நவீனத்துவம் இல்லையென்று புரிந்து கொண்டேன். இதில் இருந்து எனது முயற்சிக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு ஏதாவது செய்யலாமா என்ற எண்ணத்திலேயும் இலங்கையன் என்றவகையிலும் என்னால் செய்யக் கூடியது ஒரு சிறுபத்திரிகை அல்லது சிறுசஞ்சிகை என்றதை அறிந்துகொண்டேன். சிறுபத்திரிகை ஒன்றை ஆரம்பித்தேன். 'இலக்கு' என்று அதற்குப் பெயரிட்டேன் அதை ஆரம்பித்தபோதே வெகுவான கவனத்தைப் பெற்றிருந்தது. காலாண்டுச் சஞ்சிகையாக வெளிவந்த இதழை, மூன்றுக்குமேல் ஒழுங்காக வெளிக்கொண்டுவர முடியாதநிலை தென்பட்டாலும், மொத்தம் பத்து இதழ்களை வெளிக்கொண்டு வந்திருந்தேன். இதிலுள்ள சிறப்பு என்னவென்றால், வந்த ஒன்பது இதழ்களும் சிறப்பு மலர்களாக மலர்ந்திருந்தன. பத்தாவது மலருக்குமேல் என்னால் சஞ்சிகையை வெளியிட முடியாது போய்விட்டது.

அதுவரை சஞ்சிகையை வெளிக் கொணர்வதில் பல சிரமங்களை நான் எதிர்நோக்கியிருந்தாலும் அதில் ஒரு வித சந்தோஷமும் திருப்தியும் இருந்ததை உணர்ந்து கொண்டேன். இத்தகைய அனுபவங்களுக்குப் பின்னர், எழுதத்தொடங்கும் போது, எனது எழுத்திலும், அவை எழுதப்படுகின்ற நடையிலும் முன்பிருந்த போக்கை என்னால் காணமுடியாதிருந்தது. அந்த நேரத்தில் ஒரு புதுவித போக்கோடு எழுதி வெளிவந்ததுதான் "கனவுச்சிறை" என்ற நாவல்.

அதை ஒரு செவ்வியல் தன்மை கொண்ட நாவல் என்று சொல்லலாம். பின் நவீனத்துவக் கூறுகள் என்று சொல்லக் கூடியதாக அதில் ஒன்றும் இல்லை. இருந்தும் மரபார்ந்த இலக்கிய முறைமைகளை மீறி ஒருவகையான கட்டுமான உத்திகளோடு எழுதப்பட்ட நாவல் இப்படியான எழுத்துக்கு முற்று முழுதாக இல்லாவிட்டாலும் பின்நவீனத்துவமே காரணமாயிருந்திருக்கிறது. இப்படியான விடயங்கள் இலக்கியத்திற்கும் இலக்கிய விமர்சனத்துக்கும் மிகவும் தேவையானவை என்பது எனது கருத்து. இப்படியிருந்தநான், 2004 இல் கனடா பயணமானேன். ●

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக, ஈழத்து இலக்கிய உலகத்தின் உள்ளும், புறமும் இருந்து அதற்குப் புதுவடிவம் கொடுத்து வருபவர் தேவகாந்தன். இவர் எழுதிய எழுத்துக்களின் பட்டியலில் இறுதியாகக் காணப்படுவது கதாகாலம். அந்தப் படைப்பினூடாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில், புகழ் பெற்ற மகாபாரதத்தை, அறிவியலின் அடிப்படையில் பார்க்க முற்பட்டிருக்கிறார்,அவர். மற்றைய எழுத்தாளர்களோடு ஒப்பிடுகையில் எதையும் ஒரு மாறுபட்ட தளத்திலிருந்து பார்ப்பதைத் தன் இயல்பாகக் கொண்டவர், அவர். எழுத்துலக அனுபவத்துடன், புகழ்பெற்ற திரைப்படங்களில் பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு.

ஈழத்து இலக்கியத்துறையின் முக்கிய பங்காளியாக இருக்கின்ற தேவகாந்தன், புலம் பெயர்ந்து, கனடாவில் வாழ்ந்து வருபவர். அவர் அண்மையில் இலங்கை வந்தபோது தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.



## இடியப்பம்

இடியப்பம் அல்லது இடியாப்பம் என்பது அரிசி மாவினால் தயாரிக்கப்படும் ஒருவகை உணவாகும். இந்தியாவில் கேரள மாநிலத்திலும், இலங்கையிலும் அதிக அளவில் உண்ணப்படுகிறது.

இலங்கைத் தமிழர் மத்தியில் இது ஒரு முக்கிய உணவு வகையாக உள்ளது. இது அரிசி மாவிலேயே செய்யப்படுகின்றது. கோதுமை மாவும் பயன்படுகிறது. இடியப்பம் பிழிவதற்கான சிறு உபகரணம் இடியப்ப உரல் ஆகும்.

இலங்கை உணவு முறையில் இடியப்பம் சம்பல் என்னும் தேங்காயினால் செய்யப்பட்ட உணவுடனும் சொதி எனப்படும் நீர்ம உணவுடனும் சேர்த்து உண்ணப்படுகிறது. பொதுவாக அரிசிமா உணவு.

முறைகள் சுதேச உணவு முறைகளாகவும், மரபார்ந்த ஆரோக்கியம் மிக்க உணவு முறைகளாகவும் கொள்ளப்படுகின்றன. இலங்கைத் தமிழர் மற்றும் கேரள பண்பாடுகள் உணவு விடயத்திலும் அதிகநெருக்கம் கொண்ட இடியப்பம் ,பிட்டு முதலியன இந்நிலங்களின் மரபுணவாகக் கொள்ளப்படக்கூடியன.


## அண்ணமார் வழிபாடு



**வட** இலங்கையில் அண்ணமார் வழிபாடு இன்றும் கைக்கொள்ளப்படும் நாட்டாரியல் மரபுகளில் ஒன்றாகும். அண்ணமார், வட இலங்கையில் ஒரு சாதிக்குரிய கடவுளாகவே கருதப்பட்டு வருகிறார்.

நீண்டகாலமாகவே இருந்து வருகின்ற இவ் வழிபாடு, வலுவான சமஸ்கிருத மயமாக்க அலைகளுக்கு மத்தியிலும், இன்றும் நிலைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வழிபாடு நடைபெற்றுவரும் சில இடங்களிலுள்ள உள்ளூர்க் கதைகளும், யாழ்ப்பாணத்துப் பழைய நூல்கள் சிலவும், இவ்வழிபாடு கடவுள் தன்மை பெற்ற முன்னோர் வணக்கத்திலிருந்து தோன்றியதாகக் காட்டுகின்றன. ஆனாலும். அண்ணமார் வழிபாட்டைப் புராணங்களுடன் தொடர்புபடுத்தும் கதைகளும் வழங்கி வருகின்றன.

## முக்குவச் சட்டம்


MUKKUVA LAW:

THE RULES OF SUCCESSION AMONG

THE MUKKUVARS OF CEYLON.

C. BRITO,

COLOMBO:

1876.

**மு**க்குவர் சட்டம் என்பது மட்டக்களப்பு பகுதியில் வழங்கப்பட்ட வழக்கங்களை முதன்மையாக வைத்து ஆதிக்க வர்க்க ஆளுமைகளைக் கொண்டு ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட சட்டம் ஆகும்.

“பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டது போல் “சமூகத்தில் மக்கள் நடத்தைக்கான முழுமையான விதிகளாக இச்சட்டங்களை விளங்கிக்கொள்வதனால் இவை ஆக்கிரமிப்புச் செலுத்தும் குழுவின் விருப்பத்தை வெளிப்படுத்துவதோடு சமூகத் தொடர்புகளையும் பொது ஒழுங்குகளையும் ஆக்கிரமிக்கும் குழுவிற்கு வாய்ப்பளிக்கத்தக்க வகையில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.”

ஒல்லாந்தர் உள்ளூர் பிரச்சினைகளில் ஈடுபடாமல் ஆதிக்க வகுப்பின் மூலம் ஆட்சியை கட்டுப்படுத்தும் தந்திரத்தின் நோக்கத்துக்கமையவே தேசவழமைச் சட்டத்தை அப்போதைய மட்டக்களப்பு ஆதிக்க வகுப்பின் ஆளுமைகளைக் கொண்டு தொகுத்தனர்.

அதுவரைக்கு தமிழர்கள் எழுதப்பட்ட சட்டம் எதனையும் மட்டக்களப்பில் பின்பற்றியதாக தெரியவில்லை.

## இலங்கையின் முதல் திரைப்படம்

“சமுதாயம் இலங்கையில் தயாரிக்கப்பெற்ற முதல் தமிழ்த் திரைப் படம். 1962 ஆம் ஆண்டில் வெளிவந்த இப்படத்தை தயாரித்து இயக்கியவர் ஹென்றி சந்திரவன்சு. இத்திரைப்படம் 16 மிமீ அகலத்திலேயே வெளிவந்தது. அறிஞர் அண்ணாதுரை எழுதிய வேலைக்காரி கதையைத் தழுவி இத்திரைப்படம் எடுக்கப்பட்டது. திரைக்கதை, வசனம், மற்றும் பாடல்களை ஜீவா நாவுக்கரசன் எழுதினார். இலங்கைக்கே உரித்தான திரைப்பட வரலாற்றினை தொடக்கி வைத்த படமாக இப்படம் காணப்படுகின்றது.



## பறை மேளக் கூத்து



**பறை**மேளக் கூத்து வள்ளுவர் சமூகத்தினரால் மட்டக்களப்பில் அளிக்கை செய்யப்பட்டு வரும் ஒரு பாரம்பரிய கலை வடிவமாகும்.

பறைமேளக் கூத்து வள்ளுவர் சமூகத்திற்குரியதாக விளங்கியதற்குக் காரணம் அது அந்தச் சமூகத்தினரின் பிழைப்பூதியத் தொழில் முயற்சியின் ஒரு பகுதியாக இணைந்திருந்தமையாகும்.

ஈழத்தின் சமூக அமைப்பில் வள்ளுவர் சமூகம் இணையாக ஏற்கப்படாத (அங்கீகாரம் அற்ற) சமூகமாகவே வாழ்ந்து வருகின்றனர்.


பறையடித்தல் இவர்களின் குலத் தொழிலாகும். பறையடித்தல் மூலமே தங்களுக்கான பிழைப்பூதியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். பறையடித்தலை ஆலய நிகழ்ச்சிகள், மரண வீடுகள் என்பனவற்றில் அளிக்கை செய்தனர். ஆலய முன்றல், பிண (பிரேத) ஊர்வலம் என்பனவற்றின் போதும் பறைமேளக் கூத்தினை அளிக்கை செய்வது வழக்கம். பிண (பிரேத) ஊர்வலத்தின் போது பறைமேளக் கூத்தின் சில பகுதிகள் “சந்தி மறித்து ஆடுதல்” என்னும் பெயரில் இடம்பெறும்.

மட்டக்களப்பில் அளிக்கை செய்யப்படும் பாரம்பரிய கலை வடிவங்களில் மத்தளம், சல்லரி என்னும் இசைக்கருவிகளே (வாத்தியங்களே) பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் பறைமேளக் கூத்தில் பயன்படுத்தப்படும் பறை, சொர்ணாலி என்பன பாரம்பரிய அரங்க வடிவங்கள்.

எவற்றிலும் பாவிக்கப்படுவதில்லை. இவை பறைமேளக் கூத்திற்கே தனிச் சிறப்புடைய இசைக்கருவிகளாகக் (வாத்தியங்களாகக்) கொள்ளப்படுகின்றன.

# அழுதுணிக் குமார்களும் 'விக்கிரமனிசமும்'



| உமாஜி

எங்கள் குழுவுக்கு அணுக்கமான இன்னொரு நண்பர் குழுவிலிருந்த குமார் ஒருவர், தனது பதினெட்டாவது காதல் முயற்சி தோற்றபோதும் 'காதல்ங்கிறது ஒருமுறைதான்' வசனத்தை சீரியசாகப் பேசிக் கொண்டிருந்தார்.

இது ஒருவிதமான புரட்சியையே ஏற்படுத்தியது. குமார்கள் தாங்கள் தியாகம் செய்ததாக நம்பிக் கொண்டதில் அவர்களுக்கு ஒருவித பெருமிதத்தையும், நண்பர்களுக்கு நிம்மதியையும் ஒருங்கே கொடுத்தன என்றால் அது மிகையாகாது.

இன்னும் சில குமார்களை நேரடியாக 'எடுபிடி' அப்பாயிண்ட்மென்ட் கொடுத்து வைத்திருப்பார்கள் பெண்கள். இந்தவகைக் குமார்கள் தம்மை ஒரு லட்சியக் காதலானாகவே கருதிக் கொண்டு ரகசியமாகக் காதல் செய்து வருவார்கள். காதலை தெரிவிக்க சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். தம் காதலியினதும்(?!) தமக்குமான ரசனைகள் ஒத்துப் போவதையும், போகாவிட்டாலும் வலுக் கட்டாயமாகப் போகவைத்தும் அவருக்குப் பிடித்ததெல்லாம் தனக்கும் பிடிப்பதான பிரமையிலும் - அரிதாக உண்மையாகவும், அடிக்கடி இருவர் விருப்பங்களைச் சோதித்துப் பார்த்து, திருப்திப்பட்டு காதல் வளருவதான பிரமையுடன் - மொத்தத்தில் பிரமை பிடித்து வாழ்ந்து வருவார்கள்.

### எல்லாம் பிடிக்க என்னை ஏன் பிடிக்காது?

ஏதோ ஒரு துணிச்சல் பெற்ற, சுபயோக சுபதினத்தில் காதலைச் சொல்லி அசிங்கப்பட்டு வரும் குமார்கள் காட்டும் சோகத்தைவிட நண்பர்கள் காட்டும் அறச்சீற்றம் அளவிடமுடியாதது. அது ஏற்கனவே எங்கேயோ பட்டு உணர்ந்ததன் வெளிப்பாடாக இருக்ககூடும். இந்த வகையான சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒரு பாடல் வெளிவந்தது. அது "யுத்"படத்தின் "சர்க்கரை நிலவே" என்பதாகும். பாடல் 'உனக்கும் எனக்கும் எல்லாம் பிடிக்க என்னை ஏன் பிடிக்காதென்றாய்?' என்கிற அறிவு பூர்வமான, காத்திரமான கேள்வியை முன்வைத்தது. குமார்கள் இந்த வரிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டார்கள். இதுவரை காலமும் ஆண்வர்க்கத்திற்கு நேர்ந்த அவலநிலையை தட்டிக் கேட்டதாக அப்போது 'கன்சல்டன்ட்ஸ்' ஆகியிருந்த முன்னாள் குமார்களும் உவகையடைந்தார்கள். அந்த வரிகளை எழுதிய பிரகிருதி யாரெனத் தெரியவில்லை. என்னவொரு சிந்தனை பாருங்கள்! சாதாரணமாக இப்படி யோசிக்க முடியுமா? அபத்தமான இந்த வரிகளை மேற்கோள் காட்டியே குமார்கள் ஆக்ரோசமாக கேள்வி எழுப்பினார்கள். அதானே? ஏன்னா நியாம்பா இது? நியாயப்படி பிடிச்சுத்தானே ஆகணும்?

ஆனாலும் சமூக ரீதியில், குறிப்பாகப் பெண்கள் மத்தியில் இந்தப்பாடல் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என குமார்கள் விசனமடைந்திருந்தார்கள். வழக்கம்போல 'பெண்களே இப்படித்தான்' என அதற்கும் நண்பர்களையே வதைத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறான சூழ்நிலையில் விக்கிரமனின் படங்கள் குமார்களின் காயங்களுக்கு ஒருவித ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தன என்றால் மிகையல்ல. சமயங்களில் சில பெண்களும் சேர்ந்து குமார்களை ஆதரவளித்து உற்சாகப்படுத்தினர் என்பதுதான் இங்கே உச்சகட்ட நகைச்சுவை!

### எடுபிடிக் காதலர்கள்

விக்கிரமனின் படங்களின் "சோப்ளாங்கி" ஹீரோக்களாக (உதாரணமாக 'உன்னை நினைத்து') தங்களை நினைத்துக் கொண்டனர். தான் காதலிக்கும் பெண் வேறொருவரைக் காதலிப்பதாகத் தெரிந்த பின்னரும் அந்தக் குடும்பத்து உதவுவது போல குமார்கள் தம் காதலிகளுக்கு உற்ற நண்பனாக இருப்பர்கள். ஒருகட்டத்தில் நல்ல மனம்கொண்ட "சோப்ளாங்கி" ஹீரோவை விட்டு மோசமான நபரைக் காதலித்துவிட்டதை எண்ணி காதலி மனம் வருந்துவார் என்பது குமார்களின் ஆழ்ந்த நம்பிக்கை. அத்தகைய சந்தர்ப்பத்தில் தாம் பெருந்தன்மையாக, ஒரு கனவானாக நடந்துகொள்ளவேண்டும் கூறி நட்பை மெய்ப்பிக்க வேண்டும். இதற்காகவே, நம் குமார்கள் தமது காதலிகளின் காதல் எப்போது ஊற்றிக் கொள்ளும் என உள்ளூர எதிர்பார்ப்புடன் எடுபிடியாகத் தமது பணியினை மேற்கொள்வர்.

ஆனால் நடைமுறை, சினிமாவுக்கு சம்பந்தமில்லாதது. குமார்களின் எதிர்பார்ப்பின்படியே காதலிகளின் காதல்கள் ஊற்றிக் கொண்டாலும் அவர்கள் குமார்களைப் பொருட்படுத்துவதில்லை. விவரமாக வேறொரு காதலனோ, வெளிநாட்டு மாப்பிள்ளையோ கிடைத்து அவர்கள் பாட்டுக்குச் சென்றுகொண்டாயிருப்பார்கள். குமார்களும் அதே ஏக்கப் பார்வையுடன் அலைந்துகொண்டிருந்தார்கள். ஆனாலும் உள்ளூர குமார்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கும். அதனை விக்கிரமனின் "சூர்யவம்சம்" போன்ற படங்கள் கொடுத்திருந்தன.

காதலனைக் கைவிட்டுச் செல்லும் காதலிகள், என்றோ ஒருநாள் அதற்கான தண்டனையைப் பெறுவார்கள். வருந்துவார்கள். அப்போது தாம் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும் என அடுத்தகட்டத் தயார்படுத்தலில் இருப்பார்கள். எஞ்சினியரான அவள் புருஷனுக்கு வேலை போனால் உங்களைத் காண வருவாள். அவனுக்கு உங்கள் பஸ் கம்பனியில் டிக்கெட் கிழிக்கும் வேலை வேண்டி! உண்மையில், அவனுக்கு வேலை போனால் அவன் இன்னொரு கம்பெனியில் என்ஜினியராக வேலை தேடிக்கொள்வான். டிக்கட் கிழிக்க வரமாட்டான் என்பதுதான் யதார்த்தமாக இருந்தாலும், காதல் வயப்பட ஆரம்பத்திலிருந்து தமது மூளையை ஒருவித கொழுப்புப் பதார்த்தமாகவே பேணிக் கொள்வதால் குமார்கள் இதனை உணர்ந்துகொள்வதில்லை.




சமயங்களில் பெண்கள் மிகத் தெளிவானவர்கள். உண்மையில் ஒருபெண் பட்டுணர்ந்து தான் காதலிப்பவனை விட்டு விலகும்போதே அவள் வாழ்க்கை நன்றாகச் செல்ல ஆரம்பித்துவிடுகிறது என்பதே நாம் அனுபவத்தில் கண்டது. அதனைக் குமார்கள் அன்றும் இன்றும் என்றும் புரிந்துகொண்டதேயில்லை.

### உச்சக்கட்ட அவமானம்

ஏதோ ஒருகட்டத்தில் எல்லாக் குமார்களும் ஒரு புள்ளியில் இணைந்துகொண்டுவிடுவார்கள். உண்மையில் காதலில் இருந்து ஒருகட்டத்தில் காதலிகள் சுதாகரித்து கழற்றிவிடப்படட குமார்கள், எடுபிடிகளாக நியமிக்கப்பட்டு தமக்குள்ள காதலை வளர்த்து கவிதை வரைந்து காவியக் காதலில் ஈடுபட்ட குமார்கள், காதல் விண்ணப்பப் படிவங்களை திரும்பத் திரும்ப அனுப்பிய குமார்கள் எல்லோருமே காதலியால் ஏமாற்றப்பட்ட பட்டியலில் விரும்பி இணைந்துகொள்வார்கள். இதில் இன்னொரு விசித்திர வகைக் குமார்களும் அடக்கம். சம்பந்தப்பட்ட பெண்ணுக்கே தெரியாமல் ஐம்பது மீட்டர் தூரத்தில் சைக்கிளில் துரத்திய குமார்கள் கூடத் தாங்களும் ஏமாற்றப்பட்டதாக ஏதோ ஒரு புரியாத தர்க்கத்தின் அடிப்படையில் தாங்களும் வஞ்சிக்கப்பட்டதாக அவர்களே நம்பிக்கொண்டிருப்பார்கள். அவர்களும் இந்தப்புள்ளியில் இணைவதுதான் உச்சகட்ட அவலம் எனலாம்.

இவர்களுக்காகவே ஒருபாடல் உருவாக்கி வெளியிட்டார் விக்கிரமன். பட்டி தொட்டியெங்கும் குமார்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது. குமார்கள் புத்துணர்ச்சியுடன், முக மலர்ச்சியுடன் பாடித் திரிந்தார்கள். அது, "பொம்பிளைங்க காதலைத்தான் நம்பி விடாதே!". குமார்களின் தேசிய கீதமாகவே ஆகிப்போனது. அப்போதே பெரிய சந்தேகம் ஒன்றிருந்தது. பெண்களை நம்பாமல் வேறு யார் காதலை நம்புவது? ஒரு ஆண் பெண்ணின் காதலைத்தானே நம்ப வேண்டும்? என்ன அபத்தம் இது? கொஞ்சம் ஆழமாக யோசித்தால் விவகாரமாக அல்லவா வருகிறது? உண்மையில் அப்படி இருந்தால் குமார்கள்தான் எவ்வளவு பாவப்பட்டவர்கள்? ஆண் ஓரினச் சேர்க்கையாளருக்காக உருவாக்கப்பட்ட பாடலை குமார்கள் தமக்கான தேசிய கீதமாக வரித்துக்கொண்டதுதான் இந்த நூற்றாண்டின் மகத்தான சோகம் எனலாம்.

எது எப்படியோ இன்றைய காலகட்டத்தில் ரீ.வி. சீரியல்கள் வரவேற்பறைகளை ஆக்கிரமிக்க, வன்மமும் குரோதமும் வஞ்சகமும் அதிர்வலைகளாக உருவாகி நிறைந்துள்ளதாகப் பலரும் அஞ்சுகிறார்கள். உண்மையில் நம் சமூகத்தில் அன்பும், நம்பிக்கையும் பாசமும் பெருக்கெடுக்க, ஒன்றாகக் குழுமியிருந்து படம் பார்த்துக் களித்த காலமொன்று உண்டெனில் அது இயக்குநர் விக்கிரமன் படங்கள் வெளிவந்த காலம் எனலாம். அதற்காகவே நாம் என்றென்றும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டுள்ளோம். (முற்றும்)





**தொடர்பு கொள்ளவும்**

'சொல்லுங்கள் வெல்லுங்கள்' போட்டியில் வெற்றியீட்டிய மகா இறம்பைக்குளம் வீதி, வவுனியா, பூந்தோட்டத்தைச் சேர்ந்த **மத்தியாஸ் இராஜேந்திரம்** தன்னுடைய காசோலையைச் பெற 'புதுவிதி' அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

**புதுவிதி**

107, இராச வீதி, கோப்பாய்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 493 7777

மானிப்பாய் சுதன்

# கமே கட்டிய வாங்க!!!



குமரனின் மனப்பயம், பிள்ளைகளின் பாடசாலை விடுமுறை நெருங்க நெருங்க அதிகரித்துக் கொண்டே வந்து இன்று உச்ச நிலையை அடைந்திருந்தது. பிள்ளைகளிடம் விடுமுறைக்கு, “நெடுந்தீவுக்கு குதிரை பார்க்கப்போவோம்” என்று கூறியிருந்தான். செங்கையாழியானின் ‘வாடைக்காற்று’ நாவலைப் வாசித்தபின் ஏற்பட்ட ஆர்வக்கோளாறால் கூறியதன் விளைவு: பிள்ளைகள் இருவரும் மாதாந்தக்கலண்டரில் ஒரு திகதியை குறித்துவைத்து ஆரவாரமாக காத்திருந்தனர். இன்று பிள்ளைகள் குறித்துவைத்த திகதி வந்துவிட்டிருந்தது. நெடுந்தீவுக்கு போவதில் குமரனுக்கு என்ன பயம்? ஒரு பயமும் இல்லை. ஆனால் கப்பலில் ஏறினால் வரும் சத்தியை நினைக்க இப்பவே குமரனுக்கு தலைசுற்றியது.

பிள்ளைகளுடன் போவதால் தேவையான பொருட்களை எல்லாம் குமரனின் மனைவி எடுத்துவைத்துக்கொள்ள குமரனோ தனக்குத் தேவையான சொப்பிங் பைகளை எடுத்து வைத்துக் கொண்டான்.

நெடுந்தீவுக்கு செல்லும் “வடதாரகை” காலை எட்டு முப்பதுக்கு செல்லும் என்பதால் தங்களது வீட்டில் இருந்து காலை ஆறு மணிக்கே தமது காரில் புறப்பட்டார்கள். குறிகட்டுவானை காலை ஏழு முப்பதுக்கே சென்றடைந்ததில் பரம திருப்தி அடைந்தான் குமரன். ஏனெனில், “கப்பலுக்கான வரிசையில் முன்னுக்கு நின்றுவிடலாம்” என்ற சந்தோசத்தில் நடக்ககுறிகட்டுவானில் நின்றிருந்த சிறுவர்கள் இருவர் தாமரைப்பூக்களைக் கொண்டுவந்து நீட்டினார்கள்.

“தம்பி எங்களைப்பார்க்க என்ன சிங்களவர் மாதிரியே கிடக்கு. அதைவிட நாங்கள் நயினாதீவுக்கு போகவில்லை. நெடுந்தீவுக்கு போகின்றோம்” என்றாள் குமரனின் மனைவி. அங்கிருந்த கடைத்தொகுதிகளில் பெரும்பாலும் சிங்கள மக்களைக்கவரக் கூடியதாகவே பொருட்கள் இருந்தன. சுற்றிலும் அவர்கள் நடமாட்டமே அதிகமாகவும் இருந்தமை, குறிகட்டுவானை குமரன் குடும்பத்தினருக்கு அன்னியமாகக் காட்டியது.

“அப்பா போனைத்தாங்கோ “1929” க்கு போன் பண்ண. சின்னப்பிள்ளையளைவைத்து பூவியாபாரம் செய்யிறாங்களப்பா. இதுவும் சிறுவர் துஸ்பிரயோகந்தானே” என்ற பத்து வயதான மகனை “பேசாம வாடா அதெல்லாம் நல்லூரில கற்பூரம் விற்றால்தான் பிடிப்பாங்கள். இங்கேயெல்லாம் வந்து பார்க்கக்கூடமாட்டாங்கள்” என்று கூறியவாறு குமரன் எல்லோரையும் இழுத்துக்கொண்டு ‘ஜெற்றி’யை நோக்கி விரைவாக நடந்தான்.

குறிகட்டுவான் ஜெற்றியைஅடைந்தவர்களை, “எங்க போறது” என்று சீருடை அணிந்தவன் கேட்க, குமரன் “டெல்ப்ற்றுக்கு” என்று சொல்ல, மகனோ “இல்லை நெடுந்தீவுக்கு” என்றான். “இரண்டும் ஒன்றுதான் பேசாம இரடா” என்று அதட்டியவாறு, சீருடை அணிந்தவனைப் பார்த்தான். அவனோ“டெல்ப்ற்றுக்கு போறவங்க எல்லாம் அங்க நில்லுங்க” என்று அருகில் இருந்த மடத்தைக் காட்ட அதில் உட்புகுந்த குமரன் முகத்தைச் சுழித்தவாறு வெளியில் வந்தான். அந்தளவுக்கு கழிவுப்பொருட்கள். அவற்றை நாய்கள் கிளறியிருக்க, “கப்பலில் வர வேண்டிய சத்தி இப்பவே வந்துவிடுமோ” என்று பயந்து வெளியில் வந்தவன் மடத்தின் அருகிலேயே எல்லோரையும் நிற்கச் சொன்னான்.

“ஏன் வெளியில நிற்கவேணும்?” என்ற மகனை சமாளித்தவாறே சுற்றிலும் பார்வையை சுழல விட்டான். தங்களைப்போலவே பதினைந்துபேர் நிற்பதைக்கண்டான். அவர்களுடன் கதைத்தவாறு நிற்கும்போது, சீருடை அணிந்த படைவீரன் “கமே கட்டிய வித்தராய் என்ன” (ஊர் ஆட்கள் மட்டும் வாங்க) என்றான். நின்றவர்களில் சிலர் சென்றனர். குமரன் படைவீரனிடம் சென்று “நாங்களும் போகலாமா?” என கேட்க “இல்லை இல்லை” என்றான். மீண்டும் மடத்தோரம் போய் நின்றுகொண்டான் குமரன்.

ஒரு வான் நிறைய சிங்கள மக்கள் வந்திறங்கினார்கள். அவர்களுடன் வந்த பெண், முன்னுக்கு நின்ற படைச்சிப்பாயுடன் “மல்லி” என்று ஏதோ சிங்களத்தில் கதைக்க, அப்பெண்ணுடன் வந்தவர்கள் அனைவரும் “ஜெற்றிக்கு” உள்ளே சென்றனர். உடனே குமரனின் மகன் “அப்பா நாங்களும் போவோம்” என்று சொல்ல, குமரன் பைகளைத் தூக் கியவாறே செல்ல முற்பட, “கொஞ்சம் பொறுங்க, கமே கட்டிய என்டோன, (ஊர் ஆட்கள் வரவேணும்) அவங்க ஏறியபிறகு மிச்சம் நீங்க” என்றான். “எப்ப வருவாங்கள் ஊர் ஆட்கள்” என்ற மகனுக்கு, “யாழ’ப்பாணத்தில் இருந்து இப்ப வரும் பஸ்ஸில்” என்றான் குமரன்.

“நெடுந்தீவு மக்களுக்குத்தான் முன்னுரிமையாம். அவர்கள் இல்லாவிட்டால்தான் எங்களை ஏத்துவார்களாம். பரவாயில்லை நல்லாட்சிதான்” என்றான் இவர்களுடன் நின்ற இளைஞனொருவன்.

சிறிது நேரத்தில் பொலிஸ் கார் ஒன்றும் அதன் பின்னால் பெரியதொரு வானும் அது நிறைய தென்னிலங்கை

“என்னப்பா நெடுந்தீவில சிங்கள ஆட்களும் இருக்கினமோ?” என்ற தன் மனைவியை கடுப்புடன் பார்த்த குமரன் “ஓமப்பா விஜயனுடன் கப்பலில் வந்த கொஞ்சப்பேர் கடலில் வழிதடுமாறி இஞ்ச வந்திட்டினமாம். எங்கட குவேனி மூதாட்டி மாதிரி யாரோ ஒரு புண்ணியவதி இங்கே அவர்களுக்கு வாழ்வு குடுத்தவா என்று சொல்லுகினம். அவையின்ர பரம்பரைதான் இப்ப கப்பலில் இருக்கிறவை” என்ற குமரனை விநோதமாகப் பார்த்த மனைவி “பகிடியை விட்டுட்டு சொல்லுங்கோப்பா என்றாள்”

சுற்றுலாப்பயணிகளும் வந்திறங்கினர். அவர்கள் எதுவும் கதைக்காமலே ‘ஜெற்றி’க்குள் சென்றனர். பிறிதொரு சிறிய வடிரக வானில் வந்த சிங்களப்பெண்ணொருத்தி தனது போனை சிப்பாயிடம் கொடுக்க, அவன் அந்த பெண்ணைப்பார்த்து அழகாக சிரித்தவாறே கதைத்து விட்டு அவர்களையும் உள்ளே செல்ல விட்டான்.

குமரனுடன் கூடி நின்றவர்கள் சிறிது சிறிதாக முணுமுணுக்கத் தொடங்கினர் குமரனும் சற்றுப்பொறுமையை இழந்து முன்நின்ற சிப்பாயிடம். “நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தன். விடுமுறைக்கு நெடுந்தீவு பார்க்க வந்திருக்கிறோம். நேரம் ஆகிறது உள்ளே போய் கப்பலில் ஏறலாமோ?” என்றான்.

“முதலில் சொல்லியிருக்கலாம் நீங்க ரஜே சேவய” என்று. இப்ப கப்பல் நிரம்பியாச்சு. இனி நீங்க போக ஏலாது. “பிறைவேற் வோட் கயர் பண்ணி போகலாம். அதிங்இல்லாட்டி(அல்லது) நமய மாறட்ட (9.30) குமுதினியில போங்க” என்றான்.

குமரனுக்கு தலை சுற்றியது. “என்னடா இது ஒருமணித்தியாலத்துக்கு முதலிலேயே வந்திட்டம். ஊர் ஆட்கள் ஏறியபிறகு ஏறலாமெண்டு சொன்னாங்க, ஊர் ஆட்கள் ஒரு இருபத்தைந்து பேர் கூட போயிருக்கமாட்டாங்கள்? வடதாரகையில் 125 பேர் ஏறலாம்! இவன் என்ன சொல்லுகிறான்?”

யாழ்ப்பாணத்தில் இருந்து கடைசி பஸ்ஸூம் வந்தது. அதிலிருந்து ஐந்தாறு நெடுந்தீவு மக்கள் உள்ளே சென்றனர்.

இப்பொழுது கூட்டத்தில் நின்ற இன்னொருவரும் கடுப்பேறி முன் சென்று கதைத்தார். கொஞ்சம் கடுமையாகவே கதைக்க, படைச்சிப்பாய் அங்கு நின்ற இன்னொரு படைவீரனுடன் கதைக்க, அவன் வந்து “பதினைந்து பேர் மட்டும் போகலாம் சிலவேளை இடம் இல்லாவிடில் நின்றுதான் போகவேனும்” என்றான்.

“பரவாயில்லை நின்றாவது போவோம்” என்று எண்ணியவாறு எல்லோரும் உள்ளே சென்றார்கள். கப்பலின் உள்ளே சென்றதும்தான் விளங்கியது, அவர்கள் வெளியில் நிற்கும்போது வந்த அனைவரும் வடதாரகையில் ஏறியிருப்பது.


“என்னப்பா நெடுந்தீவில சிங்கள ஆட்களும் இருக்கினமோ?” என்ற தன் மனைவியை கடுப்புடன் பார்த்த குமரன் “ஓமப்பா விஜயனுடன் கப்பலில் வந்த கொஞ்சப்பேர் கடலில் வழிதடுமாறி இஞ்ச வந்திட்டினமாம். எங்கட குவேனி மூதாட்டி மாதிரி யாரோ ஒரு புண்ணியவதி இங்கே அவர்களுக்கு வாழ்வு குடுத்தவா என்று சொல்லுகினம். அவையின்ர பரம்பரைதான் இப்ப கப்பலில் இருக்கிறவை” என்ற குமரனை விநோதமாகப் பார்த்த மனைவி “பகிடியை விட்டுட்டு சொல்லுங்கோப்பா என்றாள்”

மீண்டும் குமரன் அதே கடுப்புடன் “அடியே அவன் முன்னுக்கு கமே கட்டிய.. கமே கட்டிய.. என்றது தங்கட ஊர் ஆட்களையடி. நாங்களும் ஏதோ? என்னவோ? என்று யோசிச்சுப் போட்டம், நீ என்ன யோசிக்கிறாய்?” என்றான் சிந்தனையில் ஆழ்ந்திருந்த மனைவியைப்பார்த்து. “ஒன்றுமில்லை.., நாங்கள் உவங்களோட சேர்ந்து வாழ இயலுமோப்பா” என்றவளை வினோதமாகப் பார்த்தான் குமரன்.

இப்பொழுது கப்பலில் பெரும்பாலனவரின் முகங்களில் சிரிப்பு மறைந்திருந்தது. சிலர் இறுகக் கண்களை மூடியவாறு இருந்தனர். சிலர் வில்லங்கத்துக்கு ஏதேதோ கதைத்து தங்களது கவனத்தை திசைதிருப்பியவாறு இருந்தனர். கப்பலின் கீழ்த்தளத்தில் திடீரென மின்விசிறியும் தன் கடமையை இடைநிறுத்திய வேளையில் கப்பல் சிறிது கீழிறங்கி மேலெழ சிலரது வாய்கள் அட்ட கோணலாகி பின் சத்தியெடுக்கத் தொடங்கியிருந்தனர். குமரன் தன்னால் இயன்ற மட்டும் முயன்றும் முடியாதவனாக ‘சொப்பிங்’ பைகளை கையில் எடுத்துக் கொண்டான். பிள்ளைகளும் தொடர... “இனிமேல் கடல் பயணச் சுற்றுலாக்கள் போவதில்லை என்ற முடிவுடன் நெடுந்தீவில் காலடி வைத்தான் குமரன். •



கடந்தவாரம் இடம்பெற்ற WWE RAW போட்டி ஒன்றில் கிறிஸ் ஜெறிக்கோ மற்றும் கெவின் ஓவன் ஆகியோருடன் மோதும் றோமன் றெயி.



வெற்றிக்கான தனது Superman Punch இற்குத் தயாராகும் போது...

தொகுப்பு : சி.விமலன்

# சாதனை



இங்கிலாந்து உதை பந்தாட்ட அணி மற்றும் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி ஆகியவற்றின் தலைவரான வெய்ன் ரூனி சில தினங்களுக்கு முன்னதாக இங்கிலாந்து பிறிமீயர் லீக் போட்டிகளில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி சார்பில் அதிக கோல்கள் (250) அடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தி உள்ளார். ஸ்ரோக் சிற்றி உடனான போட்டியில் ஒரு கோலை அடித்ததன் மூலம் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். முன்னதாக மன்செஸ்ரர் யுனைற்றட் அணி சார்பாக முன்னாள் இங்கிலாந்து வீரரான பொபி சாள்ரனே அதிகபட்சமாக 249 கோல்கள் அடித்திருந்தார். 35 வயதில் அவர் நிகழ்த்திய இந்தச் சாதனையை ரூனி 31 வயதிலேயே முறியடித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு எவற்றன் அணியில் இருந்து மன்செஸ்ரர் யுனைற்றட் அணிக்கு ஒப்பந்தமாகிய ரூனி முன்னாள் முகாமையாளர் அலெக்ஸ் பேர்குசனின் அன்புக்குப் பாத்திரமான ஒருவரானார். அவருக்குப் பின் வேறு பல முகாமையாளர்களின் கீழ் ரூனி விளையாடி இருந்தாலும் ரூனியின் ஆளுமை வளர்ச்சியில் அலெக்ஸ் பேர்குசனின் வகிபங்கு காத்திரமானதாகும். முற்கள வீரராக மட்டுமன்றி மத்திய கள வீரராகவும் சிறப்பான பங்களிப்பை ரூனி அணிக்கு வழங்கியிருந்தார்.

இந்தச்சாதனையை ரூனி புரிவார் என்று எதிர்பார்த்தது தான் என்றாலும் சமீபகாலமாக இவரது ஆட்டத்திறன் குறித்த விமர்சனங்களால் போட்டியில் இவரால் முழுநேரமும் விளையாட முடிவதில்லை. பெரும்பாலும் ஆட்டத்தின் பிற்பாதியிலேயே களமிறக்கப்பட்டிருந்தார். இதனால் இந்தச் சாதனையைப் படைக்காமலேயே ரூனியின் விளையாட்டுலக வாழ்வு அஸ்தமித்து விடுமோ என்ற அச்சம் ரசிகர்களிடம் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் அவை எல்லாவற்றையும் மீறி ரூனி இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். அதேசமயம் இங்கிலாந்து அணிசார்பில் அதிக கோல்கள் (49) அடித்த பொபி சாள்ரனின் சாதனையையும் சில மாதங்களுக்கு முன்னர் ரூனியே முறியடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கைகொடுங்கள்

**1987**ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் நடைபெற்ற நான்காவது உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் கிண்ணத்தை வென்ற அவுஸ்ரேலிய அணியினருக்கான பதக்கங்கள் வழங்கும் நிகழ்வு இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது. இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை 7 ஓட்டங்களால் வென்று உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலியா முதன்முறையாகக் கைப்பற்றி இருந்தது. உலகக் கிண்ணப் போட்டிகளில் வீரர்களுக்கான பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கும் முறை அன்றைய காலகட்டத்தில் நடைமுறையில் இல்லாதிருந்தது.


சென்ற வருடம் ஜுலையில் நடைபெற்ற ஐசிசி பொதுக்குழுக் கூட்டத்தில் கிரிக்கெட் அவுஸ்ரேலியா சார்பில் மேற்படி அவுஸ்ரேலிய அணி கிண்ணம் வென்று 30 ஆண்டுகளை நிறைவு செய்யவுள்ளதால் வீரர்களுக்குப் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்குச் செவிசாய்த்த ஐசிசி சிட்னியில் நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டியின் இடைவேளையின் போது அவ்வணியில் விளையாடிய 14 வீரர்களையும் அணிநிர்வாகத்தைச் சேர்ந்த மூவரையும் கௌரவப்படுத்தி உள்ளது.

வீரர்களை வாழுங்காலத்தில் கௌரவிப்பது வரவேற்கப் படவேண்டியது தான் என்றாலும் பல முன்னாள் வீரர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கி நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதும் அண்மைக்காலத்தில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சமீபத்தில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியினர் 20வருடங்கள் பூர்த்தியானதையிட்டு கண்காட்சிப் போட்டியொன்றை நடத்தியுள்ளனர்.

அதில் கிடைத்த வருமானத்தின் மூலம் அறக்கட்டளை ஒன்றை ஸ்தாபித்து அவர்களுக்கு நிதியுதவி வழங்கி உள்ளனர். எனவே பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஐசிசியும் கௌரவிப்போடு மாத்திரம் நில்லாமல் மேற்படி முன்னுதாரணத்தைப் பின்பற்றி ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயம் என்றே தோன்றுகிறது.



# "திரும்பி வந்திட்டேன்னு சொல்லு"



இம்முறை நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸின் ஆடவர் மற்றும் மகளிர் இறுதிப் போட்டிகள் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்தன. கடந்த இரண்டு வருடங்களில் ஆடவர் ரெனிஸ் போட்டியில் ஆதிக்கம் செலுத்தியவர் சேர்பியாவின் ஜோகோவிச். ஆனாலும் பயிற்சியாளர் பொறிஸ் பெக்கரை நீக்கிய பின்னர் 2016 விம்பிள்டன் தொடர், 2016 ஒலிம்பிக் போட்டி, 2016 யுஸ் ஓபன் தொடர் என்பவற்றில் அவர் கிண்ணங்களை இழந்து பின்னடைவைச் சந்தித்திருந்தார். ஆனாலும் எந்த நேரத்திலும் எழுச்சி அடையக்கூடிய வீரராகவே அவர் இருந்தார்.

அதுபோல அண்டி முரே 2016 விம்பிள்டன் கிண்ணம், 2016 ஒலிம்பிக்போட்டியில் தங்கம் வென்று அண்மையில் ஆடவர் ரெனிஸ் தரப்படுத்தலில் முதலாமிடத்துக்கும் வந்திருந்தார். ஆனாலும் இவர்கள் இருவருமே இத்தொடரின் ஆரம்பத்திலேயே வெளியேறியதனால் கிண்ணத்தை யார் கைப்பற்றுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகமாகியது. 2012 விம்பிள்டன் தொடருக்குப் பின்னர் றோஜர் பெடரரும் 2014 பிரெஞ் ஓபன் தொடருக்குப் பின்னர் நடாலும் எந்தவொரு கிராண்ட் ஸ்லாம் பட்டத்தையும் கைப்பற்றவில்லை. அதிலும் கடந்த ஆறுமாதம் காயம் காரணமாக பெடரர் விளையாடவும் இல்லை. எனவே எதிர்பார்ப்புக்குரியதாக மாறிய இறுதிப்போட்டியில் பிரயத்தனத்தின் மத்தியில் பெடரர் தனது 18ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.

அதுபோல மகளிர் ரெனிஸ் போட்டிகளிலும் வீனஸ் வில்லியம்ஸ் 8 வருடங்களின் பின்னர் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி இருந்தார். வில்லியம்ஸ் சகோதரிகள் இறுதிப்போட்டியில் சந்திப்பது இது ஒன்பதாவது தடவை என்ற போதும் இதில் 7 தடவைகள் செரீனாவே வென்றுள்ளார். இம்முறை செரீனா அவுஸ்ரேலிய ஓபனை வென்று 23ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைப் பெற்றதன் மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஜேர்மனியின் முன்னாள் வீராங்கனையான ஸ்ரெபி கிறாபின் உலக சாதனையை முறியடித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 04.02.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.